
# இந்து தீபம்



இந்து மன்றம்
கொழும்பு பல்கலைக்கழகம்

230.6
இந்து
SLIPR

# தமிழ்மொழி வாழ்த்து

1. வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி
   வாழிய வாழிய வே!
2. வான மளந்த தனைத்தும் அளந்திடும்
   வண்மொழி வாழிய வே!
3. ஏழ்கடல் வைப்பினுந் தன்மணம் வீசி
   இசை கொண்டு வாழிய வே!
4. எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!
   என்றென்றும் வாழிய வே!
5. சூழ்கலி நீங்கத் தமிழ்மொழி ஓங்கத்
   துலங்குக வையக மே!
6. தொல்லை வினை தரு தொல்லை யகன்று
   சுடர்க தமிழ்நா டே!
7. வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!
   வாழ்க தமிழ்மொழி யே!
8. வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
   வளர்மொழி வாழிய வே!



நன்னீராடும் நானப்பெண் நறுமுகையின்
ஐந்தாவது அகவையாக
மலரும்

# இந்து தீபம்

கொழும்பு தமிழ்ச் சங்கம்
நூலகம் 06-08-99

இந்து மன்றம்
கொழும்பு பல்கலைக்கழகம்

27128

சரஸ்வதி மண்டபம்
பம்பலப்பிட்டி
கொழும்பு



# HINDU SOSIETY
# UNIVERSITY OF COLOMBO

## OFFICE BEARERS 98/99

| | |
|---|---|
| Patron | : Prof. Savithri Goonasegara |
| Seanior Treasurer | : Prof. (Mrs). Y . Rasanayagam |
| President | : Mr. T. Umashanger |
| Vice President | : Mr. V. Ramakamalan |
| Joint Secretary | : Mr. Krishna Kalaichelvan |
| | Mr. K. Kamalajini |
| Junior Treasurer | : Mr. K. Vinayagamoorthy |
| Editor | : Mr. R. Rameshshangar |
| Sub Editor | : Mr. M. Yohenthiran |
| | : Mr. S. Subash |
| Committee Members | |
| | Mr. N. Sathiyasuthan |
| | Mr. A. Malaravan |
| | Mr.S.Ravindran |
| | Mr .K.Pradeepan |
| | Mr .Mpradeepan |
| | Mr.K.Sutharshan |
| | Miss.K.Sivathanuja |
| | Miss.K.Subashini |
| | Mr.P.Manoharan |
| | Miss.S.Thevaki |

**CONQUER YOURSELF AND THE WHOLE UNIVERSE IS YOURS.**

*With Best Complements from*

## FANCY MUSEUM

DEALEARS ON FANCY, GOODS, TOYS, EVERSILVER AND GIFTS

253 B, GALLE ROAD,
WELLAWATHA COMPLEX,
TEL : 580216
FAX : 590211

---

*With Best Complements from*

## ASBESTOS CEMENT INDUSTRIES(LTD)

175, SRI SUMANATISSA MAWATHA,
COLOMBO - 12.
PHONE : 448115

FACTORY
RATMALANA,
PHONE : 737417

## HINDU SOCIETY
## UNIVERSITY OF COLOMBO
## OFFICE BEARERS 98/99



SEATED (LEFT TO RIGHT) : S.Thevaki, K.Kamalajini(Joint Secretery), Krishna Kalaichelvan(Joint Secretary), V.Ramakamalan(Vice President), Prof. Savitri Goonasekere(Vice Cancellor), T.Umashankar(President), R.Ramesh Shankar(Editor), K.Sivathanuja, K.Subhashini.

STANDING (LEFT TO RIGHT) :Manoharan, M.Yogendran(Sub Editor), B.Ravindran, N.Sathiyasuthan, K.Sutharshan, M.Pradeepan, A.Malaravan, S.Subash(Sub Editor)

Absentee : K.Vinayagamoorthy( Treasurer)

**Message from the VICE-CHANCELLOR**

It is with pleasure that I write this message to the souvenir published by the Hindu Society of this University to commemorate of their Annual Cultural Festival, Kalai Vizah.

The University of Colombo is a multi-ethnic and multi-religious community . In this community there are student associations set up to promote the interests of different groups. The Hindu Society is one such association which plays a significant role , along with other similar associations , in promoting an understanding of culture and also promoting goodwill , amity and understanding among various communities by organizing cultural festivals and other activities, while at the same time promoting their own cultural interests.

The annual cultural festival organised by the Hindu Society is indeed a useful event and will I am sure contribute an appreciation of all our cultures within the university system, I wish the association every success in its activities.

**Professor Savitri Goonesekere**
**Vice-Chancellor**

தீபத்தை ஏற்றி ...........

இந்து மன்றம், இந்து சமயத்தின் கலைவடிவங்கள் அழியாது பேணும் இகழ் விளக்கு. அதன் ஒளியால் தெரித்து ஒளிரும் ஓர் ஒளிப்பொட்டு இந்து தீபம்.

இறிவுச்சுடர் ஏற்றி அறியாமை அகற்றும் அரும் பெரும்பணி அதன் கடன். அவ்வகையில் அகவை ஐந்தில் எழுந்து நிற்க முயலும் பச்சிளங் குழந்தை நம் இந்து தீபம்.

எதிர் காலச் சிற்பிகள், அறிவுச் செம்மலடகள், இலக்கிய வேந்தர்கள், பன்மொழிப் புலவர்கள் இந்து மதம் பற்றி என்ன நினைக்கின்றார்கள் என்பதனையும் தமிழ் கலை கலாச்சார பணிபாட்டு விழுமியங்கள் எப்படி பேணிப்பாதுகாக்கப்படவேண்டும் என்பதனையும் எடுத்து இயம்புவதற்கு ஓர் கலாச்சார ஊடகமாக இந்து தீபம் விளங்குகிறது.

இந்து மக்களிற்கு ஆதரவளிக்கும் வணிகப்பெருமக்களை இனங்காட்டி மக்களுக்கு அவர்களை அடையும் வழியைக் காட்டுவதிலும் தீபம் ஓர் முன்னோடியாக விளங்குகிறது.

போட்டிகளில் வெற்றி வாகை ஆடும் மாணவர்களளது திறமையான ஆக்கங்களைத் தாங்கி வருவதால் அது ஓர் ஊக்குவிப்பு பணியையும் புரிகின்றது.

பெருமக்களே! சான்றோர்களே !

தமிழுக்கும், இந்து மதத்திற்கும் அரும்பாடுபடும் 'பெரியவர்களுக்கும' ஆதரவு அழிப்போம். அதன் படி தமிழுக்குத் தொண்டு செய்வோம்.

இம்மலரகத்தில் பங்கு கொண்ட, ஆதரவும் அரவணைப்புந் தந்த அனைத்து ஆவலர்களுக்கும் முதன்மையான நன்றியறிதலைத் தெரிவிப்பதில் பேருவகை கொள்கிறேன்.

"எம் கடன் பணி செய்து கிடப்பதே"

இதழ் ஆசிரியர்
இரா. இரமேஷ்சங்கர்.

## பெரும் பொருளாளரிடமிருந்து

கொழும்பு பல்கலைக்கழக இந்து மாணவர் சங்கத்தின் கலை விழாவையொட்டி வெளிவரும் இதழுக்கு மீண்டும் செய்தி அளிக்க வாய்ப்பு கிடைத்தது பற்றி பெரும் புளகாங்கிதம் கொள்கின்றேன்.

தமிழ் பண்பாட்டையும், சைவ ஒழுக்கங்களையும் கடைப்பிடிக்கும் பாங்கு பற்றி வருடம் தோறும் அறிவொளி பரப்பிவரும் இந்து தீபத்தின் வளர்ச்சி கண்டு உளம் களிக்கின்றேன்.

பழந்தமிழர் போற்றி வளர்த்த முத்தமிழையும் கொண்டமைந்ததாக இம்முறை கலை விழா அமைக்கப்பட்டிருப்பதைக்கண்டு தமிழ் கலை வடிவம் சாகாது தொடர்ந்து வளரும் என்பதனை கண்டு கொள்கின்றேன். இந்து கலைச் சேவைகளின் விளக்கத்தலங்களாக ஆலயங்கள் விளங்கி வந்திருக்கின்றன. அவ்வகையிலே வருடந்தோறும் ஒவ்வோர் ஆலயங்களினதும் திருச்சிறப்பை அறிந்து கொள்வதனை கண்கூடாக காண்கின்றோம் .

தமிழ் இந்து மாணவர்கள் இந்து சமயத்துக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து, தெளிந்து உலகத்திற்கு விளக்குபவராகட்டும்

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றத்தின் வளர்ச்சியை ஆதிமுதல் கண்காணித்து வரும் நான் உங்கள் வளர்ச்சியை கண்டு உளம் பூரிக்கின்றேன்.

**'மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்'**

பேராசிரியை
திருமதி . யோ. இராசநாயகம்.

*With Best Complements from*

GNANAMALAR STORES

NO. 02/02 A WOLFENDHAL STREET
COLOMBO 13.

அடுத்த ஆயிரமாவது ஆண்டை உரசப்போகும் உங்களுக்கு.......

இனிய நண்பர்களே!

இறைமகன் யேசுவின் நாமத்தில் வாழ்த்துகிறேன். 2000 ஆண்டிற்குள் பயணம் செய்யப்போகும் நாம் உலகத்திலும் ஒரு புதிய உற்சாகத்தைக் காணுகிறோம். உற்சாகமும் உத்வேகமும் மாத்திரம் போதாது உண்மையும் வேண்டும். உண்மை என்பது உள்ளதை உள்ளபடி காணல். உலகத்தை மாயையாகக் காணாமல் உள்ளபடி காண வேண்டுமானால் ஒருவன் தன்னை அறியவேண்டும். கடவுள் ஒருமுறை உலகத்திற்கு வந்தாராம், அவரைக்கடவுள் என்று கண்டு கொண்ட சிலர் அவரைத்துரத்தி அதுவேண்டும் இதுவேண்டும் என்று கேட்க ஆரம்பித்துவிட்டார்கள், அவர் அங்கும் இங்கும் ஓடி ஒரு கோயிலுக்குள் ஓடினார், அங்கும் மக்கள் கூட்டம். கடைசியாக அவர் மனிதனுடைய இதயத்தில் குடிகொண்டார் ஏனென்றால் அங்கு அவன் அவரைத் தேடுவதில்லை நாம் எம் இதயத்தை ஆராய்ந்து பார்ப்போம் அங்கே இறைவனைக் காணலாம்.

உள்ளத்தில் உள்ளானடிஅது நீ
உணர வேண்டும் எடி
உள்ளத்தில் காண்பாயெனில்
கோயில் உள்ளேயும் காண்பாயெடி
நீங்களே இறைவனில் ஆலயம்"

அருள்திரு. ஐசாக். செல்வரட்ணம்,
86, விவேகானந்தமேடு,
கொழும்பு-13.

அடுத்த ஆயிரமாவது ஆண்டை உரசப்போகும் உங்களுக்கு..........

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றம் ஆண்டு தோறும் 'இந்து தீபம்' மலரை வெளியிடுகின்றது என்பதை நான் அறிந்து கொண்டேன். அதன் இவ்வாண்டிதழில் 'மிலேனியம்'' என அழைக்கப்படும் எதிர்வரும் ஆண்டை வரவேற்கிறார்கள் என்பதனை தற்போது கண்டுகொண்டேன். இன்று முழு அகிலமுமே அடுத்த ஆயிரமாவது ஆண்டை வரவேற்கத் தயாராகிக்கொண்டிருப்பதுடன் அதன் வரலாற்று முக்கியத்துவம் தொடர்பானதாகவும் அதில் நிகழவுள்ள முக்கிய நிகழ்வுகளைப்பற்றியதுமான விவாதங்கள் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளன.

இந்துக்களைப் பொறுத்தவரையில் படைப்பு என்பது ஆதியும் அந்தமும் இல்லாது தொடர்ந்து நடைபெறும் ஒரு நிகழ்வாகும். ஆண்டுகள் ஒவ்வொன்றும் மலரலாம் மறையலாம்: அத்துடன் அது தன்னகத்தே பல ஆக்கபூர்வமான நல்ல நிகழ்வுகளையும் அழிவு சார்ந்த நிகழ்வுகளையும் கொண்டமைந்தது. ஆனால் இதன் பின்னணியில் வலுவான நோக்கமும், முக்கியத்துவமும் உள்ளது. அதன் நோக்கமானது உலகின் ஆறறிவு ஜீவராசியான மனிதனை சுதந்திரமானவனாகவும், முழுமையானவனாகவும் ஆக்குவதாகும். இந்த நோக்கமானது நிறைவேறாது போகும் சந்தர்ப்பத்தில் படைப்பு அர்த்தமற்றதாகிவிடுகின்றது. அதன் முக்கியத்துவத்தையும் இழந்து விடுகின்றது.

பரஸ்பர புரிந்துணர்வு கனவாகிவிட்ட இந்நாட்களில் உலகம் மிகப்பெரும் அழிவுப்பாதையை நோக்கி உருண்டோடுகின்றது. இவ்வழிவில் இருந்து மனிதனைக் காப்பாற்றி ஒப்பேற்ற ஒரேயொரு பிரகாசமான மார்க்கம் உண்டு. அஃதாவது மனிதகுலத்தின் ஒவ்வொரு அங்கத்தவரும் இன, மத, மொழி பேதம் மறந்து நாங்கள் அனைவரும் ஒரே குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்ற மனப்பாங்கை வளர்த்துக்கொள்வதாகும். இதைப்பின்பற்றும் ஒவ்வொரு ஆன்மாவும் சுபிட்சமான உலகைக் காணும் அரிய வாய்ப்பினை பெற்றுக்கொள்ளும் என்பது திண்ணம்.

மனிதன் அடுத்த ஆயிரமாவது ஆண்டின் நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கப்போகிறானா? அல்லது அடுத்து மலரும் புதிய ஆண்டு மனிதகுலத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கப்போகின்றதா?

நாம் அனைவரும் இது பற்றி அமைதியாகவும் ஆழமாகவும் சிந்தித்து நல்ல முடிவு ஒன்றை எடுப்போமாக!

கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றத்தினரது அளப்பரிய சேவைக்கு எனது பாராட்டு பூக்களை காணிக்கையாக்குகிறேன்.

சுவாமி ஆத்மகனானந்தஜி
இராமகிருஷ்ண மடாலயம்,
40, இராமகிருஷ்ண வீதி,
கொழும்பு – 06.

*With Best Complements from*

# T.R.J BUILDERS (PVT) Ltd

We have started construction of Luxury apartments at
40, Rudra Mawatha
Colombo - 06.

This project is close to hospitals, bank, Schools, Galle Road , Cargills super market etc.

It consists of 3 roomed apartments and 2 roomed apartments

**# 3 roomed apartments 1050 Sq. Ft. --- from Rs. 31.5 lakhs**
**# 2 roomed apartments 800 Sq. Ft. --- from Rs. 23.5 lakhs**

For further details contact

**78/1, Fussels Lane,**
**Colombo - 06.**
**Tel No : 556495, 504124, 077 340289.**

*With Best Complements from*

# SHANTHI VIHAR (PVT) LTD

G.FERDINAND

**FOOD AND BEVEARAGE MANAGER**

**NO. 3 HAVELOCK ROAD,**
**COLOMBO - 5,**
**SRILANKA,**
**TEL: 580224**

PAGER CENTRE : 575788
PAGER NO. 7693

*With Best Complements from*

# MOBITEL

NOW YOU'RE TALKING

***CALL OUR CUSTOMER SERVICES ON***
***071 755777***

தலைவரிடமிருந்து.........

கொழும்பு பல்கலைக்கழக இந்துமன்றத் தலைவர் என்ற முறையில் என்னுடைய செய்தியை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். எமது மன்றம் ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகிவிட்டன. அந்தவகையில் ஒரு புதிய பரிணாமத்தை ஏற்படுத்தவேண்டும் என்று நான் பதவியேற்ற காலம் முதல் தீர்மானித்துக்கொண்டேன். அதன் எதிர்வொலிதான் இம்முறை கலைவிழா.

பல்கலைக்கழக மாணவர்கள் நாளைய சமுதாயத்தை வழிநடத்த வேண்டியவர்கள் என்று பலரும் கூறிக்கொள்கின்ற போதும் உண்மையில் பல்கலைக்கழக மாணவருக்கும் சமுதாயத்திற்கும் பரஸ்பரம் சீரான தொடர்பாடல் இல்லை. இதுவரை பல்கலைக்கழக செயற்பாடுகள் ஒரு குறுகிய வட்டத்தில்மாணவரின் விழாவாகவே அமைந்து வந்தது. ஆனாலும் கடந்த 4 அணடுகளாகப் பெற்ற அனுபவ முதிர்ச்சி இம்முறை எம்மை புதிய பரிணாமத்தில்மிளிர வைக்க காரணமாகியுள்ளது.

இவ்விழாவில் பல்கலைக்கழகம், இலக்கிய உலகின் அறிஞர்கள் பலர் பங்குபற்றுகிறார்கள். இதனால் நாம் இவ்வறிஞர்களின் அறிவியல் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதுடன் சமுதாயமும் எங்களின் திறமையை இனங்கண்டு கொள்கிறது.

பல்கலைக்கழக வரலாற்றிலே முதன்முறையாக இப்படிப்பட்ட விழா அமைவது குறிப்பிட வேண்டிய ஒன்று. மன்றச் செயற்பாடுகளை செவ்வனே செய்வதற்கு பல்கலைக்கழக மாணவர் அனைவரினதும் ஒத்துழைப்பும் உறுதிப்பாடுமே துணைநின்றன.

இறுதியாக எமது இந்துமன்றச் செயற்பாட்டை இனிதே முன்னெடுத்து செல்ல எனக்கு ஊக்கம் கொடுத்து ஆலோசனை தந்துதவிய அனைத்து நெஞ்சங்களினதும் தாள் பணிந்து முடிக்கிறேன்.

நன்றி

**த. உமாசங்கர்**
**தலைவர்**
**இந்துமன்றம்**

# ஒளி படைத்த கண்ணினாய் .....

*அன்புடையீர்*

இன்னும் நான்கு மாதங்களில் புதிய நூற்றாண்டு என்கின்றனர். இரண்டாயிரமாம் ஆண்டு பிறக்கப்போகின்றது, மனிதகுல மேம்பாட்டின் அடுத்த படிகளில் ஏறும்நேரம் என்கின்றனர். ஆனால், நாங்கள் .......

அகதியானதன் இன்னொரு வருட அதிகரிப்பு மட்டும்தான் நடக்கின்றது. இடுப்பில் கோவணம் மட்டுமே அணிய வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்றோம்.

*நெஞ்சு பொறுக்குதில்லையே – இந்த*
*நிலை கெட்ட மனிதரை நினைத்து விட்டால்,*
*கொஞ்சமோ பிரிவினைகள் – ஒரு*
*கோடி என்றால் அது பெரிதாமோ?*

என்று பாரதி எமது தமிழ்ச்சாதியை அறிந்து வைத்தே பாடி வைத்துள்ளான் போலுள்ளது. எம்முள் எத்தனை பிளவுகள், பிரிவுகள், கொள்கை வேறுபாடுகள். இவ்வளவு அழிவுகள் துயரங்களைச் சந்தித்த பின்பும் நாம் ஒன்றுபடும் எண்ணத்தில் இல்லையே. பழையவை கழியட்டும், இளைஞர்களே நாளைய சமுதாயத்திற்கு எமது கலாசாரம், பண்பாடு, எம்உயிரிலும் மேலான தமிழ்மொழி ஆகியவற்றை எந்நிலையில் கையளிக்கப் போகின்றோம்? இற்றுப்போய், அழிந்து, உருக்குலைந்துபோன தமிழ்மொழியையும் கலாச்சாரத்தையுமா நாம் கொடுக்கப்போகின்றோம். தயவு செய்து சிந்தியுங்கள் நம் தாய்மொழியையும் கலாச்சாரத்தையும் பாதுகாக்கும் தார்மீக பொறுப்பு இன்றைய இளைஞன் ஒவ்வொருவனுக்கும் உண்டு.

எமது சமூகம் பற்றி அக்கறைப்படுவதற்கு பல்கலைக்கழக மாணவர்கள் என்ற ரீதியில் தார்மீக ரீயான பொறுப்பும் உரிமையும் எமக்கு உண்டு நாம் வரலாற்றின் தீர்க்கமான கட்டத்தில் வாழ்கின்றோம் எனவே எமது கடமைகளை சரியான முறையில் நிறைவேற்ற வேண்டும். இது ஓர் ஆயுள் பரீட்சை நாம் சித்தியடைந்தே ஆக வேண்டும்.

ஒளிபடைத்த கண்ணோடும், உறுதி படைத்த நெஞ்சத்தோடும் இன்றைய இளைஞர் சமுதாயம் எழவேண்டும்.

***"உலகின் எல்லா திசைகளில் இருந்தும் நல்ல விஷயங்கள்***
***நம்மை வந்து அடையட்டும்"***

– இது ரிக்வேத சுலோகம் ஒன்றின் பிரார்த்தனை

*"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச்செல்வங்கள்
யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் "*

– இது தமிழைச் சீரமைக்க பாரதியார் கூறிய யோசனை

மாறிவரும் காலத்திற்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொண்டு வளர்ச்சி அடையாத எந்த சமூகத்தையும் கலாசார சூழலையும் உயிர்ப்புடன் இருப்பதாக கருதமுடியாது. ஒரு சூழலிற்கும் காலத்திற்கும் இடையே இடைவெளி இல்லாமல் இருக்கவேண்டும் என்றால் அந்தச் சூழலிற்கும் வெளி உலகிற்கும் இடையே இடைவெளி இல்லாமல் இருக்க வேண்டும்.

தமிழ்கலை இலக்கியச் சூழலைப் பொறுத்தவரை வெளிஉலகுடன் அதற்கு ஆரோக்கியமான தொடர்பு இருந்ததைப் பழைய நூல்கள் காட்டுகின்றன. இராமாயணம், மகாபாரதம் போன்ற இதிகாசங்களை முதலில் தன்மொழிக்கு கொண்டு வந்தது தமிழ்தான். இடையில் ஏற்பட்ட தேக்கத்தை உடைத்தபடி முன்னோக்கிப் பாய்கிறது பாரதியின் வீச்சு. எனவே இவ்வாறானதொரு வேகம், உயிர்ப்பு, ஊக்கம் இன்றைய இளம் சமுதாயத்திற்கு ஏற்பட வேண்டும்.

இப்பெரும் முயற்சியின் சிறு ஆரம்பமாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் தமிழ் மாணவ சமுதாயத்தினால் தரம் வாய்ந்த நிகழ்ச்சிகள் கலைவிழா 99' இல் வழங்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் இந்து தீபம் மலர் சமயத்திற்காக மட்டுமல்லாது தமிழிற்காகவும் தற்போதைய தமிழ்ச் சூழலிற்காகவும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

இப்பெரும் முயற்சிகளில் பங்கெடுத்த ஊழியர் என்ற வகையில் மகிழ்ச்சியும், பெருமையும் கொள்கின்றோம்.

*நன்றி*

***இங்ஙனம்,***
***அன்புடன்,***

**கிருஷ்ணா கலைச்செல்வன்,**
**க.கமலாஜினி**
**இணை செயலாளர், இந்து மன்றம்**

# திருமுறைகள் தொடரட்டும்

**கம்பவாரிதி இ. ஜெயராஜ்**

முன்னைய பழமைக்கும் பழம்பொருளாய்ப் பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய் என்றும் நின்று நிலைப்பது சைவ சமயம்.

நம் சிவனைப்போலவே சைவமும் முதலும் முடிவும் இல்லாதது.

எழுதாமறை எனப்படும் வேதத்தைச் செய்தவன் இறைவனே என்பது சைவர்கள் முடிவு.

வேதத்தின் தொடக்கம் யாரும் அறியாதது.

வேதம் இறைவாக்கியமென ஒத்துக்கொண்டாலும் மற்றைய மதத்தவர்கள் போல் அதுவே முடிந்தமுடிவென்றோ, அதற்கு மேல் வேறுநூல் பிறத்தல் தவறென்றோ சைவர்கள் கருதவில்லை.

இதனால் வேதங்கள், ஆகமங்கள், புராணங்கள், இதிகாசங்கள் எனவும் தோத்திரங்கள், சாத்திரங்கள் எனவும் நம் சமயநூல் வரிசை முடிவின்றி நீண்டது.

"இறைவாக்கின்பின் மனிதவாக்குகள் ஏற்றுக்கொள்ளப்படலாமா " என்ற கேள்விக்குத் தெரிவான விளக்கத்தோடு "ஆம் " எனப் பதிலிறுத்து. காலம் கடந்து நிற்பது நம் சைவத்தின் பெருமை.

"இல்லது பிறவாது " என்ற சற்காரிய வாதம் நம் சைவத்தின் அடிப்படை.

இந்நாளில் மனிதர்களாகத் தோன்றியோர் பாடியவையும், சூக்குமமாய் "வெளிப்படாமல் நின்ற மறை பொருளே " எனவும் காலத்திற்குகந்த வகையில் இறைவனே அப்பொருள்களை அநுபூதிமான்கள் வாய்வழிவெளிப்படுத்தினான் எனவும் சைவர்கள் ஏற்றுக் கொண்டால்..... சைவ நூல் வரிசை பல்கிப் பெருகிற்று.

உடலையும் உயிரையும் இணைத்து நிற்கும் சுத்தமாய தத்துவமாகிய சொற்பிரபஞ்சத்தின் காரியமாய், மூலாதாரத்தில் சூக்குமமாய் பிறந்து தூலவைகரியாய் விரிந்தவாக்கினைத் தம் ஆத்ம அனுபவத்தால் மீண்டும் மூலாதாரத்தில் ஒடுக்கி இருவினை ஒப்பெய்தி சிவானுபவம் பெற்று, அதன் பயனாய்ச் சிவவாக்கையே தம் வாக்கிய சீவன் முத்தர்களின் வாக்கை இறை வாக்கியமென விளங்கிக் கொண்டது நம் சமயம்.

அதனால் பின் வந்த நூல்களும், முதல் நூலாகிய வேதத்திற்கு ஒப்ப நம் சைவத்தில் மதிக்கப்பட்டன.

கால அளவை நிராகரிக்கப்பட்டு, கருத்தளவை கொண்டே நூல்கள் மதிப்பிடப்பட்டன.

" தொன்மையவாம் எனும் எவையும் நன்றாகா பின்பு
தோன்றிய நூல் எனும் எவையும் தீதாகா "

எனும் சந்தானகுரவர் உமாபதிசிவாசாரியாரின் கூற்று நம் சிந்தனைத் தெளிவிற்கோர் சான்று.

வேதமுடிவுகளிற்கு ஒப்ப அவற்றை விரித்துச் சொல்லும் பிற நூல்களும் நம் சைவர்களால் ஏற்றுப் பூஜிக்கப்பட்டன. இச்சிந்தனை நம் தமிழ் மொழிக்கு உரியது. நூல்களை முதல், வழி, சார்பென மூவகையாகப் பிரித்து கருத்தொற்றுமையால் அவை ஒன்றொடொன்று தொடர்புபடும் நிலையை வரைபு செய்தது நம் தமிழ் இலக்கணம்.

தமிழிலக்கணமும் முதனூல் செய்தவன் இறைவனே என்று வலியுறுத்துகிறது.

" வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும் "

என்பது தொல்காப்பியம். சைவமும் தமிழும் பிரிக்க முடியாதவை என்பதற்கு இக்கருத்தொற்றுமையும் ஒரு தக்க சான்று.



இவ்வாறு பின் வந்த ஞானியர், அவர்தம் வாக்குகள் என அனைத்தையும் தகுதிகண்டு ஏற்றுக்கொள்ளும் தன்மை பெற்றதாலேயே தனை அழிக்க வந்த பிற சமயங்களையும் அவற்றின் கருத்துக்களையும் உள்வாங்கி, அழிக்க வந்தவை அழிந்து போக மாறாத பெருமையுடன் நம் சைவம் நின்று நிலைக்கின்றது.

" அப்பாலும் அடிசார்ந்த அடியார்களுக்கும் அடியேன்" எனும் சுந்தரர் வாக்கும் நாத்திகத்தையும் புறப்புறச் சமயமாய் ஏற்றுக்கொண்ட சிந்தனைத் தெளிவும் நம் சைவத்தின் " ஏற்றுக்கொள்ளும" தன்மைக்கோர் தக்கசான்று.

## இடையில் வந்துற்ற இடர் : –

இவ்வாறு தெளிந்த சிந்தையுடன் தொடர்ந்த நம் சைவச்சிந்தனை நிர்வாகமயப்படுத்தப்பட்ட பிற சமயங்களின் வருகையாலும், அவற்றின் திட்டமிட்ட உலகியல் வளர்ச்சியினாலும் பாதிப்புற்றது.

நம் சைவத்தின் பாரம்பரிய சிந்தனைக்கு முரணான எல்லைப்படுத்தல் வேண்டும் எனும் தீமை தரும் புதிய சிந்தனை, சைவத்தின் மேல் கொண்ட அக்கறையாலும், தெளிவின்மையாலும் சில சைவர்களிடம் உதித்தது.

மற்றைய சமயத்தவர்கள் போல் வழிபாட்டுச் சீருடை குறித்த நாளில் ஆலய வழிபாடு, சமயத் தலைமைப்பீடம், பயிற்றப்பட்ட அருள் வெளிப்பாட்டு முறை என்பவையோடு, சமய நூல்களை எல்லைபடுத்தும் சிந்தனையும் வெளிப்பட்டது.

இப்புதிய சிந்தனையானது நம் சமயப்பாதையில் ஏற்படுத்திருக்கும் ஒரு வகைத் தேக்க நிலையைச் சுட்டிக்காட்டுவதே இக் கட்டுரையின் நோக்கமாகும்.

## தோத்திரங்களின் உதிப்பும், திருமுறைத் தொகுப்பும் :–

நம் சைவநூல் வரிசையில் " தமிழ் வேதம" என்று போற்றப்படுபவை தோத்திரங்களாக அமைந்த திருமுறைகள். இவை அநுபூதிமான்களால் ஆக்கப்பட்டவை. வேதத்தின் உட்பொருளைத் தெரிவிப்பவை. இவை வழிபட்டோர்க்கு அருளையும, அற்புதங்களையும் விளைவித்தன. இத்தகைய பெறற்கரிய பல தோத்திர நுல்கள் நம் சைவ உலகில் தோன்றிச் சிதறிக்கிடக்கின்றன.

இவற்றை தொகுத்துப்பாதுகாக்க வேண்டிய தேவையை உணர்ந்தான், நம் சைவத்திற்கும் தமிழிற்கும் அரும்பெரும் தொண்டாற்றிய மன்னன் இராஜராஜசோழன். சிதறிக்கிடந்த தோத்திர நூல்களைத் திருமுறைகளாகத் தொகுப்பிக்க வேண்டும். என எண்ணிணான் அவன்.

அநுபூதிநூல்களைத் தேர்ந்து தொகுப்பதில் உள்ள சிரமத்தை அறிந்த அவன் அச்சிவகாரியத்தைப் பொல்லாப்பிள்ளையாரிடம் பாடம் கேட்ட நம்பியாண்டார் நம்பி எனும் அநுபூதிமானிடமே ஒப்படைத்தான்.

இராஜராஜசோழனின் வேண்டுகோளைச் சிவகட்டளையாய் ஏற்றுத் திருமுறைகளைத் தொகுக்கும் பணியைச் செய்துமுடித்தார் நமபியாண்டார்நம்பி.
நம்பியாண்டார்நம்பிஅவர்களால் தொகுக்கப்பட்டவை ஏழுதிருமுறைகளே எனவும் அவையே அடங்கன்முறை என அழைக்கப்படுகின்றதெனவும் ஆராய்ச்சியாளர் சிலர்கருதுகின்றனர்.

தேவாரங்கள் தவிர்ந்த மற்றைய தோத்திரநூல்களும் தொகுக்கப்பட வேண்டியதன் அவசியம் உணரப்பட்டு எட்டாம்,ஒன்பதாம்,பத்தாம்,பதினோராம் திருமுறைகள் காலப்போக்கில் தொகுக்கப்பட்டதென்பது அவ்வாராய்ச்சியாளர்கள் கருத்து. திருமுறை கண்ட புராணத்தின்படி, நம்பியாண்டார்நம்பியால் தொகுக்கப்பட்டவை பதினொரு திருமுறைகள். எது எப்படியோ இன்று நம் சொத்தாயுள்ள பன்னிரண்டு திருமுறைகளும் ஒரே

*With Best Complements from*

UNITED ARAB SHIPPING CO. (SAG)

# UASC

AGENTS
BELCON AGENCY LIMITED
174, GEORGE R DE SILVA MAWATHA,
COLOMBO - 13.
TEL: 331984-7, 328833, 422751-2
FAX: 335605, 449068
TELEX : 226445 A/B BELCON

தரத்தில் தொகுக்கப்படவில்லை என்பது தெளிவு.

பின்னாளில் சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பெற்ற பெரியபுராணம் சைவ உலகால் அங்கீகரிக்கப்பட்டு பன்னிரண்டாவது திருமுறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதில் எவர்க்கும் கருத்து முரண்பாடில்லை. இச்சேர்ப்பு நம் சைவச் சிந்தனைக்கொப்ப நடந்ததென்பது கவனிக்கத்தக்கது.

### *திருமுறைத் தொகுப்பு ஒரு அரசபணியே!*

திருமுறைகளைத் தொகுத்தபணி ஆரம்பத்தில் அரச பணியாகவே நடந்துள்ளது. தக்க, தனியொரு அறிஞனை நியமித்து இத்திருமுறைத் தொகுப்புப் பணியினை ஒரு அரச பணியாகவே இராஜராஜசோழன் செய்வித்தான்.

அத்தொகுப்பினைச் செய்யத் தேவையான நிதியுதவி முதலியவற்றை வழங்கியதும், பல்வேறிடங்களிலும் சிதறிக்கிடந்த சுவடிகளை ஒன்றுபடுத்தி ஓரிடத்திற் சேர்ப்பதற்குத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தியதுமே அவன் செய்த காரியம்.

சுவடிகளைத்தர மறுத்த தில்லை வாழ் அந்தணரிடம் மூவர் விக்கிரக உருவங்களைக் காட்டி, அம் மூவரும் ஒருமித்து வந்ததாய் நிறுவி, அவை சிலைகளெனின், தில்லைச்சிவனும் சிலையே எனத்தர்கித்து, கதவு திறப்பித்து, தேவாரச்சுவடிகளை அவன் வாங்கிக் கொடுத்ததாகப் பின்னாளில் கதைகள் விரிந்தன. மொத்தத்தில் அரச பணியாய் இத் திருமுறைத் தொகுப்பு நிகழ்ந்ததென்பது உறுதி. பின் வந்த தொலைநோக்கற்ற குறுகிய சிந்தனையாளர் இப் பணி முடிவுற்றதாக எல்லைப்படுத்தி நம் சைவத்தின் பரந்த சிந்தனைக்கு மாசேற்படுத்தினர்.

### திருமுறைகள் தொடர்ந்து தொகுக்கப்படுதல் தவறா?

இராஜராஜ சோழனால் ஏழாகத்தொகுப்பிக்கப்பட்ட திருமுறைகள். பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் மேலும் பல நூல்களைச் சேர்த்து பன்னிரண்டு திருமுறைகளாக வளர்ச்சியுற்றது. ஆனால் அவ்வளர்ச்சி இருபதாம் நூற்றாண்டின் எல்லையை அடையும் இன்றைய காலகட்டம் வரை மேலும் வளர்ச்சியுறாமல் நின்றதேன்?. சிந்தித்தல் அவசியமாகிறது!. இவ்வளர்ச்சி தடைப்பட்டமைக்கு கூறக்கிட்டிய காரணங்கள் மூன்று அவை:-

(1) பதின்மூன்றாம் நூற்றாண்டின் பின் அநுபூதிமான்கள் தோன்றாதிருக்க வேண்டும்.
(2) தோன்றிய அநுபூதிமான்கள் சிவ வாக்கை வெளிப்படுத்தி நூல்கள் செய்யாதிருந்திருத்தல் வேண்டும்
(3) காலாகாலமாகத் தொடரும் நம் சமய அறிவு முற்றுப்பெற்றிருத்தல் வேண்டும்.

இம் மூன்று காரணங்களுமேயன்றி புதிய திருமுறைகள் தொகுக்கப்படாமைக்கு தக்க காரணங்கள் வேறுகாட்டுதல் இயலாது. மேற் கூறிய காரணங்கள் பொருந்துமாற்றை ஆராய்வோம்.

பதின்முன்றாம் நூற்றாண்டின் பின் அநுபூதிமான்கள் தோன்றவில்லை என்பது நகைப்பிற்குறியது. பிறவிகளில் அழுந்தி, மலத்தினினும் விடுபட்ட ஆன்மாக்கள் இல்லாத ஒரு காலமும் உண்டா? உண்டெனில் அது நம் சிவனுக்கு இழுக்காகும். ஆன்மாக்களுக்காய் அவன் செய்யும் ஐந்தொழில் பயனற்றதாகக் கருதப்பட்டு மாசுறும். எனவே அநுபூதிமான்கள் இல்லாத காலமொன்றுண்டு எனக் கூறுவது அறியாமையின் வெளிப்பாடாகும். எனவே முதற்காரணம் நிராகரிக்கபடுகின்றது.அருளாளர்கள் தோன்றினும், சிவ வாக்கை வெளிப்படுத்வில்லையோ எனின் அதுவுமன்று. காரணம் திருமுறைகளில் தொகுக்கப்படாத சில தோத்திர நூல்கள் பதின்மூன்றாம் நூற்றாண்டின்பின் தோன்றிச் சைவர்களால் அங்கீகரிக்கப்பட்டு, பக்தியோடு ஓதுவார்க்கு அருளையும், அற்புதங்களையும் விளைவித்து காலங்கடந்து நிற்பது கண்கூடு. என்வே இரண்டாவது காரணமும் நீக்கப்படுகிறது.அதுவுமன்றி நம் சமய அறிவு முற்றுப்பெற்றதோ எனின் நிச்சயம் இல்லை என்றும் அந்நிலை கூடாது. ஆண்டவனையே அறிவென கருதுபவர்கள் நாம். பொறிகள் கருவியாக

மனம் அறிவாகவும் மனம் கருவியாக ஆன்மா அறிவாகவும் ஆன்மா கருவியாக ஆண்டவன் அறிவாகவும் இருக்கிறான் எனச் சொல்வது நம் சமயம். இதனாலேயே ஆண்டவனை அறிவுக்கறிவே என அழைத்து மகிழ்ந்தனர். நம் ஆன்றோர் ஆண்டவனே அறிவென ஒத்துக்கொண்ட பின் அறிவு முற்றுப்பெற்றது எனக் கூறுதல் அறியாமையன்றோ! முதலும் முடிவுமிலாத இறைவன் முற்றுப்பெற்றாலன்றி, அறிவு முற்றுப்பெற்றதாக கூறுதல் சாத்தியமில்லை. எனவே இம்மூன்று காரணங்களும் தவறென்றாகிறது இம்முன்று காரணங்களும் இல்லையென்றானதும் திருமுறைகள் தொடர்ந்து தொகுக்கப்படாதது ஏன் ? என்ற கேள்வி விஸ்வரூபம் எடுக்கிறது நம் சமயத்தின் அடிப்படை சிந்தனைகளை விளங்காது பிறமதச் சிந்தனைகளை உள்வாங்கி நம் சைவ மரபு மறந்த ஒருசில சமய வாதிகளின் எல்லைப்படுத்தும் சிந்தனையே திருமுறைத் தொகுப்பின் வழியடைத்துக் கிடப்பதாய்த் தெரிகிறது.

பிறர்பாதிப்பால், புதியன ஏற்கும் மரபும், நல்லவை தழுவும் மரபும் நீங்க, திருமுறைகள் பன்னிரெண்டுதான் எனவும் அத்தோடு அவை முடிந்து போயிற்று எனவும், மேலும் திருமுறைகள் தொகுக்கப்படவேண்டும் எனும் சிந்தனையே சிவநிந்தனையாகக் கருதவேண்டும் எனவும் கருத்துக்கள் உருவாக்கப்பட்டு பரவவிடப்பட்டதால் திருமுறைத் தொகுப்பு பன்னிரெண்டுடன் தடைப்பட்டு தேங்கி நிற்கிறது. ஒரு சில சமய அறிஞர்கள் சிவஞானபோதக் சூத்திரங்கள் பன்னிரெண்டுக்கும் அமையவே திருமுறைகள் பன்னிரெண்டும் தொகுக்கப்பட்டதாக எடுத்துக்காட்ட முயல்கின்றனர்

காலத்தால் பிந்திய சிவஞானபோதச் சூத்திரங்கள் காலத்தால் முந்திய திருமுறைகளின் தொகுப்புக்கு அடிப்படையெனும் கூற்று நகைப்புக்குரியது அது தவிர, ஒரு சில சூத்திரங்களைத் தவிர்ந்த ஏனையவையின் பொருத்தப்பாடின்மையும் வெளிப்படையே.

## தேக்கநிலை உடையட்டும் :-

மேற்கூறிய காரணங்களால் உண்மைநிலை உணர்ந்து திருமுறைத் தொகுப்பில் ஏற்பட்டிருக்கும் தேக்க நிலையைத் தகர்க்க சைவஉலகம் முன்வரவேண்டும். காலங்கடந்தும் நம் சைவக்கருத்துக்கள் தொடரும் என்பதை வெளிப்படுத்தும் வகையில் சைவ உலகு பதின்மூன்றாம், பதினான்காம் திருமுறைகளைத் தொகுப்பிக்கும் கைங்கரியத்தை இந்நூற்றாண்டின் நிறைவிலேனும் செய்தல் வேண்டும்.

## யார் செய்வது?

பூனைக்கு மணி கட்டுவது யார்? என்பது போன்று இக்காரியத்தைச் செய்வது யார் என்ற கேள்வி பிறக்கும். பலரின் கண்டனங்களுக்குள்ளாகப்போகும் இச்சிவப்பணியை இந்நூற்றாண்டில் செய்து முடிக்கப் போகிறவர் யார்? காலகாலமாக நம் சமயத்தில் புரட்சியாளர் பலர் தோன்றித் தேக்க நிலையைத் தகர்த்து நம் சைவத்தை முன்னெடுத்துச்சென்றுள்ளனர்.அத்தகைய ஒருவரால் இப்பணியும் செய்து முடிக்கப்படும் என்பதும் திண்ணம்.

தமிழகத்தில் நம்சைவ மரபில் தோன்றிய பல ஆதீனங்கள் உள்ளன.தக்கோர் பலர் அவ் ஆதீனகர்தர்களாகப் பொறுப்பேற்று சிவப்பணியாற்றி வருகின்றனர். அத்தகைய ஆதீனகர்த்தர்கள் பழமையைப் போற்றுதலோடு தம் கடமைமுடிந்ததெனக் கருதாது இப்புதிய தொகுப்புப்பணியை நடைமுறைப்படுத்த முன்வருதல் வேண்டும். மூடச் சம்பிரதாயங்களை உடைத்துநம்சைவத்தைச் சகல வழிகளிலேயும் முன்னெடுத்து வளர்த்துச் செல்ல மனவிரிவுடன்முன்வரவேண்டும்.

## இலங்கையும் செய்யலாம்!

தமிழகத்தார் தான் இக்காரியத்தைச் செய்யவேண்டுமென்ற கட்டாயமில்லை. காலாகாலமாக இலங்கையும் சைவநெறியை கட்டிக்காத்து ஒழுகி வருவது வெளிப்படை.இலங்கைக்கு விஜயம் செய்யும் தமிழக அறிஞர்கள் தமிழகத்தைவிட இலங்கையிலேயே குறிப்பாக யாழ்ப்பாணத்திலேயே சைவமும், தமிழும் ஓங்கி வளர்வதாய்ப் புகழ்ந்துரைப்பது வழக்கம்.

இத்திருமுறைத் தொகுப்புப்பணியைச் செய்வதன் மூலம் அப்புகழுரையை நாம் நிஜப்படுத்தலாம்.இங்கு ஒரு காலத்தில் இந்து கலாச்சாரஅமைச்சகம் ,பின் அதுவே மாற்றமடைந்து இந்து கலாச்சாரத்திணைக்களமுமாகச் சமயப்பணியாற்ற வகை செய்யப்பட்டிருப்பது யாவரும் அறிந்ததே.சிறுவிழாக்களை அமைப்பதோடும் சமயமுயற்சிகளை ஊக்கப்படுத்துவதோடும் தம்பணி முடிந்துவிட்டதாக நினைக்காமல் திணைக்களத்தார் இத்தகைய புரட்சிகரமான செயல்களைச் செய்து சமயவிழிப்புணர்ச்சியை மூட்டலாம்.

## தொகுப்பில் கவனிக்கப்பட வேண்டியதும்,தொகுக்கப்பட வேண்டிய நூல்களும்:-

பதின்மூன்றாம் பதின்நான்காம் திருமுறைகளைத் தொகுப்பதென முடிவானால் அக்காரியம் மிகுந்த சிரத்தையுடன் செய்யப்படவேண்டும் இதுவரை பண்ணிரண்டு திருமுறைகளாக தொகுக்கப்பட்டவை அநுபூதிமான்களால் பாடப்பட்ட அருள் நூல்கள் வெறுங் கல்வியாளர்களால் பாடப் பெற்ற அறிவு நூல்களைச் செல்வாக்கு கருதித் திருமுறைகளுள் சேர்க்கத் தலைப்படின் அதனால் முன்னைய திருமுறைகளும் மாசுறும் எனவே மிகுந்த கவனத்துடன் அறிவு நூல்கனைத் தவிர்த்து அருள் நூல்கள் தொகுக்கப்படுதல் அவசியம்.

அருள் நூல்களை கணிப்பதற்கு காலத்தைத்தக்கதோர் அளவு கோலாய் கொள்ளுதலும் தகும். சிறந்த அருள் நூல்கள் காலங்கடந்து தம் சக்தியால் மக்கள் மனதில் பதிந்து அவர்களால் ஓதப்பட்டு அருளும் அற்புதமும் செய்து தன் தெய்வ தன்மையை காட்டி நிற்கும், எனவே திருமுறைகளைதொகுக்கத் தலைப்படுவோர் சமகால நூல்களை விடுத்து காலம் கடந்த அருள் செய்து மக்களால் ஓதப்படும் வழக்கிலுள்ள அருள் நூல்களைத் தொகுக்கலாம் பஞ்சபுராணத்தோடு இன்று இயல்பாய் கலந்து மக்களால் ஓதப்படும் திருப்புகழ் போன்ற பல நூல்கள் உண்டு.

## தொகுக்கப்படக்கூடிய நூல்கள் :-

இவ்வாறு தொகுக்கப்படக்கூடிய நூல் வரிசையொன்றை மேலோட்டமாக உதாரணத்திற்குத்தருகின்றேன் இவை நிச்சயிக்கப்பட்டவையல்ல சிந்திக்கதகுந்தவை அருணகிரிநாதர் அருளிய ‘‘திருப்புகழ்‘‘, ‘‘கந்தரனுபுதி‘‘, ‘‘கந்தலங்காரம்‘‘ மற்றும் கந்தர் கலிவெண்பா அபிராமிப் பட்டர் அருளிச்செய்த ‘‘அபிராமி அந்தாதி‘‘ ஔவையார் அருளிச்செய்த விநாயகர் அகவல் தாயுமான சுவாமிகள் பாடல்கள் யோகசுவாமியின் நற்சிந்தனை முதலிய மேற்கூறிய இலட்சணங்களோடு நின்றுநிலைக்கும் அருள்நூல்கள் .

இப்பணி ஆரம்பத்தில் சில எதிர்ப்புக்களை தேடித்தரினும் வலிமையாகத் தக்க விளக்கத்தோடு இப்பணி நிறைவேறுமாயின் சைவ உலகம் இதைக்கைகூப்பி ஏற்கும் என்பதில் ஐயமில்லை காலப்போக்கில் திருமுறைகள் பதினைந்தாக பதினாறாக விரிந்து இறைவனைப் போல் முடிவின்றி பின்னைப் புதுமைக்கும் பெயர்த்தும் அப்பெற்றியதாய் நின்று நிலைக்கும். இது திண்ணம்.

இந்த நற்பணியைத் தொடங்கப்போகும் இராஜராஜ சோழனையும். நமபியாண்டார் நம்பியையும் கண்டு களிக்க, உண்மை சைவ உலகம் விழைந்து நிற்கிறது.

திருச்சிற்றம்பலம்



*With Best Complements from*

# BARGAIN

**FROM K.K.R. DEVELOPERS**
**ST.PETER'S COURT**

☞

**You can be owner of a Luxury Apartmet**
**At ST. PETER' S PLACE BAMBALAPITIYA**

*******   3 ROOM UNITS APPROX. 1000 SQ, FT AND 2 ROOM UNITS APPROX.***
***900 SQ. FT, 12 APARTMENTS ONLY ON A 20 PEARCH BLOCK***

**10 MINUTES WALK TO :-**

St. Peter's College, Muslims Ladies College, Hindu College, St. Pauls, Holy Family Convent, St. Lawrence College, Buddhist Temples, Kovils, Churches, Mosque, Railway Station, Banks, Hospitials, Cinemas.

- Access to Galle Road and Marine drive
- All features of a luxury apartment available
- Price ranges from 3.7 million to 4.35 milion.

FOR FURTHER DETAILS CONTACT K.K.R. BUILDERS :

NO 44. 33rd LANE,
COLOMBO – 06
T. P. NO: 594061; 588918
FAX : 597550

# திருவாசகத்தில் விஞ்ஞானம்



**பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன்**
**(தமிழ் நாடு)**

*"மேலை வானவரும் அறியாத ஓர் கோலமே எனை ஆட் கொண்ட கூத்தனே"*

"திருவாசகத்தில் உருகாதார் ஒரு வாசகத்திலும் உருகார்" என்பது இன்றும் வழங்கும் பழமொழி ஆகும். மனிதன் பெற்றுள்ள பேறுகளுள் சிறந்த ஒன்று அவன் எப்பொழுதாவது பெறும் மன உருக்கமாகும். வெறும் அறிவை மட்டும் துணை கொண்டு வாழ வேண்டும் என்று மனிதன் என்றைக்கு நினைத்தானோ, அன்று தொடங்கிற்று உலகிற்கு கேடுகாலம். விலங்கினங்களும் கூட தம் குட்டிகளிடத்து அன்பு செலுத்துகின்றன. அவற்றை பிரிய நேரும் பொழுது மனம் வருந்தி உருகுகின்றன. ஆனால், மனிதன் மட்டும் இவ் விதிக்கு விலக்காக இருக்கவேண்டும் என்று மனிதருள் சிலர் நினைக்க தொடங்கி விட்டனர். உருகும் இந்த இயல்புதான் மனிதனை மனிதனாகச் செய்யும் பண்பாடு என்பதை ஏனோ உலகம் மறக்க முற்பட்டு விட்டது! மனித மனம் உருக வேண்டுமானால் அதற்கு துணை புரிய கருவிகள் சில வேண்டும். அழிந்துபோகும் பொருள்களை நினைத்து பயனற்ற முறையில் உருகாமல், பயனுடைய முறையில் இவ்வுருக்கம் தோன்றல் வேண்டும். இது கருதியே நம் பெரியவர்கள் தம்முடைய மனம் சென்று பற்றவும், உருக்கம் கிடைக்கவும் கடவுளைக் கொண்டனர். கடவுள் இடத்தில் கொண்ட ஈடுபாடும் உருக்கமும் உலகிலும் அவர்கள் செம்மையாக வாழப் பயன்பட்டன. கடவுளிடத்தில் அன்பு செய்து, உருகிப் பழகிய அவர்கள் மனம் பிறர் துயரம் கண்ட வழியுங்கூட அனலிடை இட்ட மெழுகென உருகலாயிற்று. கடவுள்மாட்டு அவர்கள் கொண்ட உருக்கத்தால், சிலர் கினைப்பது போல் பிறர் துயரத்தைக் காணாக் குருடர்களாகவும், கேளாச் செவிடர்களாகவும் அவர்கள் இருக்கவில்லை. அதற்கு மறுதலையாக அனைத்துயிர்களிடத்தும் அன்பு செலுத்தும் மன நிலையை அவர்கள் பெற்றிருந்தனர்.

இவ்வகை மனநிலையை அடிப்படையிற் கொண்ட அவர்கள் பாடல்கள் இயற்றியமையால்தான் அப்பாடல்களைப் படிக்கும் அனைவருக்கும் சிறந்த முறையில் மன உருக்கத்தை அவை தந்தன. இவ்வகை பாடல்கட்குத் 'திருவாசகம் ' சிறந்த எடுத்துக்காட்டாகும். 'திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின், கருங்கல் மனமும் கரைந்துருகக் கண்கள் தொடுமணற் கேணியின் சுரந்து நீர் பாய அன்பராகுனர் அன்றி மன்பதை உலகில் மற்றையர் இலரே' என்று சிவப்பிரகாச அடிகளார் அருளிச் செய்ததில் நிறைந்த கருத்தாழம் உளது. திருவாசகம் உருகி உருகிப் பாடிய ஒரு பெரியாரின் அனுபவமே ஆகும். எனவே, அதைப் படிக்குந்தோறும் அப்பெரியார் அப் பாடல்களில் பெய்து வைத்துள்ள அனுபவம் நம்மையும் பற்றிக் கொள்கிறது..

இவ்வரும் பெரும் நூலின் உருக்கம் இயல்பைப் பற்றிக் கூறி வரவில்லை இக்கட்டுரை. ஆனால், இத்தகைய அரிய 'பக்திப் பாடல்களை இயற்றிய பெரியாரின் விஞ்ஞான அறிவைப்பற்றி ஓரளவு காண்பதே நோக்கம். 'பக்தி மான் கண்டது பிரசாதம்' என்று கண்மூடித்தனமாகக் கதறும் இற்றை நாள் தமிழர்கள் அறிய வேண்டியது ஒன்றுண்டு தமிழ்நாட்டில் தோன்றிய பக்திமான்கள் இவ் 'அறிவாளிகள்' நினைப்பதுபோல் கல்வி [illegible] அற்றவர்கள்

அல்லர். உதாரணமாக மாணிக்கவாசகர் ஒரு பெரிய அரசின் அமைச்சராக இருந்தவர் என்பதே சாலும். கைபெழுத்து நாட்ட அறியாதவர்களும் தேர்தலுக்கு நின்று, தம்மை ஒத்த அறிவாளிகளின் வாக்குரிமையை மிகுதியாகப் பெற்று விட்ட ஒரே காரணத்தால் அமைச்சராக வந்துவிடும் இயல்பு. இவர்கள் நினைப்பதுபோல் 'அறிவாளிகள்' குறைந்த அந்த நாட்களில் விமானமும் நீர்மூழ்கிக் கப்பலும் அறியப்படாத அந்த நாளில், வாக்குரிமை பெற்று யாரும் அமைச்சராக வந்ததில்லை. தம் கல்வி, அனுபவம், அறிவு என்ற இவற்றையே துணையாகக் கொண்டு அவர்கள் அமைச்சர் பதவியை அடைந்தனர். எனவே, மாணிக்கவாசகர் அவரே கூறுவது போன்று கல்வி என்னும் பல்கடல் பிழைத்து வந்தவர் என்பதில் எள்ளளவும் ஐயத்திற்கிடமில்லை.

அடுத்துக் காணவேண்டிய உண்மை ஒன்று உண்டு. விஞ்ஞான அறிவு மெல்லக் கடவுள் உணர்ச்சியை மாய்த்துவிடும் என்று நம்மில் பலரும் மனப்பால் குடிக்கிறோம். இற்றை நாளில் விஞ்ஞானத்தின் தந்தையராக விளங்கும் பேராசிரியர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன், ராபட் ஏ. மில்லிகன் போன்ற இரும்புத் தலைவர்கள் அனைவரும் ஒப்பற்ற பக்திமான்களாக விளங்கியதோடு தற்கால விஞ்ஞானம் சமய வாழ்க்கைக்கு பெரிய அரணாக விளங்குகிறதென்ற கருத்தும் உடையவர்கள். ஆனால் விஞ்ஞானம் என்ற சொல்லின் எழுத்தைக் கூடக் கூட்டத் தெரியாத நம் ஊர் அறிவுவாதி மட்டுமே விஞ்ஞானம் சமயத்தையும் கடவுளையும் பொய்ப்பிக்கத் தோன்றிய மந்திரக் கோல் என்று நினைக்கிறேன். இது நிற்க, நம் நாட்டில் பழங்காலத்தில் வாழ்ந்த மாணிக்கவாசகர் போன்ற பெரியவர்களும் அற்றைநாள் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் விஞ்ஞான அறிவைப் பெற்றுத் திகழ்ந்தனர். அவர்களுடைய இந்த அறிவு அவர்களுடைய பக்திக்கும் உருக்கத்திற்கும் தடையாக அமைவதில்லை என்பது மட்டுமன்று, அரணாகவும் அமைந்ததைத் திருவாசகம் போன்ற நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. மாணிக்கவாசகப் பெருமான் பெற்றிருந்த விஞ்ஞான அறிவு அவருடைய பக்திக்கு இடையூறாக அமையவில்லை. இதோ ஓர் உதாரணம். திரு அண்டப் பகுதி என்பது திருவாசகத்தில் உள்ள மூன்றாவது அகவல். இப் பாடலினுக்கு விளக்கம் தர வந்த இடைக்காலப் பெரியோர்கள் சிவனது தூல சூக்குமத்தை வியந்தது என்று கூறினார்கள். இப்பாடலின் முதல் ஐந்து வரிகள் மட்டும் கீழே தரப்படுகின்றன.

அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
　　அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக்கு ஒன்று நின்ற எழில் பகரின்
　　நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இல்நுழை கதிரின் துன் அணுக் புரையச்
　　சிறிய ஆகப் பெரியோன்..
திருவா. 3.1

இதன் பொருள்: அண்டமாகிய பேருலகின் பகுதிகளின் உருண்டை வடிவமான பெருக்கம் அளத்தற்கரிய தன்மையுடையனவாய், வளமிக்க காட்சியுடையனவாய், ஒன்றையொன்று அடுத்து நிற்கும் நிலையினை அளவிட்டுக் கூறப் புகுந்தால் நூறுகோடியின் மேம்பட்டனவாகும். இத் துணைப் பெரிய அண்டம் முழுவதும், வீட்டினுள் இருளில் நுழையும் சூரியகிரணங்களில் காணப்பெறும் சிறிய அணுக்கள்போல உள்ளது என்று கூறும்படி அவ்வளவு பெரியோனாக விரிந்தும் பரந்தும் உள்ளான் இறைவன்.

இப்பாடலில் காணப்பெறும் சில விஞ்ஞான உண்மைகளை மட்டும் எடுத்துக்கொண்டு அவை தற்கால விஞ்ஞானப் புதுமைகளுடன் எவ்வளவு ஒத்துள்ளன எனக்காண்போம். அண்டைப்பகுதி என்று பெருமான் கூறியதை இற்றை நாளில் Universe என்று கூறுகிறோம். அதில் உள்ள 'உண்டைப்பிறக்கம்' என்பதனை Galaxies என்று கூறுகிறோம். நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன என்பதனை Expanding Universe என்கிறோம். 'அண்டமாகிய பெரும் பகுதியில் நூறு கோடியின் மேலாக உண்டைகள் பெருக்க முற்று விரிந்தன' என்கிறார் பெருமான். பக்தர் ஒருவர் பக்தி மேலீட்டால் கண்ணை மூடிக்கொண்டு 'அளந்தவை'யல்ல இவை என்பதை நன்கு மனதில் பதித்துக்கொண்டு கீழ்வரும் விஞ்ஞானிகள் கூறும் கூற்றைச் சற்று காணவேண்டும்.

ஐன்ஸ்டீனின் கணக்கின்படி இவ்வண்டத்தின் அரைவட்டம் (radius) 35 கோடி ஒளிவருடங்கள். இதனை நாம் அறிந்த மைல்கணக்கில் 210–ன் பிறகு 21 பூஜ்யங்கள் எழுதவேண்டும். அதனைப் படிக்கக் கூடியவர்கள் படித்துப் பார்க்கட்டும். ஒரு வினாடிக்கு 186,000 மைல்கள் வேகம் செல்லக் கூடிய சூரிய ஒளியானது அண்டத்தில் ஓரிடத்தில் புறப்பட்டு அதனைச் சுற்றிக்கொண்டு மீண்டும் புறப்பட்ட இடத்திற்கு வர 200 கோடி மானிட வருடங்கள் ஆகும். மாணிக்கவாசகப் பெருமான் கூறியபடி அண்டப் பகுதியல் உள்ள உண்டைகளின் பெருக்கம் 'நூறு கோடியின் மேம்பட்டன என்பதை இற்றை நாள் வானநூலார் ஒப்புக்கொள்வது மட்டுமன்று: அவை எண்ணி மாளாதவை என்றே கூறுகிறார்கள். பெருமனும்' நூற்றொரு கோடியின் மேற்பட ' என்ற சொல்லால் அவை எண்ணி மாளாதவை என்ற கருத்தையே வலியுறுத்துகிறார்.

மனதிற்கு மயக்கந்தரும் இக்கணக்கு ஒருபுறம் நிற்க. அடிகள் பாடல்களின் நான்காவது அடியின் கடைசிச் சொல் நம் வியப்பை இன்னும் மிகுதிப்படுத்துகிறது. அச்சொல் 'விரிந்தன' என்ற ஆழமான பொருளுடைய சொல். ஏனைய நாடுகளோடு மிகுதியும் தொடர்புடைய தமிழர்கள் அற்றை நாளில் வான நூற் புலமையுடையவர்களாக இருந்திருப்பர் என்றே நினையவேண்டி உள்ளது. 'விரிந்தன' என்ற இந்த ஒரு சொல்லால் கோப்பர்நிகஸ் (copernicus) உலகம் உருண்டை வடிவானது என்று கூறுமுன்பே இத்தமிழர் அண்டத்தில் உலவும் உலகங்கள் அனைத்தும் உருண்டை வடிவம் உடையன என்று கூறியதைக் கண்டோம். அதனினும்பார்க்க வியப்பானதாகும் 'அவ்வுண்டைகள் விரிந்தன' என்று கூறியது. இற்றைநாள் வான நூலரும் அண்டம் விரிந்து கொண்டே செல்கின்றதென்ற முடிவுக்கு வந்துள்ளனர்.

அண்டத்தில் அரைவட்டம் ஒளி அலைகளை விட வேகமாகப் பெருகிக் கொண்டே செல்லுகிறது: இன்னும் வேகமாகப் பெருக ஏதுவும் உண்டு. இப்பொழுதுகூட ஓரிடத்திலிருந்து புறப்பட்ட ஓர் ஒளி அலை அண்டத்தை சுற்றிவர இயலாதபடி அதன் பரிதி வட்டம் மிகுந்து கொண்டே செல்கிறது. இங்கு பேசப்பெற்ற விரிவின் வேகத்தைக் கணக்கிட்டு ஒருவாறு தருகிறார் ஐன்ஸ்டீன்.

விண்மீன் மண்டலத்தின் உள்ளே இயங்கும் நமது சூரிய மண்டலம் வினாடிக்கு 13 மைல் வேகத்திலும், இவ்விண்மீன் மண்டலம் பால் வெளிக்குள் (Milky Way) வினாடிக்கு 200 மைல் வேகத்திலும் போகின்றன: இவை அனைத்தும் வெவ்வேறு திசைகளில் செல்லுகின்றன என்பதே விந்தை.

அண்டத்திற்கு பரிமாணம் என்பதில்லை ஏன் எனில் அது விரிந்துகொண்டே செல்கிறது சில ஆண்டுகளாகவே இவ்விரிவை விஞ்ஞானிகள் அறிந்துள்ளனர். இவைகளின் விரிவு வேகத்தைக கணக்கிட்டே அண்டத்தின் விரிவை அறிகிறோம்.

அண்டம், அதிலுள்ள உண்டைகள், அவற்றின் விரியும் இயல்பு என்பவைபற்றி மாணிக்கவாசகர் கூறியன போக இன்னும் எத்தனையோ உண்மைகளும் கூறப்படுகின்றன. பருமைக்கு உதாரணமாக இவ்வண்டத்தைக் கூறி இறைவன் இதனைவிடப் பெரியோன் ஆகலின் அவன் பெருமையை நோக்கக் கற்பனைக்கு அடங்காத இவ்வண்டமும் துன் அணுவை ஒப்பச் சிறியதாய்விட்டது என்கிறார். அண்டத்தைப் பற்றி அவர் அறிந்திருந்தது போலவே அணுவைப்பற்றியும் அறிந்திருந்தார். இவ்விடத்தில் அணுவுக்குத் 'துன் அணு' என்ற அடைமொழி தரப்பட்டுள்ளது. இனி மற்றொரு பாடலில் அணுவும் பிரிந்து சிறிதாம் தன்மை பேசப்படுகிறது. 'இன்று எனக் கருளி' என்று தொடங்கும் கோயில் திருப்பதிகம் ஏழாம் பாட்டில்

> சென்று சென்று அணுவாய்த்
> தேய்ந்து தேய்ந்து ஒன்றாம்

என்று பாடிச் செல்கிறார். மேலும்

> அணுத்தரு தன்மையில் ஐயோன் காண்க

*அண்டப் பகுதி 45) என்றும் பேசுகிறார் ஒரு காலத்தில் சிறந்த விஞ்ஞானியாகிய டால்டன் (Huge Dalton) என்பர், உடைக்க முடியாத என்ற பொருள்பட இதற்கு அணு (atom) என்று பெயரிட்டார். ஆனால், இற்றை நாளில் இவ் அணுவை உடைத்து இதனுள் ஓர் உலகமே இயங்குகிறது எனக் கூறுகிறார்கள். அணுவினுள் அடங்கி இருக்கும் இவ்வியத்தகு தன்மையைதான் அடிகள் 'அணுத்தரு தன்மையில் ஐயோன் என்று கூறினார் போலும். 'ஐயோன்' என்ற சொல்லுக்கு 'மிகச் சிறியவன் என்பது ஒரு பொருள். ஐ வியப்பாகும் என்ற தொல்காப்பியனார் கருத்துப்படி அணுவினுள் வியத்தகு முறையில் மின் அணுவாய், பரமாணுவாய் (ʻசழவழெ), நியூட்ரானாய் (Neotron), பாசிட்ரானாய் விளங்கும் சக்தி வடிவங்களைத் தான் அடிகளார் குறிப்பிட்டாரோ, ஏதொ அறியோம்!இனி முக்கூட்டு பரிமாணம் உடைய உலகத்தையும் (எல்லா உலகங்களும் இச் சொல்லால் குறிக்கப் பெறுகின்றன) அவ்வுலகம் தோன்றி அழிய இடந்தருகின்ற விசும்பையும் ஆசிரியர் அறிந்திருந்தது வியப்பன்று. காலம் என்று கூறப்பெறும் ஒன்றை இம் மூன்று பரிமாணமுடைய உலகத்தோடு தொடர்புபடுத்திக் கூறுவதுதான் வியப்பினும் வியப்பாகும்! திருவாசகத்தில் 47ஆது பாடலாக இப்பாடலைச் சற்றுக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.*

*மேலை வானரும் அறியாத(து)ஓர்*
*கோல மேஎனை ஆட்கொண்ட கூத்தனே!*
*ஞால மே!விசும் பே! இவை வந்துபோம்*
*கால மே! **உனை என்றுகொல்** காண்பதே?*
*திருவா–5:47*

ஞாலமாகவும், விசும்பாகவும், இவை இரண்டும் தோன்றி மறைதற்குக் காரணமாகவும் நிலைக்களமாகவும் உள்ள காலமே! உனை என்று காண முடியும்? என்று பெருமான் கூறும்பொழுது கொஞ்சம் வியப்படையத்தான் வேண்டியிருக்கிறது. இறைவனைக் காலம் கடந்தவன் காலகன என்றெல்லாம் கூறுவது மரபு. ஆனால் ஞாலமும் விசும்பும் வந்துபோதற்குரிய காலம என்று கூறுவது புதுமை என்பது மட்டுமன்று: ஐன்ஸடீனுக்கு ஆயிரம் ஆண்டுகள் முன்னரே அவர் கண்ட கனவைக் கண்டதுபோல் அல்லவா இருக்கிறது? என்றும் உள்ளவனாகிய இறைவனை என்றும் உள்ளதாகிய காலம் என்று குறிப்பிடுவது எவ்வளவு பொருத்த முடையது?

ஐன்ஸ்டீன் கண்ட காட்சியில் காலத்தில் வந்து போம் ஞாலம் காட்சியளிக்கிறது. விஞ்ஞானி தனது தொலை நோக்கியின் மூலம் கற்பனைக்கு அடங்காத தூரத்தில் இருப்பதாகக் கூறப்படும் ஓர் உலகைக் காணும்பொழுது இன்று இவ்வுலகம் இருக்கும் நிலையைக் காணவில்லை. காணவும் முடியாது. அவனுடைய ஒப்புயர்வற்ற அந்தத் தொலைநோக்கி 50 கோடி ஒளி ஆண்டுகட்கு முன் செல்கிறது. அன்று அந்த உலகம் எவ்வாறு இருந்ததோ அதையன்றோ இன்று காணுகிறது. காட்டுகிறது. உலகில் கல்தோன்றி மண் தோன்றாத அந்த நாளில் அத்தூர உலகில் இருந்து புறப்பட்ட ஒளியன்றோ இன்று விஞ்ஞானியின் தொலை நோக்கியில் பிரதிபலிக்கிறது. பன்னூறு ஆண்டுகளின் பின்னர் அவ்வுலகம் அழிந்து கூட இருக்கலாம். ஆனால், அவ்வழிவை நாம் அறிய இன்னும் எத்தனை ஆயிரம் ஆண்டுகள் ஆகும்? இவற்றை எல்லாம் ஓரளவு உணர்ந்த அடிகளார் அன்று திருவாசகத்தில்,

வண்ணந்தான் சேய(து) அன்று வெளிதே அன்று(அ)
நேகன்ஏகன் அணுஅணுவில் இறந்தாய் என்(று) அங்(கு)
எண்ணந்தான் தடுமாறி இமையோர் கூட்டம்
எய்துமா(று) அறியாத எந்தாய்! திருவா 5:29

என்று பாடிச் செல்வதை மொழிபெயர்த்தது போல உலகப் பேரறிவாளியான ஐன்ஸ்டீன் கூறும் மொழிகளுடன் இதனை முடிப்போம்.

I applied to Einstein's field equations this figure yields a positive value for the curvature of the universe, which in turn reveals that the radius f the universe is 35 billion light years or 210,000,000,000,000,000,000,000 miles. Einstein's universe, while not infinite, is nevertheless sufficient by enormous to encompass billion of galaxies, each containing millions of flaming stars and incalculable quantities of rarefied gas, could systems of iron and stone and cosmic. A sunbeam, setting out through space at the rate of 185,000 miles a second would in this universe, describe a great cosmic circle and return to its source after a little more that 200 billion terrestrial years. Universe & Dr. Einstein by Lincoln Barnett, Page 105.

2 *It is probable that the radius of space is already increasing faster than the velocity of light, and this rate of expansion will grow greater. Already it would be impossible for a ray of light to go all round theworld, for the circumference of the world is growing faster than light could overtake it. J.W.N. Sullivan in Limitations of Science Page 21.*

3 *The entire solar system, moreover, is moving within the local start system at the rate of 13 miles a second; the local solar system is moving within the Milky Way at the rate of 200 miles a second; and the Milky Way is drifting with respect to the remote external galaxies at the rate of 100 miles a second 00 and all in different directions! "A distant universe in the constellation of Bootes has been found to be receding with a velocity of 24,300 miles a second." –The Universe & Dr. Einstein', Page 14 & Life in Other Words', Page 19.*

'Space has no definite volume, for it is continually expanding.' It has been known for some years that they are scattering part rather rapidly and we accept their measured rate of recession as a determination of the rate of expansion of the world.' – Limitation of Science, Page 12.

When the astronomer peers through his telescope he looks not only outward in space but backward in time. His sensitive cameras can detect the glimmer of island universes 500 million light years away – faint gleams that began their journey at a period of terrestrial time when the first vertebrates were staring to crawl from warm Paleozoic seas onto the young continents of Earth. His spectroscope tells him, moreover, that these huge outer systems are hurtling into limbo, away from our own galaxy, at incredible velocities raging upto 35,000 miles a second. Or more precisely they were receding from us 500 million years ago. Where they are 'now', or whether they even 'exist now' no one can say, —"The Universe & Dr. Einstein", Page 78.

"My religion consists of a humble admiration of the illimitable superior spirit who reveals himself in the slight details we are able to perceive with our frail and feeble minds. That deeply emotional conviction of the presence of a superior reasoning power, which is revealed in the incomprehensible universe, forms my idea of God". The Cosmic religious experience is the strongest and noblest mainspring of scientific research.

"He to whom this mystical experience is a stranger, who can no longer wonder and stand rapt in awe, is as good as dead. To know that what is impenetrable to us really exists, manifesting itself as the highest wisdom and the most radiant beauty which our dull faculties can comprehend only in their most primitive forms this knowledge, this feeling is at the centre of true religiousness"



# கொழும்பு ஸ்ரீ சிவகாமசௌந்தரி அம்பிகா சமேத ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம்

பண்டைய காலம் முதல் இன்று வரை தமிழ் பண்பாட்டுக்கலை வடிவங்களை மேம்படுத்துவதிலும், இந்து சமய கலை கலாச்சார வளங்களை பேணுவதிலும் ஆலயங்களின் பங்கு போற்றுதற்குரியது. அந்த வகையில் ஆண்டு தோறும் எமது மலரில் ஆலயங்கள் ஒவ்வொன்றினதும் சிறப்பை எடுத்துரைத்து வந்திருக்கிறோம். இம்முறை கொழும்பு மாநகருக்கு மேலும் பொலிவு சேர்க்கும் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம் பற்றி நோக்குவோம்.

ஆன்மாக்கள் இறைவனை இறைஞ்ச ஏற்ற இடம் கோவில் என்பது வெள்ளிடை மலை இதனாலேயே "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்ற முதுமொழி வரலாயிற்று. சைவம் இயற்கை வழிபாட்டில் இருந்து வந்ததென்றாலும் வழிபாட்டுக்கு என ஓர் இடம் இருந்துள்ளது. அது காலகதியில் சிற்றாலயமாகவும், மடாலயமாகவும், ஆலயமாகவும், பேராலயமாகவும் வளரலாயிற்று எனச் சரித்திர ஆய்வாளர் கூறுவர். அக்கூற்று உண்மையானதே.

கொழும்பு மாநகரத்தில் வாழ்ந்த ஸ்ரீமான் பொன்னம்பல முதலியார் அவர்கள் தென் இந்திய யாத்திரை சென்றசமயம் முன்னொருகால் ஸ்ரீ இராமபிரானால் பூஜிக்கப்பட்ட இராமேஸ்வரம் கோவிலுக்கு வழிபடச் சென்றார். அவரது வழிபாட்டின்போது தாம் கொழும்பு வந்ததும் கொழும்பில் ஒரு சிவாலயம் அமைக்க வேண்டும் எனச் சித்தங் கொண்டார். அந்த வழியில் அமைக்கப்பட்ட ஆலயமே கொழும்பு ஸ்ரீ சிவகாம சௌந்திரி அம்பிகையுடனான ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆகும். 1857இல் இவ்வாலய மகாகும்பாபிஷேகம் முதன்முதலாக நடைபெற்றது. ஸ்ரீமான் முதலியார் அவர்களுக்குப் பின்அவரது மூத்த மகன் ஸ்ரீமான் குமாரசுவாமி முதலியார் அவர்களும் பின்பு இரண்டாவது குமாரன் சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களும் ஆலயத்தை நிர்வகித்தனர். சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஒரு சமயம் இந்திய யாத்திரை மேற்கொண்டிருந்தார். அங்கே திராவிட சிற்பகலையம்சங் கொண்ட ஆலயங்கலைக் கண்டு மகிழ்ந்தார். சிவாக முறைகளை அனுசரித்து அருள் நல்கும் பெரும் சிவாலயங்களைக் கண்டு அவைகளை ஒத்த ஒரு சிவாலயம் இலங்கையிலும் நிறுவவேண்டும் எனத் திடசங்கற்பம் பூண்டார்.இலங்கைக்கு வந்து ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தையே பெருஞ் சிவாலயமாகத் திருவுளங்கொண்டார். இதற்காக இந்திய சிற்ப வல்லுனர்கள் வரவழைக்கப்பட்டனர். சிற்பிகளின் கைவண்ணமாக இன்று அழகுறக் காட்சிகொடுப்பதே ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம் ஆகும்.

கலையம்சம்

இலங்கையில் முற்றிலும் கருங்கல்லிலான சிவாலயம் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரமே என்றால் மிகையாகாது. ஆலயத்தின் நிலம், சுவர், தூண், கூரை எல்லாம் கருங்கல்லினாலானவை. ஆதியில் இவ்வாலயத்தை ''கற்றழி'' எனப் புகழுவாரும் உள்.

இவ்வாலயத் தூண்கள் பென்னம்பெரிய கற்றூண்கள் ஆகும். ஒரு கற்றூணிலே இதனை மூன்று தூண்காளகச் செதுக்கியுள்ள நிலையைக் காணலாம். இத்தூண்களின் மேற்பாகம் அந்த அந்தத் தூண்களுக்கு ஏற்றது போல ஒருமுகம், இருமுகம், மூன்று முகங்களைக் கொண்டனவாக அழகாக உள்ளன. அதிலேயுங் கூட திருப்பு முனைகளில் உள்ளவை திருப்புமுனைத் தூண்களாக உள்ள நிலையைக் காணமுடியும். இத்தூண்களில் நெழிவு, சுழிவுச் செதுக்கு வேலைகளோ அநந்தம். சிற்பிகளின் கொத்து வேலை, செதுக்கு வேலை சிறப்பம்சங்கள் கலை வடிவெடுத்தும் இக் கற்கோவிலை அழகு செய்த வண்ணம் உள்ளன. இந்த அழகுறு தூண்களில் பல்வேறு மூர்த்திகளையும் காணமுடியும். அழகான கொடி மலர் வேலைப்பாடுகளைக் காணலாம். மரம், செடி கூட இங்கே உள்ளது. மேலும் சிங்கம், யாணை, யாழி, மயில், அன்னம், பாம்பு முதலானவைகள் எல்லாம் முறையாகச் செதுக்கப்பட்டுள்ள பாங்கினை இங்கே காணலாம்.

இவ்வழகான சிற்பம்சத்தை ரசித்தவாறு மேலே நோக்கும்போது அங்கே ஒவ்வொரு தூண்களிலும் சிங்கங்கள் குந்தி இருக்கின்றன. ஆலயத்தின் மேற்குத் திசையில் உள்ள ஆலயங்களின் முன் உள்ள தூண்களிலே சிவபூதம் குந்தி இருக்கின்றது. சிவபூதம், சிங்கம் இவற்றின் தலையிலே பெரிய நீராற்றி உள்ளது. இந்த நீராற்றிகளிலேயே ஆலயத்தின் கூரை பொருத்தப்பட்டுள்ளது. ஆகவே ஆலயத்தின் கூரையைத் தாங்குபவர்கள் சிவபூதங்களும், சிங்கங்களுமே. சிற்பிகளின் சிறப்பம்சங்களை நாம் எவ்வாறு வியப்பது? அல்லது விதந்துரைப்பது. எல்லாம் பொன்னம்பலவாணேஸ்வரத்தின் திருவருளே எனக் கூறுதல் சாலப் பொருந்தும்.

இந்த அழகுருக்காட்சிகளுக்கு மேலும் மெருகூட்டுவன கிழக்கு, தெற்குவாயில் இராஜ கோபுரங்கள் ஆகும். அத்தோடு கிழக்குவாயில் இரண்டாம் வீதி நுழைவாயிலிலும் மேற்குபுற நுழைவாயிலிலும் உள்ள சிறு கோபுரங்களில் கூட ஆடலரசனின் அற்புத நிலையை நாம் கண்டு ரசிக்கமுடியும். இவைகளோடு இவ்வாலயத்தின் அழகுரு திருத்தேரும் சிற்ப இலக்கணங்களை எமக்கு எடுத்தியம்பியவண்ணம் உள்ளன எனக் கூறல் சாலப் பொருந்தும்.

ஆலயமூர்த்திகள்:

மூலவர் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர், அம்பாள் ஸ்ரீ சிவகாமசௌந்தரி. இவ்வாலயத்தில் எல்லா மூர்த்திகளுமே பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளனர். ஆகையினால் இஃது ஓர் சிறந்த வழிபாட்டுத்தலம் ஆகும்.

பூஜை:

சிவாகம முறைகளுக்கு அமைய காலை மூன்று வேளைகளும், மாலை மூன்று வேளைகளும் பூஜைகள் நிகழ்கின்றன. காலையும் மாலையும் நித்திய அக்கினி வளர்க்கப்படுகின்றது. உச்சிகாலப் பூஜையில் சாதம், களி, குழம்பு என்பன நைவேத்திக்கப்படுகின்றது. அர்த்த ஜாமத்துக்கு பால், வடை, அப்பம், பழம் என்பன நைவேதனப் பொருள்களாகும்.

உற்சவங்கள்:

நித்திய உற்சவமாக காலையும், மாலையும் திருப்பல்லக்கில் சுவாமியும் அம்பாளும் வீதி வலம் வருவது வழக்கம். ஆத்தோடு பட்ச உற்சவமாக பிரதோஷ வழிபாடு உள்ளது. மாத வழிபாடாக சதுர்த்தி, கார்த்திகை பௌர்ணமி என்பன உள. வருட உற்றசவமாக தைப்பூசம், வைகாசி விசாகம், ஆவணிச் சதுர்த்தி, நவராத்திரி, கார்த்திகைச் சோம வாரம், மார்கழி திருவாதிரை, கிருஷ்ண ஜயந்தி, வைகுண்ட ஏகாதசி, ஆடிப்பூசம் என்பன உள்ளன. பங்குனி உத்திரை அந்த மாதங்கொண்டு வருடாந்த மகோற்சவம் நிகழ்ந்து வருகின்றது.

இலங்கையின் மாபெரும் சிவாலயம் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம். இங்கே சிறப்பாக மகாசிவராத்திரி, புரட்டாசி சனி, மாதப் பிறப்பு மற்றும் எல்லா விரத நாட்களில் நூற்றுக் கணக்கான பக்தர்கள் வந்து வழிபாடுகளைச் செய்கின்றனர்.

ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் அருள் எல்லோருக்கும் கிட்டுவதாக.

தகவல்

இந்து வித்யாநிதி



*With Best Complements from*

# Crown Trading Company


Importers, Exporters,General Merchants

&

Commission Agents

*194 - Old moor street,*

*Colombo – 12,*



**TELEPHONE :** 436084, 330913

---

*With Best Complements from*

# Paramesh Video Vision

## Professional Photography
## & Videography

30, Kerawalapitiya Road,

Hendala,

Wattala.

Telephone : 075 353231

# பல்கலைக்கழகக்கல்வி முன்னேற்றங்களும் பிரச்சனைகளும்

பேராசிரியர்
சோ. சந்திரசேகரன்
கொழும்புப் பல்கலைக்கழகம்.

தற்போதய பல்கலைக்கழகக் கல்விமுறைமையில் பல குறைபாடுகள் காணப்படுவதாகவும் உயர்கல்வித் தராதரங்கள் முன்னைவிடப் பெரிதும் குறைந்துவிட்டன என்று பல முறைப்பாடுகள் கூறப்படுகின்றன. இன்றைய பல்கலைக்கழகக் கல்விமுறையில் குறைபாடுகள் எதுவுமே இல்லை என சொல்வதற்கில்லை. ஆயினும் கல்வித்தராதரங்களின் வீழ்ச்சிபற்றிய முறைப்பாடு மிகவும் மேலோட்டமானது மட்டுமன்றி நுணுகி ஆராயப்படாத ஒரு முடிவு என்று கூறலாம். உயர்கல்வி தராதரங்கள் பற்றிப் பேசுவோர் அனேகமாக மாணவர்களின ஆங்கிலத் தேர்ச்சிக்குறைவையும் பொது அறிவு சமூகதொடர்பாடல்திறன்கள் என்பனவற்றில் பற்றாக்குறையையே எடுத்துக்கூறமுடியும் இவைமுற்றாக நிராகரிக்கப்படக்கூடியன அல்ல. ஆயினும் கதை இத்துடன் முடிந்துவிடமுடியாது. சற்று இவ்விடயம் ஆழமாக நோக்கப்படல் வேண்டும்.

1942 இல் முதலாவது இலங்கைப் பல்கலைக்கழகம் தொடக்கப்பட்ட காலத்தில் நாட்டின் பாடசாலைகளில் 10 வீதமானவை ஆங்கிலப் பாடசாலைகளாக இயங்கிவந்தன. இங்கு ஆங்கிலக்கல்வி கற்ற உயர் மட்ட வகுப்பினர் மட்டுமே அக்காலத்தில் பல்கலைக்கழகம் செல்லமுடிந்தது. ஏனெனில் பல்கலைக்கழகக்கல்வி முற்றாக அக்காலத்தில் ஆங்கில மொழியிலேயே வழங்கப்பட்டது. கால ஓட்டத்தினால் எற்படுத்தப்பட்ட கல்வித்துறை மாற்றங்கள் காரணமாகச் சிங்களம் , தமிழ் ஆகிய சுயமொழிகளில் கல்விபயின்ற சாதாரண கிராமப்புற மக்களின் பிள்ளைகளும் பல்கலைக்கழகம் செல்லமுடிந்தது. இன்று பல்கலைக்கழகக் கல்வி பயிலும் 36000 மாணவர்களில் 70 – 80 விதமானவர்கள் வரை சாதாரன இலிகிதர் மற்றும் விவசாய மீன்பிடி கைப்பணி விற்பனை போன்ற துறை சார்ந்தவர்களின் பிள்ளைகளேயாவர். கிராமப்புறங்களைச் சேர்ந்த பின்தங்கிய வகுப்பினர் தாய்மொழிக்கல்வியைப் பல்கலைக்கழகங்கள் வழங்கினமையினாலேயே இந்த உயர்கல்விவாய்ப்புக்கள் பெற முடிந்தது. இன்றைய பல்கலைக்கழக அனுமதிமுறையில் 60 வீதமான இடங்கள் மாவட்டரீதியாக ஒதுக்கப்படுகின்றன.இவ்வனுமதி முறைபற்றி பல குறைபாடுகள் கூறப்படுவது உண்மையே. ஆயினும் இன்று நாட்டில் உள்ள கல்வியில் பின்தங்கிய மாவட்டங்கள் அனைத்துக்கும் இவ்வனுமதிமுறை காரணமாகக் சில இடங்களாவது கிடைக்கப்பெறுவது குறிப்பிடதக்கவிடயமே. 1995/96 இல் அனுமதி பெற்ற மாணவர்களில் 31 வீதமானவர்கள் பின்தங்கிய மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே. அதேவேளையில் மொத்த அனுமதியில் 16.5 சதவீதம் கொழும்பு மாவட்டத்திற்கும் 8.6 சதவீதம் குருணாகல் மாவட்டத்திற்கும் சென்றுள்ளன. மாவட்ட அனுமதி முறை காரணமாக கொழும்பு யாழ்ப்பாணம் போன்ற மாவட்டங்களில் உயர்சித்திபெறும் அனைவரும் அனுமதி பெறமுடியாது என்ற முறைப்பாட்டில் உண்மை உண்டு. எவ்வாறாயினும் இன்றைய பல்கலைக்கழக அமைப்பானது பின்தங்கிய பிரிவினர்களுக்கும் மாவட்டங்களுக்கும் கணிசமான இடங்களை வழங்குவது உண்மையே.

பின்தங்கிய தமிழ் மாவட்டங்களும் இதனால் நன்மை அடைவதை பலரும் சுட்டிக்காட்டுகின்றனர். எடுத்துக்காட்டாக இக்குறிப்பிட்ட ஆண்டில் கிளிநொச்சி (36 மாணவர்கள்) மன்னார் (45 மாணவர்கள்) முல்லைத்தீவு (45 மாணவர்கள்), திருகோணமலை (168 மாணவர்கள்), வவுனியா ( 116 மாணவர்கள் ), பொலனறுவை ( 98 மாணவர்கள் ), ஆகிய மாவட்டங்களுக்கும் இடங்கள் கிடைக்க மாவட்டஅனுமதிமுறை உதவியுள்ளது. பல்கலைக்கழகக்கல்வியில் சகல மாவட்டங்களும் பல்வேறு பின்தங்கிய பிரிவினர்களும் பங்கு கொள்வது ஒரு முக்கிய முன்னேற்றமான அம்சம் என்பதை பலரும் வலியுறுத்துகின்றனர்.

கல்வித் தராதரங்களின் வீழ்ச்சி பற்றிப் பேசுவோர் மற்றொரு உண்மையையும் கருத்திற் கொள்ள வேண்டும். அவர்கள் கூறுவதுபோல் ஆங்கில மொழிக் கல்வி முற்றாக ஒழிக்கப்படவில்லை. 1993/1996 க்குரிய புள்ளிவிபரங்களின் படி மருத்துவம், பொறியியல், கட்டிடவியல், பல் மருத்துவம், விலங்கு மருத்துவம் ஆகிய துறைகளில் சகல மாணவர்களும் ஆங்கில மொழியிலேயே கல்வி பயிலுகின்றனர். 35000 பல்கலைக்கழக மாணவர்களில் 13000 பேர் ஆங்கில மொழியிலேயே

பயிலுகின்றனர். மூலும் விஞ்ஞான துறை முகாமைத்துவமுறை சட்டம் போன்ற துறைகளில் ஆங்கில மூலப் பயிற்சி நெறிகளும் உண்டு.

வேறு சில முன்னேற்றங்களாவன

- இன்றைய பல்கலைக்கழக அமைப்பில் திறந்த பல்கலைக்கழகம் உட்பட 12 பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. மாகாணரீதியாகப் பல்கலைக்கழகங்கள் அமைக்கப்பட்டு வருவதும் ஒரு முன்னேற்றமே ( உதாரணமாக யாழ் பல்கலைக்கழகம், கிழக்குப் பல்கலைக்கழகம், ருகுணு பல்கலைக்கழகம், சப்ரகமுவ பல்கலைக்கழகம், றஜரட்டை பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம் என்பன )
- பொறியியல் துறைக்கெனத் தனியாக மொறட்டுவ பல்கலைக்கழகம் இயங்குகின்றது. இத்துறை பேராதனையிலும் உண்டு.
- இன்று 6 பல்கலைக்கழகங்களில் மருத்துவ போதனா பீடங்கள் இயங்கிவருகின்றன . 5 பல்கலைக்கழகளில் விவசாய போதனா பீடங்கள் உள்ளன.
- முன்னரில்லா பல புதிய பாடத்துறைகள் இன்று நிறுவப்பட்டுள்ளன. அவையாவன சனத்தொகையியல் பத்திரிகையியல், நிதி முகாமைத்துவம், வர்த்தகவியல், புள்ளியியல் கம்பியூட்டர் கல்வி, உயிர் தொழினுட்பம், மூலக்கூற்று உயிரியல், பொது ஊடகம், மானிடவியல் காட்டியல் மற்றும் சூழலியல் விஞ்ஞானம், பிரயோக விஞ்ஞானம் நூலக மற்றும் தகவல் விஞ்ஞானம், விவசாய பொறியியல், பெருந்தோட்ட முகாமைத்துவம், சமுதாய வள முகாமைத்துவம்.
- நீண்ட காலமாகப் பட்டபயிற்சி நெறிகளில் மட்டுமே கூடிய கவனம் செலுத்திவந்த பல்கலைக்கழக அமைப்பு அண்மைகாலங்களில் உயர்பட்டப்பயிற்சி நிறுவனங்களையும் (PostGraduate Institutes ) அமைத்துள்ளது. குறிப்பாக விவசாயம், மருத்துவம், பாளி, பௌத்தமதம், தொல்பொருளியியல், முகாமைத்துவம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் இவ்வகையான நிறுவனங்கள் உயர்பட்டப்பயிற்சி நெறிகளை( MSc, MBBS,MA, MBA, Phd ) நடாத்தி வருகின்றன

  சர்வதேச உறவுகள் பெண்கள் பற்றிய ஆய்வு உழைப்பினர் பற்றிய ஆய்வு (Womens studies, Labour studies) ஐப்பானியவியல் பொதுத்தொடர்பு ஊடகம் ஆகிய புதிய துறைகளில் உயர்பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டுவருகின்றன.
- இத்தகைய வளர்ச்சிகளுடன் தொழிலாளர் கல்வி அழகியல் கல்வி சுதேச மருத்துவம் கம்பியூட்டர் தொழில்நுட்பம் ஆயுள்வேதம் ஆகிய துறைகளுக்கான விசேட நிறுவனங்களும் அமைக்கப்பட்டுள்ளன.
- இவ்வனைத்து நிறுவனங்களையும் சேர்ந்த மாணவர் தொகை வருமாறு

உயர்கல்வி பயிலும் மொத்தமாணவர்தொகை 1995/96

1. பல்கலைகழகங்களில் பட்டதாரி மாணவர்கள் 36 797

| | | |
|---|---|---|
| 1. கலை | 12209 | 33% |
| 2. வர்த்தகவியல் முகாமைத்துவம் | 7347 | 19% |
| 3. சட்டம் | 1014 | 2.8% |
| 4. விஞ்ஞானம் | 5642 | 15% |
| 5. மருத்துவம் | 4899 | 13% |
| 6. பல்மருத்துவம் | 371 | |
| 7. விலங்கு மருத்துவம் | 369 | |
| 8. விவசாயம் | 1517 | 4% |
| 9. பொறியியல் | 3156 | |
| 10. கட்டிடக்கலை | 273 | |

2. உயர்பட்ட நிறுவனங்களில் மாணவர் தொகை 1623

| | |
|---|---|
| 1. மருத்துவம் | 936 |
| 2. விவசாயம | 247 |
| 3. பாளி பௌத்தம் | 166 |
| 4. முகாமைத்துவம் | 98 |
| 5. தொல்பொருள் | 176 |

3. பிறஉயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்தொகை 2976
( அழகியல் கம்பியூட்டர் சுதேச மருத்துவம்
தொழிலாளர் கல்வி , ஆயுள்வேதம், சித்த மருத்துவம் போன்றன )

4. திறந்த பல்கலைக்கழக மாணவர்கள் தொகை 16734
( சான்றிதழ் டிப்ளோமா பட்டப்படிப்பு உயர்பட்ட
டிப்ளோமா உயர்பட்டம் உட்பட )

இவையாவும் பல்வேறு முன்னேற்றங்களைச் சுட்டிக்காட்டுவதுடன் 1950-1960 காலப்பகுதியில் இருந்து வேறுபட்ட வகையில் உயர்கல்வி மட்டத்தில் பல்வகை நிறுவனங்கள் இயங்கி வருவதையும் விளக்குகின்றன.

இம்முன்னேற்றங்களுக்கிடையே இனங்காணக்கூடிய முக்கிய பிரச்சினைகளாவன

பல்கலைக்கழக அனுமதித் தகுதி பெறுவோரில் 15 16 சதவீதமானவர்களுக்கு மட்டுமே இறுதியில் அனுமதி கிட்டுகின்றது.

| ஆண்டு | தகுதிபெறுவோர் | அனுமதிபெறுவோர் | |
|---|---|---|---|
| 1993 94 | 55 144 | 8015 | 14.53 % |
| 1994 95 | 59 292 | 8663 | 14.63 % |
| 1995 96 | 56 703 | 9190 | 16.25 % |

பல்கலைக்கழக ஆசிரியர்களின் நிலைமை திருப்தி தருவதாயில்லை

| | |
|---|---|
| 1. தேவைப்படும் ஆளணியினர் | 3 777 |
| பணியில் உள்ள ஆசிரியர்கள் | 2 830 |
| பற்றாக்குறை | 947 |

2. 2830 நிரந்தர ஆசிரியர்களுடன் 971 தற்காலிக ஆசிரியர்கள் பணியாற்றுகின்றனர்

3. பணியில் உள்ள 2830 ஆசிரியர்களில் பதவி உயர்வு பட்டமேற்படிப்பு அதிகமின்றிப் பணிபுரியும் விரிவுரையாளர்கள், உதவி விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் தொகை 1404. ஏறத்தாள 50 வீதமான பல்கலைக்கழக ஆசிரியர்கள் இவர்களே. குறைந்தபட்ச தகுதிகளுடன் முக்கியமாக கற்பித்தல் பணிபுரிபவர்கள்.

- அங்கீகரிக்கப்பட்ட அல்லது இருக்கவேண்டிய ஆளணியினருக்கும் பதவியில் பணிபுரியும் ஆசிரியர் தொகைக்கும் வேறுபாடுகாணப்படுகின்றன(1996)

| பல்கலைக்கழகங்கள் | அங்கீகரிக்கப்பட்ட ஆளணி தொகை | பதவியில் உள்ளோர் தொகை |
|---|---|---|
| 1. யாழ் பல்கலைக்கழகம் | 339 | 190 |
| 2. கிழக்குப் பல்கலைக்கழகம் | 116 | 86 |
| 3. தென் கிழக்குப் பல்கலைக்கழகம் | 44 | 20 |
| 4. பேராதனை | 856 | 686 |
| 5. கொழும்பு | 543 | 423 |
| 6. களனி | 400 | 288 |

- 50 வீதமான இளம் ஆசிரியர்களைக் கொண்டே பல்கலைக்கழகங்கள் நடாத்தப்படுகின்றன. உயர்ந்த கல்வித்தராதரங்களையும் அனுபவத்தையும் கொண்டோர் விலகிச்செல்லும்போது அல்லது இளைப்பாறும்போது அவர்களுடைய இடத்திற்கு இளம்விரிவுரையாளர்கள் நியமனம்செய்யப்படுகின்றனர் அவர்கள் கற்பித்தல் பொறுப்புகளுடன் உயர்பட்ட நெறிகளையும் பயில வேண்டியுள்ளது அவற்றைப் பயில வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களை நாடுவோர் குறைந்து செல்லுகின்றது. வெளிநாட்டுப் புலமைப் பரிசில் வாய்ப்புக்கள் பல்கலைக்கழக விரிவுரையாளர்களுக்குக் கிட்டுவது குறைவு . இந்நிலையில் மொத்த ஆசிரியர்கள் 2830 பேரில் 349 பேர் மட்டுமே பேராசிரியர் அந்தஸ்து உடையவர்கள். ஆசிரியர் பற்றாக்குறை குறிப்பாக சிரேஷ்ட மட்ட ஆசிரியர்களின் தட்டுபாடு பல்கலைக்கழக கல்வித்தராதரங்களையும் பாதிக்க இடமுண்டு.

---

# நவயுக விடியலுக்காய்...!

ஒருயுக விடியலின்
நம்பிக்கை நட்சத்திரம்
நிம்மதிக் கீற்றுகளாய்...
எங்கள்
வாழ்க்கை வதனத்தில்...
செத்துப் போன
சமாதான கோஷத்தினை
வாலிப உதடுகளில்
பூக்கச் செய்யும்
தைரிய ஊர்வலங்கள்
நவயுகம் ஒன்றிற்கான
அழைப்புக்களைத் தரும்...
மோதல்களைப் புதைத்து
காழ்ப்புகளைக் கொன்று
நவயுகம்...
படைக்கத் துடிக்கும்
எங்கள்...

இளமை மீசைகளில்
சத்தியம் சிரிக்கும்.
திருட்டுப் போய் விட்ட
எங்கள்
சதந்திரக் காற்றின்
முகவரி எழுத
புதுப் பக்கம் கொடுப்போம்
கால நதிக் கரையில்
தொலைந்து விட்ட
எங்கள்
வரலாற்றுப் புத்தகத்தினை
மீண்டும் பொறுக்கி வந்து
நவயுகம் ஒன்றினை
அந்நாள்களில் படைப்போம்!

**எம்.ஜே.எம் இர்ஷாத்**
**கலைப்பீடம்**
**கொழும்பு பல்கலைக்கழகம்**

# மனிதன் மனிதனாக வாழ வழி காட்டும் சைவசமய நித்திய விரதங்கள்

ஆறுதிருமுருகன்(ஆசிரியர்)

சைவ சமயத்தின் உன்னத தத்துவங்களில் விரதம் என்பதும் முக்கியத்துவம் பெறுகிறது. இறைவனை வணங்குவதற்கும் இறை பேற்றினைப் பெறுவதற்கும் விரதம் உதவும் என்பர். விரதம் இரு வகைப்படும். ஒன்று நித்திய விரதம் மற்றையது விசேட விரதம். இவ்விரு விரதங்களில் நித்திய விரதம் மிகவும் மகத்தானது. விசேட விரதம் எம்மை வழிப்படுத்த உதவுகிறது.

நித்திய விரதம் என்பது நித்தமும் கடைப்பிடிக்க வேண்டிய உயர் நெறிகளாகும். கொல்லாமை, களவு செய்யாமை, புலால் உண்ணாமை, சத்தியம் தவறாமை என்பன நித்திய விரதங்களில் அடங்கும் முக்கிய பண்புகளாகும். விசேட விரதங்கள் எனப்படுவது குறிப்பிட்ட தினங்களில் இறைவனை நினைத்து உணவைச் சுருக்கி இறைதியானத்தில் நின்று குறிப்பிட்ட வரத்தை நினைத்து அனுட்டிப்பதாகும். ஆலய உற்சவ காலங்கள், வெள்ளிக்கிழமை, சதுர்த்தி, சிவராத்திரி, கந்தசஷ்டி, பிரதோஷம் போன்ற காலங்களில் இறை அருளை வேண்டி இவ் விசேட விரதங்களை அடியார்கள் அனுட்டிப்பார்கள்.

விசேட விரதம் பற்றி நல்லை நகர் நாவலர் பெருமான் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

*''விரதமானது மனம் பொறி வழி போகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனுஞ் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலாகும்;''*

விரதம் என்பதன் பொருள் விளங்காது விரதம் காப்பதாகக் கருதுவது பயனற்றதாகும். நித்திய விரதத்தின் பயன் புண்ணியப் பேறாகும். இதில் கொல்லாமையை மிக முக்கிய நித்திய விரதமாகச் சொல்லும்போது இன்று இறைவனின் பெயரால் நேர்த்தி செய்வதெனக்கூறி உயிர்களைப் பலியிட முனைவது மகா பாவமாகும். இறைவனுக்கு நெய், திரவியங்கள் அளித்து பெரும் யாகம் செய்யும் பலனைவிட எவ்வுயிரையும் கொல்லாது, உண்ணாது விடுவதால் ஏற்படும் பயன்மிகப் பெரியதாகும். இதனைத் திருவள்ளுவர் அழகாக குறளில் விளக்கியுள்ளார்.

''ஆவி சொரிந்தாயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று''''

என்பதற்கமைய நித்திய விரதங்களை நித்தமும் காப்பாற்றுபவன் நிறைந்த வாழ்வும், நிறைந்த பேறும் பெறுவான்.

விசேட விரதங்களை முன்னோர் புனிதமாக அனுட்டித்தனர், விரத காலங்களில் அறுசுவை நீக்கி, தரையில் உறங்கி சௌகரியங்களை விடுத்து, மனதை இறைவனுக்கு அர்ப்பணித்து, அடியார்கள், நாதியற்றவர்களுக்கு அன்னதானம் கொடுத்து விரதம் காத்தனர். இன்று பலர் விரதம் அனுட்டிக்கும் முறை தெரியாது விரதம் அனுட்டிக்கிறார்கள். காலையில் உணவை உட்கொள்ளாது மதியம் விரதத்துக்கு என விசேடமாகப் பலவகை உணவு சமைத்து பொரியல், துவையல் என மெருகூட்டி வயிறு இடம் கொடுக்கும் வரை உண்கிறார்கள். இது விரதம் அல்ல. விரதம் பற்றிய விதி நூல்கள் விரதகாலத்தில் உண்ணும் உணவு உப்பு, உறைப்பு, இனிப்பு இல்லாதவை மட்டுமன்றி மிகக் குறைவாக உண்டு இறை நினைப்பை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறப்படுகிறது.

உபவாசம் என்ற சொல்லுக்குப் பொருள் இறைவனுக்கு அருகிருத்தல் என்பதாகும். எனவே உபவாச காலத்தில் இறை சந்நிதானங்களில் இருந்து இறைவனைத் தியானித்தல் வேண்டும். விரதங்களின் அடிப்படைத் தத்துவங்களை விளங்கிப் புனிதமாக மேற்கொள்ள வேண்டுமாயின் வேண்டும் வரங்களைப் பெறலாம். விரதத்தை விளக்கி அனுட்டிப்பவர்களுக்கு புண்ணிய பலன்கள் மட்டுமன்றி தியாக மனப்பான்மையும் தெய்வீக மனப்பான்மையும் பெருகும்.

**''ஆவி சொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன் உயிர் செகுத்துண்ணாமை நன்று''**

*With Best Complements from*

# CINE VIDEO



310, Galle road,
Colombo - 06.

Phone : 500630

---

*With Best Complements from*

# STUDIO CHHAYA

Photo, Video &
Camera repairs

40-1/1Galle road ,
Colombo -06.

Phone : 594492, 077- 301363

# MEMBERS OF THE HINDU SOCIETY

## Faculty Of Arts

BUWANA
BASKARAN
A.SHANTHI
T.MATHIVATHANI
K.GOWRY
G.THUSHYANTHAN
M.VASUHI
JYARUBAN
S.MANJULA
S.DEVAHI
K.NALINI
V.VATHSALA
S.MATHUMAI
J.PRAGALANATH
MANOHARAN
S.BUWANESHWARY
YASOTHA
K.SUTHESHANA
S.BAMINI
S.SUTHARSHINI
R.THURAIRAJASING

# LAW FACULTY

MR. P. YOHENDRAN
MR. M. GANAHENDRAN
MR. K. VIJAYAKANTHAN
MS. C. SUTHARSANI
MS. S. VIJAYAGOWERY
MS. K. SAJINI
MS. S. SUBASH
MS. R. DHARSHINI
MR. M. RAJADURAI
MS. K.A. RUBY
MR. V. KANAGASUNDARAM
MS.. K. KOUSHALYA
MR. S. SHANGAR
MS. S. NALAINIE
MR. N. KESAVAN
MS. S. ANUSHA
MS. S. JAYANTHINI
MS. SUTHARSHINI
MS. K. KALAIVANI
MS. S. PREMELA
MR. R. RAJENDRAN
MR. S. SUTHA
MR. B. GOWTHAMAN
MS. K. SIVAJANI
MS. K. SUGANTHY
MS. S. KOHILAVANI
MS. S. SUBAJINI
MR. P. MAILVAGANAN
MR. A. SELVAGANESH
MR. K. ANPALLAKAN
MR. D. GANGATHARAN
MS. P. BHAKEERATHY
MS. M. BANUMATHY
MR. K.N. KANATHASAN
MR. S. SUTHAHRAN
MS. A. PUSHPAKALA
MS. T. SASIKALA
MS. S. SHAMINI
MR.. J. SRIRANGAN
MS. V. MANJULA
MS. S. MEGALA
MR. P. KONESHWARAN
MR. S. PRABAKARAN
MS. M. DEVANRAJ
MS. K. SHIYAMINI
MS. I. INDRADEVI
MR. K. SUTHAGAR
MR. P. PRABAHARAN
MR. T. THAVARATNAM
MS. K. KAMALAGIN
MS. S. INDRAMATHY
MR. V. KUMAR
MS. N. SUTHARJINI

MS. K. SIVATHANUJA
MR. S. SUTHARJANAN
MS. K. SUBASHINI
MS. T. VINITHA
MR. S. THIRUCHLEVAM
MR. M. SUTHARSHAN
SIVAGANESHAN .K
KUGARAJAH .G
SOBITHA .T
MALARVILI .T
VANI .B
SARAVANAN .P
VITHIYAN .K
JEGANANTHAN .N
PRGASH .T
ANTHONY PILLAI .C.N
THIVAKARAN .T
RAMESHSHANKAR .R
ROHAN
VINSDAN .D
PRADEEPAN .M
SIVAMALA .S
KUHAPPRIYA .K
SHIRONI .A
VANITHA .N

MR. VINAYAGAMOORTHY

MS. V. SRIVANI
MR. V. KALATHARAN
MR. P. YOGANANTHAN
MR. K. NAVANEETHAN
PRASANTHI .S
ANUSHA .K
THEVIKUMAR .N.S
SHARMILA .M
SHANTHINI .M
UMASHANKAR .K
PARANITHARAN .N
MEENAHISUDARAM .A
RAJEEV .R
KALICHELVAN .K
ARAVGINTHAN .D
SUTHARSAN .K
RUDRA .Y
GUNASEGARAM JUDE TIRON
RAJANI .M
SILMIA .K
SUJI .N
MEKALA .R

## FACULTY OF MEDICINE

SUJAHARAN .G
INDRAJITH .B
BANUMATHY .B
ATHITHAN .S.P
LOGANTHAN .A
YUDISJRIKA .S.
MATHU .S
MAYOORAN .V
RAJEEV .S
SIVAGANESH .S
KIRUPALAR .V
SIVAPRRIYAN .S
SORUBINI .T
REGINALD .K
RERATHI .R
MERYL .A
JANAKI .P
MATHANAKUMAR .S
KETHEESWARAN
GANASEKARAN .R
PRASANTHI .S
KUGARAJAH .G
SOBITHA .T
MALARVILI .T
VANI .B
SARAVANAN .P
VITHIYAN .K
JEGANANTHAN .N
PRGASH .T
ANTHONY PILLAI .C.N
THIVAKARAN .T
RAMESHSHANKAR .R
ROHAN
VINSDAN .D
PRADEEPAN .M
SIVAMALA .S
KUHAPPRIYA .K
SHIRONI .A
VANITHA .N

PRABAHAR .T
SUMANGALI .S
UDYASHANKAR .W
SAILAJAH . S
SARAWANABAVA
JEGAN .Y
MIRNALINI .T
ARULKUMAR .S
SIVANANDAN .S
MURUGATHAS .S
NORMANN ROSANTH .S
SUTHARSAN .V
GANACHANDRAN .C
SIVAKUMAR .K
NIRANTHARAKUMAR .K
KAVITHA .A
SRISHANKAR .S
SRIHARANATHAN P
SIVAGANESHAN .K

ANUSHA .K
THEVIKUMAR .N.S
SHARMILA .M
SHANTHINI .M
UMASHANKAR .K
PARANITHARAN .N
MEENAHISUDARAM .A
RAJEEV .R
KALICHELVAN .K
ARAVGINTHAN .D
SUTHARSAN .K
RUDRA .Y
GUNASEGARAM JUDE TIRON
RAJANI .M
SILMIA .K
SUJI .N
MEKALA .R

# FACULTY OF MANAGEMENT

MR. A. ALASTINKUMAR
MS P. GANASUNDARAN
MS. M. KANAGASUNDARAM
MS. P. SIVADARSHINI
MR. M. THAYAPARAN
MR. G. THIRUNAVUKARASU
MS. D. SIVASUBRAMANIUM
MR. S. MAHINTHANAN
MR. A. KEETHISWARN
MR. S. MALARKOLUNTHU
MS. J. SOMAPALAN
MS. S. RATHAKRISHNAN
MR. G. SIVAKUMAR
MR. S. KUGATHAS
MR. K. IMAYAVASAN
MS. R. THAVARAJANI
MS. P. SUTHARSHINI
MS. S. SHARMILLA
MS. S. VIDHEHI
MR. A. NIRANJAN
MR. A. SIVAKUMAR
MR. R. PATHMAWATHI
MR. U. VARATHARAJAN
MR. K. BALAKUMARY
MS. K. NITHYA
MR. M. MAHITHARAN
MR. S. BASKARAN
MR. V. SUJEEVAN
MR. VATHANI

MS. G. BALASINGAM
MS. T. KANAGALINGAM
MS. T. MAYOORAN
MR. J. J. SUNDARAN
MR. J. THEEBAN
MS. N. SIVANANTHAPERUMAL
MR. T. YOHARAN
MR. P. HEMASABESHAN
MS. D. KUNARAJA
MS V. RAMACHANDRAN
MS. S. KANAPATHIPILLAI
MS. K. CHANDRIKA
MR. T. ARULNESHAN
MR. S. RANJITHKUMAR
MR. K. MAYOORAN
MS. K. NINOSHINI
MS. THAYALINI
MS. M. MANJU
MR. YOHARAJAH
MR. S. SASINDRAN
MR. K. VINODINI
MR. R. PRATHEEBAN
MR. K. MANISEKARAN
MS. U. THARUNI
MS. K. PRADEEPA
MR. S. DURASINGH
MS. S. SARANGAN
MR. S. SIVAMARAN
MR. P. RAMATHAS

L.ANANDAJOTHY
A.PRASHANTHI.
K.KAVLRI
N.SATHIYATHEVY
S.RANJINI
S.SASIKALA.
S.KIRUBALINI.
S.SUJATHA.
R.SUTHAHARAN.
T.MEHALA.
S.UMASANGAR.
E.VASIKARAN.
V.MEHALA
S.GANATHIPAN.
R.T.SIVAJOTHINATHAN.
K.ANANTHAKUMAR.
M.KANNAN.
MISS.V.R.M.SUGANTHINI.
MISS.P.PATHMANATHAN.
MISS.T.RAJENDRAN.
MISS.T.RATHIPRIYA.
MISS. N.ANNALINGAM.

A.DEEPA.
B.JEYABALAN
M.SIVARANI
R.LOGANATHAN.
S.SABESAN.
J.SATKUNAKARAN.
S.SHRITHARAN.
S.JABAWATHANI.
S.THANGARAJ.
S.UDAYARANI.
M.VALARMATHY.
V.VITHYA.
S.SOORYAKUMARAN.
M.J.RICHMAN.
R.M.SIVANANTHAN.
S.BASKARAN
MISS.K.KRISHNAN.
MISS.M.CHANDIRAKA.
MISS.G.S.PILLAI.
MISS.U.SOCKALINGAM.
MISS.M.LAKSHMI.
MISS.V.KAMALESWARAN.

# SCIENCE FACULTY

N. SELVAKUMAR
S. SUTHAKARAN
SENTHOORAN
S. PRAGALATHAN
KETHISWARAN
E. .R JESUDASAN
SUGANTHA S
SUGANTHY R
VANNI S
DHARANI W
JULIAN MANOJKUMAR .N
SRISATHIATHAS .S
SURERNDRAN .S
JOSEPH .C.P
KIRUPAHARAN .D
VIMALENDRA .M
LUXMAN .A .G
BALAESWARAN .B
KANDEEPAN .S
ANSLUM .C .M
KANDEEPAN .K .M
LLOYD .A .T
KALADEVY .T
THAMAYANTHI .N
SELVAKUMARAN .N
CHANDRAMOHAN .S
SHANTHAKUMAR
K.PATHMAKULASINGAM
T.THANGAVEL
K.RAVINDRAN

S. SRIKARAN
N. SATHIYASUTHAN
R. THUSIANTHAN
V. JANANRTHANAN
N.N.N.N NOIL
SAMBAVI T
RUPA T
SHIVANTHY P
SHANTHARUBINI
KALPANA K
AAROORAN
YOHENDIRAN .M
NEDUMARAN .B
RAVIALAHAN .P
SIVAHARAN .T
UMASHANKAR .T
ANGELO .C .R
TENAKONE .M .B
SUGEESWARAN .K .M
JAIKISHAN .S
KAMALESHWARAN .V
NIRMALAGUHAN .W
VANITHA .T
A.ITHAYAVANI
SIVANESSAN .K
N.SIVENDRAN
K.MURALITHARAN
S.JEYAKUMARAN
V.ANANDAPRAGASH
S.DHANUSHAANTHAN

A.G. FERNANDO
K.BAGAVATHUR
T.SUJEEVAN
S.THANENTHARAN
P.KANNAN
A.MAYURIKA
S.MANUHARIE
B.KUNDAVI
S.GEETHANJALI
N.PREMILAANANTHY
A.SUJIEVA
MIRUTHUBASHINI
THEELIPAN
S.VARNI
R.JANENE
S.SATHESKUMAR
Y.BALAKUMAR
J.P.B.SELVARAJAH
P.SUTHAGAR
M.S.VIJITHA
T.MAHILNANKAI
S.GAYATHRI
V.JEYATHARSHINI
G.GIRVANI
T.VAKEESAN
V.PRATHEEPAN
S.NAVANEETHAN
R.FERNANDO
M.S.THANGARAJAH
S.SENTHURAN
P.NADANARUPAN

V.JEYATHEVAN
M.RAMANEETHARAN
M.JUBERDTHAS
K.PUSPAKARAN
S.SRIGUWRY
R.SUBANA
S.VASUKI
S.GIRIJA
R.SHANTHINI
R.CHITRAKALADEVI
HIRIHARAN
MALARVANAN
NISHAN
V.SUBAJINI
S.GAYATHRI
S.KIRUBAN
W.V.PRASANTHAN
M.JENITA
P.SASITHARAN
T.THAYANITHI
S.SASIPRABHA
N.NIROJAN
P.AHILA
K.SUTHARSAN
M.JEGAN
S.BHAVAN
N.SUTHARSHAN CROOS
T.CHENDURAN
A.RAMANAN
P.JAGAN

# இன்றைய காதல்....

தேன் போன்ற குரல் தென்றலாய் காதை வருட கனவுலகத்திலிருந்து, திடுக்குற்று விழித்தான் அஜய் மேலே சொல்ல முன்னர் அஜயைப் பற்றி சில குறிப்புகள். கதிரேசர், பொன்மணி தம்பதியரின் ஏக புத்திரனான அஜய் "எஞ்சினியரிங்" கல்லூரியில் இறுதி வருட பரீட்சையை எழுதிவிட்டு ஊருக்கு வந்திருக்கின்றான். தன் படிப்பில் பெரும் கர்வம் கொண்டவன். எந்தப் பெண்ணும் தன்னைப் பார்ப்பாள் என்ற மமதை கொண்டவன். இப்போது அவன் பொது நூலகத்தில் "சிறுகதை" புத்தகம் ஒன்றை கையில் வைத்திருந்தபடி தன் எதிர்கால இலட்சியத்தைப்பற்றி அதாவது பெரும் பணக்கார இடத்தில் திருமணம் செய்வது எவ்வாறு என்று தீவிரமாக சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அவன் நிமிர்ந்து தேன்குரலாளை நோக்கினான். அவன் மனம் சிறகடித்தது. மனதுக்குள் பல வண்ணப் பறவைகள் வட்டமடித்தன. அவன் மனம் பேசியது இவ்வளவு அழகான பெண்ணை என் மனைவியாக அடைந்தால்!!! பொறு மனமே பொறு அழகு மட்டும் இருந்து என்ன பயன். என் நண்பன் ஒருவன் நாற்பது இலட்சம் வரதட்சணையாக வாங்கினான். என்னோடு பாடசாலையில் படித்த காலம்வரை எல்லாவற்றிலும் போட்டி போட்ட நண்பன்(?) ரமணன் ஐம்பது இலட்சம் வாங்கினான். நான் எப்படியும் அறுபது இலட்சம் வாங்கினால்தான் எனக்கு மதிப்பு. சரி சரி இவளைப்பற்றி நன்றாக விசாரிக்க வேண்டும்.

"என்ன புத்தகத்தை கையில் வைத்துக் கொண்டு நித்திரை செய்தது போதாது என்று நான் உங்களை எழுப்பிக் கதைத்த பிறகும் ஏதோ நித்திரையில் இருப்பவர் போல இருக்கிறீர்களே? நூலகத்தில் புத்தகம் வாசிக்கத்தான் வருவார்கள். நித்திரை செய்ய அல்ல தெரியுமா?" என சற்று உரத்த குரலில் கேட்டாள். வேறு யாராவது இப்படிக் கேட்டிருந்தால் பெரும் பிரளயமே ஏற்பட்டிருக்கும். ஆனால் இது சொன்னது அழகிய பெண்ணின் வாய் ஆயிற்றே! என்ன செய்வது? உங்களுக்கு என்ன வேண்டும் மிஸ்?... மிஸ்... உங்கள் பெயர் என்ன? என மிருதுவான குரலில் கேட்டான். "உங்கள் புத்தகத்திற்குக் கீழே எனது நூலக அட்டை இருக்கிறதா"? என்றாள். புத்தகத்தை எடுத்த போது நூலக அட்டை இருந்தது. சட்டென்று பெயரை பார்த்து மனதில் பொறித்தான் "ஆர்த்தி" , ஆனாலும் மீண்டும் பெயரைக் கேட்டுக் கொண்டு அட்டையைக் கொடுத்தான். அவள் முறைத்துப் பார்த்துவிட்டு சென்றுவிட்டாள்.

மறுநாள் தன் நண்பர்கள் குழாமை சந்தித்து அவள் பற்றிய விபரம் திரட்டலாமா எனக் கேட்டபோது விபரங்கள் உடனேயே ஒன்றன்பின் ஒன்றாக வந்து குவிந்தன. அழகான பணக்கார பெண்களின் விபரங்கள் அவர்களின் விரல் நுனியில் இருந்தது. ஆர்த்தி பற்றிய செய்திகள் அஜய்க்கு கற்கண்டாய் இனித்தன. ஆர்த்தி குடும்பம் அவ்வூருக்கு புதிதாக வந்தவர்கள். பெரும் பணக்காரரான மதுரநாயகத்தின் ஒரே வாரிசு ஆர்த்திதான்.

ஆர்த்தியின் அம்மா நந்தினிக்கும் பணக்கார பின்னணி உள்ளது. வரதட்சணையாக அறுபது, எழுபது இலட்சமென்ன பத்து கோடியே கொடுக்க முடியும். மெல்ல மெல்ல காதல் என்னும் அரக்கன் அஜயைப் பற்றிக் கொள்ள ஆரம்பித்தான் (காதலை அரக்கனாக விழித்ததற்காக தூய காதலர்கள் என்னை மன்னிப்பார்களாக! பணம், அந்தஸ்து பார்த்து வந்த காதலை அரக்கன் என்பதில் தவறில்லை என்பது என் கருத்து) அடுத்த செய்தி அவனை திடுக்கிட வைத்தது. ஆர்த்தி கிறிஸ்தவப் பெண்ணாம் என்பதே அச்செய்தி. ஏனெனில் அஜய் ஓர் இந்து. அவர்கள் மாமிசம் கூட சாப்பிடுவதில்லை.

அஜய் அன்று முழுவதும் தூங்கவில்லை. பணமா! மதமா! தன் உயர்ந்த(?) இலட்சியத்தை(?) நினைத்தான் பணம் மதத்தை வென்றது. மனம் வரும் நிகழ்வுகளை எவ்வாறு, எப்போது நடத்துவது என திட்டமிட்டான்.

அஜய் இக்காலத்து இளைஞன் அவன் பார்க்காத சினிமாவா? சினிமாவில் காதலை வெளிப்படுத்த, காதலை உருவாக்க காட்டாத வழிகளா? எதற்கும் ஆர்த்தி மசியவில்லை கடைசியில் "தற்கொலை" எனும் கொடிய ஆயுதத்தைப் பயன்படுத்தினான். தன்னால் எந்த உயிரும் இவ்வுலகத்தை விட்டு நீங்குவதை விரும்பாத ஆர்த்தி அன்று மாலை பூங்காவில் சந்திப்பதாக கூறி சென்றாள். பாவம்! அவளுக்குத் தெரியுமா? தற்கொலை என்பதும் அவன் தந்திரங்களில் ஒன்று என்பது].

பூங்காவில் அஜய் காத்திருந்தான். மனம் அவள் வரவை ஆவலோடு எதிர்பார்த்தது. ஆனால் அந்த ஆவலில் அவளைவிட அவள் அப்பாவின் பணம் நிழலாடியதை நினைத்து அவன் மனம் ஒரு சில வினாடிகள் திடுக்குற்று அவன் சுயமரியாதை விழிப்புற்றது. அந்த திடீர் சுயமரியாதைக்கு பாவம்! ஆயுள் அந்த ஒரு சில வினாடிகள்தான். அவன் யார் தான் பணத்தை விரும்பவில்லை என்று தன் மனதுக்கு சமாதானம் சொல்வதாக தன்னைத் தானே ஏமாற்றிக் கொண்டான்.

ஆர்த்தி முகத்தில் சிந்தனை ரேகைகளோடு நிதானமாக நடந்து வந்து அவன் பக்கத்தில் அமர்ந்தாள். ஆர்த்தி நிதானமானவள் பல உயர்ந்த இலட்சியங்கள் கொண்டவள். உயர்தரத்தில் ஒரு சில புள்ளிகளால் மருத்துவத் துறையில் கல்வி பயில முடியாவிட்டாலும் மக்களுக்கு சேவை செய்வதிலேயே கண்ணாய் இருந்த அவள் இப்போது ஒரு தாதியாக பணியாற்றுகிறாள். தாதி உத்தியோகத்திற்கேற்றிய அன்பு, பொறுமை, இரக்கம், மனிதநேயம் கொண்டவள். மதுரநாயகம் மகளின் சேவைக் குணத்தை அறிந்து அவளை தட்டிக்கொடுப்பார். நந்தினி யாரும் இவ்வளவு பணமிருக்கையில் ஏன் வேலைக்குப் போக வேண்டும். உரிய காலத்திலேயே திருமணம் முடித்துவிட வேண்டும் என்று அவசரப்படுவாள். இனி நாம் மீண்டும் பூங்காவுக்கு திரும்புவோம்.

அஜய்தான் முதலில் மௌனம் கலைத்தான் "நீங்கள் என் காதலை ஏற்றுக்கொள்வீர்கள் என நான் நினைக்...". "நான் உங்கள் காதலை ஏற்றுக்கொண்டதாக சொல்லவில்லையே" என்று இடைமறித்தாள் ஆர்த்தி. துணுக்கற்ற அஜய் "என்ன சொல்கிறாய் நீ..." என்று இழுத்தான். "நான் என்ன சொல்கிறேன் எனில் நீங்கள் என்னைக் காதலிப்பதாக கூறினீர்கள் ஆனால் உங்கள் மீது எனக்குக் காதல் வரவில்லை. தூய காதல் என்பது அந்தக் காலத்தில் மட்டும்தான். இன்று எனில் சினிமாவில் மட்டும் பார்க்கலாம் என்பதே எனது அபிப்பிராயம் நான் திருமணத்தின் பின் தான் காதல் என்ற கொள்கையுடையவள் நீங்கள் "தற்கொலை" என்ற பேச்சை எடுத்தவுடன், உங்களுக்கு தகுந்த புத்திமதி கூறத்தான் நான் இங்கு வந்தேன்" என்றாள்.

அந்த ஒரு நிமிட பேச்சில் அவள் சிந்தனைகள் பற்றி அறிந்து கொண்டான். அவளை தன் சாதுரியமான பேச்சினால் தன் வலையில் விழுத்த ஆரம்பித்தான். "ஆர்த்தி நீங்கள் நினைப்பது தவறு. நான் உங்கள் மீது தூய காதல் வைத்துள்ளேன் அதற்காக நான் என்ன செய்யவும் தயார்" என்றான். "சரி சரி நான் இந்த காதலுக்கு சம்மதம் சொன்னால் அதன் பிறகு என்ன" என்று கேட்டு புருவம் உயர்த்தினாள். "பொழுது போக்கிற்காக காதலிப்பவனோ அல்லது காதலிக்க வேண்டுமென்பதற்காக காதலிப்பவனோ நான் அல்ல. உங்களிடம் சம்மதம் வாங்கிய பின் உங்கள் விருப்பத்துடன் உங்கள் தந்தையிடம் நம் திருமணத்திற்கு சம்மதம் வாங்குவேன்" என்றான். இப்பதிலால் சிறிது நெகிழ்ச்சி அடைந்த ஆர்த்தி "நான் ஒரு கிறிஸ்தவப் பெண் தெரியுமா?" என்று வினவினாள். "போதும் நிறுத்துங்கள் காதலைப் பற்றி நல்ல கருத்துக்கள் வைத்துள்ள நீங்கள் மதத்தைப் பற்றி, அதாவது மதத்தின் பெயரால் மக்களை இனம் பிரிப்பதை எவ்வாறு எற்றுக் கொள்கிறீர்கள்? மதம் என்ன மதம்? மதங்கள் நெஞ்சத்தை ரணமாக்க அல்ல எல்லோரும் ஒன்றே என்று தர்மங்கள் சொல்ல என்று ஒரு கவிஞர் சினிமா பாடல் மூலம் சொல்லியிருக்கிறார் தெரியாதா?" என்று ஆவேசத்தோடு கேட்டான் அஜய். அவனுக்கே அவனது பேச்சு ஆச்சரியமாகியது. எவ்வளவுக் கெவ்வளவு பேச்சு மூலம் ஆர்த்தியை கவர முடியுமோ அவ்வளவுக்கவ்வளவு பேசி நடித்தான். அவனது பேச்சில் மயங்கிய ஆர்த்தி அதை உண்மை என்று நம்பி காதலில் வீழ்ந்தாள்.

நாட்கள் நகர்ந்தன. அவர்கள் சந்திப்புக்கள் தொடர்ந்தன. அஜய்க்கு மனதளவில் துன்பம் ஏற்பட்டது. ஏனெனில் அவனது இயல்புக்கு மாறாக நல்ல உயரிய இலட்சியமுள்ளவனாக அவளிடம் பேசுவதற்கு, நடிப்பதற்கு பெருமளவு ஆயத்தம் செய்ய வேண்டி இருந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கு ஆர்த்தியிடம் "உன்னைப் பெண் பார்க்க வரட்டுமா?" என்று வினவினான். ஏனெனில் கல்யாணத்தின் பின் தன் சுயரூபத்தை காட்டினால் அவளால் ஒன்றும் செய்ய முடியாது, தனக்கு அடங்கி நடப்பாள் என்பது அவனது எண்ணம். "எனக்கு இந்தப் பெண் பார்த்தல் என்ற பெயரில் ஆயிரம் கேள்விகள் கேட்பது பிடிக்காது. ஆதனால் உங்கள் பெற்றோரிடம் சொல்லி என் பெற்றோருடன் கதைத்து திருமணநாளை குறிக்கச் சொல்லுங்கள் ஏனெனில் உங்களைப் பற்றி என் பெற்றோரிடம் சொல்லி நான் அனுமதி பெற்று விட்டேன்" என்று கூறினாள் ஆர்த்தி. நல்லது" என்று கூறினார். அதற்கு அஜய் "நான் அவளை இக்கணமே மறந்துவிட்டேன் ஆனால் எப்படி அவளிடம் இருந்து விலகுவது என்று தான் யோசித்துக்கொண்டிருக்கிறேன்". என்று தன் மனத்தோடு பேசினான்.

அன்று இரவு அஜய் வீட்டில் பெரும் புயல் மையம் கொள்ளத் தொடங்கியது காரணம் ஆர்த்தியின் மதம் மற்றும் வேலை. பணம் பற்றி கூறியதும் மதம் இருந்த இடம் தெரியாமல் போய் விட்டது. ஆனால் பொன்மணி திட்டவட்டமாகக் கூறினாள் "எனக்கு வரும் மருமகள் வேலைக்குப் போகக் கூடாது. வீட்டு வேலைகள் தான் செய்ய வேண்டும்". அஜய் திருமணத்திற்குப் பின்னர் வேலையைப் பற்றி கூறலாம் என்றான் ஏனெனில் அவனுக்குத்தானே ஆர்த்தியைப் பற்றித் தெரியும். திருமணம் நின்றுவிடுமோ என பயந்தான். ஆனால் அவன் பெற்றோர் தாதி உத்தியோகம் ஒரு வேலையா? அவள் சம்பாதித்து நாம் உண்பதா என்ற வறட்டுப் பிடிவாதத்திலேயே இருந்தார்கள். வரதட்சணையை மறக்க வேண்டாம் என ஆறாம் முறையாக நினைவூட்டினான் அஜய்.

இரு பக்கத்து பெற்றோரின் உரையாடலின் போது அஜயின் பெற்றோர் இனிக்க இனிக்க பேசினார்கள். தங்கள் பரந்த மனப்பான்மையைக் காட்ட ஆர்த்தி தன் மதத்திலேயே தொடர்ந்து இருக்கட்டும் எம்மதமானாலும் சம்மதமே என்று கூறி, தொடர்ந்து, எங்கள் மருமகள் வேலைக்குப் போகக்கூடாது. வரதட்சணையாக எழுபது இலட்சம் எதிர் பார்க்கிறோம் என்று தங்கள் பரந்த மனப்பான்மையைக் குறுக்கிக் கொண்டனர். மதுரநாயகம் வரதட்சணை பற்றிக் கவலைப் படவில்லை. அவரால் இதைவிட இருமடங்கு கொடுக்க முடியும். அவர் கவலை எல்லாம் வேலையைப் பற்றித்தான். ஆனால் இவ்வேலை முதலிலேயே பிடிக்காத நந்தினி அஜயின் பெற்றோருக்கு ஒத்துப்பாடினாள். மதுரநாயகம் ஏதோ சமாளிப்பாக பதில்கூறி அவர்களை அனுப்பி வைத்துவிட்டு அன்றிரவு இதுபற்றி ஆர்த்தியுடன் கலந்து பேசினார். ஆர்த்திக்கு இரு அதிர்ச்சி வேலை மற்றும் வரதட்சணை. "அஜய்க்கு தெரியாமல் அவர் பெற்றோர்கள் இவ்வாறு கேட்டிருக்கலாம். நான் இதுபற்றி அஜயுடன் கதைத்து விட்டு உங்களுக்கு பதில் கூறுகிறேன்" என்றாள் யோசனையுடன்.

அடுத்த நாள் மாலை அஜயை சந்தித்து "அஜய் இதெல்லாம் என்ன?" என்று சோகத்துடன் கேட்டாள். "எல்லாம் என் அம்மாவின் விருப்பம் தான்" என்று மென்று விழுங்கினான். "அம்மாவின் விருப்பத்தை விடுங்கள் உங்கள் விருப்பம் என்ன? நான் வாழப்போவது உங்களுடன் தானே" என்றாள். "அது வந்து... வந்து..." தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பேசினான். "ஆர்த்தி உன்னை மதம் மாறச் சொல்லி கேட்கவில்லை". "அது உங்கள் உயரிய பண்பு என்பது எனக்கு தெரியும்" என்று முறுவலித்தாள். "ஆம் ஆம், வேலை பற்றி என்னவென்றால், நீ வேலைக்குப் போய் கொண்டுவரும் சம்பளத்தில் வாழ என் பெற்றோருக்கு பிடிக்கவில்லையாம். மேலும் முக்கிய காரணம் நீ வேலைக்குப் போனால் வீட்டு வேலைகள், பிள்ளைகளை ஒழுங்காக கவனிப்பது யார்?". "ஏன் வேலைக்கு போய்க் கொண்டு குடும்பத்தைக் கவனிப்பது என்னால் முடியும்" என்று ஆர்த்தி இடை மறித்தாள். "உன்னால் முடியம் தான். ஆனால் நீ வேறு யாருடனும் பழகுவதை நான் விரும்பவில்லை. தாதி வேலையில், வைத்தியசாலையில் இரவு நேர கடமைக்காக அங்கு தங்க வேண்டியிருக்கும். நீ பல பேருடன் நெருங்கி, நோயாளிகளை தொட்டுப் பழக வேண்டும் எனக்கு இதெல்லாம் பிடிக்காது. மேலும் எத்தனை கதைகள் வைத்தியரையும் தாதியையும் இணைத்து கேள்விப்பட்டிருக்கிறேன். எனக்கு தாதித் தொழிலில் நல்ல அபிப்பிராயம் இல்லை ஆகவே வேலைக்குப் போக வேண்டாம்" என்றான்.

"இவ்வளவு நாளும் உங்கள் பேச்சு மூலம் நீங்கள் என் இலட்சியத்திற்கு இரு கரம் நீட்டி வரவேற்பீர்கள் என்றல்லவா நினைத்தேன். இப்படி ஒரு புனிதமான தொழிலை இப்படி கேவலமாக நினைக்க உங்களுக்கு எப்படி மனது வந்தது? தாதி தொழில் என்பது நோயால் அவதியுறுவோருக்கு மருந்து கொடுத்து அவர்களின் மனநிலைக்கேற்ப அன்போடு அரவணைப்போடு பழகி அவர்களை உடலாலும் உள்ளத்தாலும் குணப்படுத்தும் தொழில். மக்கள் சேவையே என் இலட்சியம் அதற்குத் திருமணம் தடையெனின் எனக்கு திருமணமே வேண்டாம்" என ஆவேசத்தோடு கூறினாள். உடனே அஜய் "உன் விருப்பத்திற்குக் குறுக்கே நிற்க நான் விரும்பவில்லை. உன் விருப்பப்படியே நீ செய்" என்று பதபதைப்போடு கூறினான். "ஆனால் வரதட்சணை விடயத்தில் மட்டும் நான் சொல்வதைக் கேள் ஏன் எனில் நான் வரதட்சணை வேண்டாவிடில் எனக்கு மதிப்பு இராது" என்றான். யோசனையோடு வீடு திரும்பினாள் ஆர்த்தி.சில நாட்களின் பின் கதிரேசரின் வீட்டுக்கு வந்த நண்பர் ஒருவரின் மூலம் திடுக்கிடும் செய்தி ஒன்றை கேள்விப்பட்டனர். மதுரநாயகத்தின் வியாபாரத்தில் எதிர் பாராத விதமாக நட்டமேற்பட்டு பெரிய கடனில் மூழ்கியுள்ளார் என்பதே அச்செய்தியின் சாராம்சம். கதிரேசர் அஜயிடம் "ஆர்த்தியை மறந்து விடுவதுதான்

அஜய் தன்னிடமிருந்து விலகுவதை அவதானித்த ஆர்த்தி அவனிடம்முக்கிய விடயம் கதைக்க வேண்டும் எனக்கூறி பூங்காவுக்கு வரச்சொன்னாள். அஜயும் அவளைத் தன்னை மறக்கும்படி கேட்டுக்கொள்வதற்காக பூங்காவுக்கு சென்றான். காதலைச் சொன்ன பூங்காவில் காதலை மறுப்பதற்காக எரிச்சலோடு காத்திருந்தான். ஆர்த்தி அதே நிதான நடையுடன் வந்து அவன் அருகில் அமர்ந்தாள். வழக்கம் போல அஜயே மௌனம் கலைத்தான் "ஆர்த்தி உன் மதம் எமக்கு எதிரியாயுள்ளது அதனால் எனை மறந்துவிடு" என்றான். ஆர்த்தியோ குறுஞ்சிரிப்போடு "நான் மதம் மாற தயார் ஏனெனில் நான் இல்லாவிட்டால் நீங்கள் தற்கொலை செய்துவிடுவீர்களே "என்றாள். இதற்கு என்ன பதில் கூறுவது என்று தெரியாது அஜய் தடுமாறினான். அதை ஆர்த்தி வெகுவாக இரசித்தாள். "அஜய், உங்களுடன் விளையாட எனக்கு நேரமில்லை. மதத்தை காட்டி உங்கள் பண ஆசையை மறைக்க வேண்டாம். ஆரம்பத்தில் நீங்கள் என்னை விரும்புகிறீர்கள் என்று நினைத்தேன். ஏமாந்தேன். இப்போது தெரியும் நீங்கள் என் பணத்தைத் தான் விரும்புகிறீர்கள் என்று. ஏனெனில் பணம் உள்ளபோது குறுக்கே வராத மதம் பணமில்லாதபோது வந்ததை நான் எந்த அதிசயத்தில் சேர்க்க. நான் உங்கள் சுயரூபத்தை வெளிக்கொண்டு வர அப்பாவுக்கு கடன் என்று கட்டுக் கதை கட்டினேன் என்றாள்." இதைக் கேட்டவுடன் அஜய் அதிர்ச்சியுற்று காரியம் கெட்டதே, வேறு ஏதாவது யுக்தி இருக்கிறதா என சிந்திக்கத் தலைப்பட்டான். இம்முறை ஆர்த்தி அவனை சிந்திக்க விடவில்லை. "இதோ பாருங்கள் பணம் இல்லாமல் ஒன்றும் செய்ய முடியாதுதான் ஆனால் பணம் தான் எல்லாம் என்றில்லை. என் இலட்சியம் தெரிந்த நீங்களே அதாவது நான் பணத்துக்காக வேலைக்குப் போகவில்லை சேவை செய்யப் போகிறேன் என்பது தெரிந்த நீங்களே என்னை வேலைக்கு போகவேண்டாம் என்ற போது என் மனம் உடைந்து விட்டது. உங்களுக்கு வரதட்சணையாக எழுபது இலட்சம் தந்து உங்கள் நண்பரின் விலையை எண்பது இலட்சமாக உயர்த்த நான் விரும்பவில்லை. வரதட்சணை என்று உங்கள் மதிப்பை உயர்த்துவதாக எண்ணி ஆடு மாடுகளை சந்தையில் விற்பது போல உங்களை நீங்களே கல்யாண சந்தையில் விற்று உங்கள் மதிப்பை வீணாக்காதீர்கள். படித்த நீங்கள் இப்படிச் செய்வது முறையல்ல. இனிமேலாவது பணம் பணம் என்று அலையாமல் நல்ல குணமுள்ள பெண்ணாக மணமுடியுங்கள்" என்று கூறி அவன் முகபாவத்தை கவனித்தாள்.

தன் அறிவுரை செவிடன் காதில் ஊதிய சங்கு என்பது சிறிது நேரத்தில் அவளுக்கு புரிந்தது. "என்னைப் பற்றி கவலைப்படாதே ஆர்த்தி தொண்ணூறு இலட்சத்துடன் நான் ஒரு பெண் பார்த்துவிட்டேன். நீ எப்படி இனி தனியாக வாழப்போகிறாய்? இனி திருமணம் இல்லையா?" என்று ஒருவித பாதிப்புமில்லாமல் அகங்காரமாக கேட்டான்.

மென்மையாக சிரித்த ஆர்த்தி "எல்லோரையும் உங்களைப் போல நினைத்துவிடாதீர்கள் என் இலட்சியத்தை புரிந்து கொண்டு எனக்கு இருகை நீட்டி ஆதரவு தரும் ஒருவர் எப்படியும் வருவார். ஏதோ பிறந்தோம், வாழ்ந்தோம், இறந்தோம் என்பது பலர். இப்படித்தான் வாழவேண்டும் என்று வாழ்பவர்கள் சிலர். இச் சிலரில் ஒருவராக இருப்பதையே விரும்புகிறேன். வாழ்க்கையில் இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற பாடத்தை படிப்பித்ததற்காக அஜய்! உங்களுக்கு எனது நன்றிகள்" என்று கூறிவிட்டு, தன் இலட்சியக் கனவை நெஞ்சில் சுமந்தபடி வெளிச்சத்தை நோக்கி நேர் நடை நடந்தாள்.

கு.குகப்ரியா
மருத்துவபீடம்

*''நீ வேலைக்குப் போனால் வீட்டு வேலைகள், பிள்ளைகளை ஒழுங்காக கவனிப்பது யார்?''*

# கலாச்சாரம் என்பது என்ன ?

> **" கலாச்சாரக் கோட்பாடுகள் நலிவுறும் போது ஓர் சமுதாயத்தின் நாகரீகமும் சிதறுண்டு போகிறது "**

நாகரீகத்தின் அளவுகோல் தான் கலாச்சாரம் எனப்படும். நாகரீகமற்ற காட்டுமிராண்டி நாட்டிற்கும் நாகரீகமான தேசத்திற்குமுள்ள வேற்றுமை அதன் கலாச்சாரத்தில் அடங்கியுள்ளது. குறிப்பிட்ட தத்துவார்த்தங்களையும் வாழ்க்கை நெறிகளையும் மதித்து ஒரு குறிப்பிட்ட பூகோளவட்டத்தில் நீண்ட காலமாக ஒரு மனித கூட்டம் வாழும் போது அவர்களுடைய கலாச்சாரம் என்று கூறக்கூடிய ஓர் தனித்துவம் மலர்கின்றது. அதாவது கலாச்சார வேறுபாடு ஆனது மனிதர்கள் மேற்கொண்ட வாழ்க்கை நெறிகளில் தான் தங்கியுள்ளது.

நாகரீகத்தின் முதற் கட்டத்தில் பூகோள தட்பவெப்ப நிலவரமும் சுற்றுப்புறமும் மனிதனை வயப்படுத்தி அவர்களுடைய வாழ்க்கை நெறிகளை நிர்ணயித்தன. இவ்வாறாக வாழ்கை நெறிகள் நிர்ணயிக்கப்பட்டு அதன் பலனாக ஒரு கலாச்சாரம் உருவாகிய பின் இக்கலாச்சாரத்தின் மீது சுற்றுப்புற ஆதிக்கம் இல்லாமற் போகிறது. உதாரணமாக மேற்கில் நிலமானது அதீத தட்பநிலையாலும் தொடர்ந்து கொட்டும் பனியினாலும் நிலமானது கடினமாக கானப்பட்டது. ஏனவே அங்கு வாழ் மக்கள் கட்டுக்கடங்காத இயற்கையுடன் போராடி தங்களுடைய சுயபாதுகாப்பிற்குத் தேவையான அனைத்தையும் இயற்கையிடமிருந்து பெறத் தம்மை இசைவாக்கிக் கொண்டனர். அதாவது மேற்கில் இயற்கையை அடக்குவது மக்களின் குணத்தில் ஓர் முக்கிய பங்கு வகிக்கின்றது. ஆனால் இதற்கு எதிர்மாறாகக் கிழக்கு வளமையையும் செழுமையையும் கொண்ட நிலத்தைத் தந்தது. ஓர் சிறுமுயற்சியின் முலம் மக்கள் தமக்கு தேவையானவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருந்தது. இத்தகைய லயமான வாழ்க்கை வெளிப்பாட்டில், மக்கள் இயற்கையை பின்பற்றி, சேவை புரிந்து விட்டுக் கொடுக்கும் கலாச்சாரத்தை தாமாக வளர்த்துக் கொண்டார்கள். இவ்வாறு இந்நாட்டில் அன்பையும் அமைதியையும் தேற்றுவிக்கும் கலாச்சாரம் உருவாகியது.

கலாச்சார முன்னேற்றத்துடன் நாகரீகம் வளர்கின்றது. ஆனால் கலாச்சாரக் கோட்பாடுகள் நலிவுறும் போது ஓர் சமுதாயத்தின் நாகரீகமும் சிதறுண்டு போகிறது. உதாரணமாக அன்றைய கிரேக்க, எகிப்திய, உரோமாபுரி சாம்ராஜ்யங்களின் அழிவைக்கருதலாம். இதற்கு காரணம் –

அவர்கள் உறுதியான தத்துவார்த்தமான ஆத்மீக கோட்பாடுகளைத் தம்மகத்தே கொண்டிருக்கவில்லை. மேற்கத்தைய கலாச்சாரத்தை எடுத்து நோக்கு வோமாயின் அங்கு இன்று விவாகரத்துகள் மலிந்து கிடக்கின்றன. சிறுசிறு மனஸ்தாபங்கள் இறுதியில் விவாகரத்தில் முடிகின்றது. அங்கு வாழ் இளைஞர் மத்தியில் அன்பு பாசம் மரியாதை என்பவை வெறும் எழுத்து வடிவில் தான் நிலை பெற்றுள்ளது. மேலும் அங்கு உறவினர் வீடொன்றுக்குச் செல்வதாயின் முன்கூட்டியே அவர்கள் அனுமதி பெற்று குறிப்பிட்ட நேர இடைவேளையில் மட்டுமே அவர்களுடன் சந்தித்து பேசலாம்! குடும்ப அங்கத்தவர்களே சந்தித்து உரையாடி உறவாடி மகிழ நேரமின்றி அவர்களிற்கு வேலைப்பளு அழுத்தும் போது எவ்வாறு உறவினருக்கு நேரம் ஒதுக்குவதை நாம் எதிர்பார்க்கலாம்?

ஆனால் நம் கலாச்சாரம் இன்று சீர்குலைந்து மேன்மேலும் மெருகூட்டப்பட்டு நிலைத்து நிற்பதற்கு காரணம் இந் நாட்டின் ஒப்பற்ற மதத்தலைவர்கள். அவர்கள்சுயமுயற்சியை கொண்டு தங்களுடைய நாட்டின் அடிப்படையான தத்துவ மதகோட்பாடுகளை அவ்வப்போது பரிசீலனை செய்து மாற்றி அமைத்தனர். இங்கனம் கலாச்சாரத்தின் அழிவை தடுத்து நிறுத்தினர்.

ஏமது கலாச்சாரத்தினை வெளிப்படுத்தும் வகையில் எம்மிடையே பல புனித விற்கள் உண்டு. இராமாயனத்தின் மூலம் ஒருவனுக்கு ஒருத்தி என்னும் உன்னதமான கேட்பாடு வெளிப்படுத்தப்படுகின்றது. இதன் பின்னணியில் ஆழமான தத்துவங்கள் அடங்கியுள்ளன. எம்மனமானது ஆசைகள் சஞ்சலங்கள் நிறைந்தது. ஆசைபட்டது கிடைக்ககிடைக்க மேன்மேலும் ஆசைகள் பெருகுமே தவிர குறையாது. இத்தகைய ஆசைகளில் புவனின்ப இச்சையும் ஒன்றாகும். இதனால் நம் பெரியோர்கள் ஒருவனுக்கு ஒருத்தி எனும் தத்துவத்தை கூறி அவ்வெருத்தரோடு திருப்திப்படவேண்டிய அவசியத்தையும் கூறி எமது பண்பாட்டைக் கட்டியெழுப்பினர். மேலும் இத்தகைய திருமணத்தின் முலம். கணவன், மனைவி இருவரும் ஓர் பக்குவநிலையை அடைகின்றனர். எவ்வாரெனின் ஒவ்வொரு தனிமனிதனிற்கும் அவனுக்கே உரித்தான தனித்துவமான விருப்பு வெறுப்புகள் உள்ளன. திருமண பந்தத்தின் முலம் இருவர் இணையும் பொழுது கணவன் மனைவி இருவரும் தமது விருப்பு வெறுப்புக்களை மற்றவரின் பொருட்டு விட்டுக்கொடுத்து ஓர் பக்குவ நிலையை அடைகின்றனர்.

எனவே தான் மற்றைய நாடுகளை போன்று அடிக்கடி விவாகரத்தை கோராது எம் நாட்டின் திருமணங்கள் நிலைத்து நின்று எடுத்து காட்டாக விளங்குகின்றது.

அடுத்து விருந்தோம்பும் பண்பு எமது கலாச்சாரத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருன்தோம்பி வேளான்மை செய்தற் பொருட்டு என வள்ளுவர் விருந்தோம்பின் சிறப்பை உணர்ந்து அதற்கென தனி அதிகாரத்தை தம் மறையில் ஒதுக்கினார். விருந்தோம்பல் கைகூட எம்கலாச்சாரம் எவ்வாறு கைகொடுக்கின்றதெனின் நாம் தைப்பொங்கல் ,தீபாவளி, வருடப்பிறப்பு போன்ற பல்வேறு பண்டிகைகளை கொண்டாடுகின்றோம். பண்டிகைகளின் போது உறவினர் இல்லங்கள் சென்று அவர்களுடன் உணவருந்தி உறவாடி வருகின்றோம். மனிதர் இயந்திரமாக இயங்கும் இக்காலகட்டத்தில் கூட இம்முறைமை நடைமுறையில் இருப்பதைக் கண்கூடாக இன்றும் காணமுடிகின்றது. மேலும் இந்துக் குடும்பத் தலைவிகளிற்கு பசி என்று வருபவர்க்கு இல்லை என்னாது அமுதளித்து அனுப்பும் குணம் அவர்களின் இரத்தத்தில் ஊறிய விடயமாகும்.

இவ்வாறு பல ஆத்மார்த்தமான விழுமியங்களை இந்துக் கலாச்சாரம் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏனவே இத்தகைய கோட்பாடுகள் பற்பல நுற்றாண்டுகளிற்கு நிலைத்து நின்று எம்மக்களின் கலாச்சாரத்தின் சிறப்பைப் பறைசாற்றும் என்பது வெள்ளிடைமலை!

ஆக்கம்
பு. கீர்வாணி
விஞ்ஞான பீடம்.

# மதம் இங்கே மனிதம் எங்கே ?

(சமைப்போம் புதிய வழி..)

உணர்வுகளின் உன்னதமான உண்மைகள உதிர்க்கப்படும் போது உலக வாழ்க்கையின் தத்துவங்களும் யதார்த்த நிலையும் புரிந்து கொள்ளக் கூடியதாகவிருக்கும். ஆம்! இன்றைய மானிட சாதியின் வாழக்கை நிலையில் எண்ணிப்பார்த்தால் நீக்கமுடியாத ஏக்கமே மேலிடுகின்றது. மனிதனின் கடந்த வரலாற்றுச் சுவடுகளைத் திரும்பிப் பார்க்கையில் அவன் திறமையாக வாழ்ந்தது மட்டுமல்லாமல் வாழ்க்கையினில் அடிக்கடி நேர்ந்த இயற்கை இன்னல்களையும் வெற்றி பெற்றிருக்கின்றான். ஆனால் இன்றைய வாழ்க்கை முறையில் உலகமும் முழு மனித இனமும் மரணத்தின் வாயில் நோக்கி சென்று கொண்டிருப்பதற்கான சாவுமணியின் ஒலி மிகவும் துல்லியமாக உணரப்படக்கூடியதாக இருக்கின்றது இதற்கான காரணம்தான் என்ன? மனிதனால்கூட கட்டுப்படுத்தமுடியாத நிலைக்கு கட்டுமீறிப் போய் விட்டதா? ஏன் முடியாது? இவ்வாறான கேள்விகளிற்கு மிகவும் துல்லியமாகத் துரிதமாக விடை கண்டு செயலாற்ற மனிதன் சற்றும் தாமதித்தால் உலகின் அழிவை, மனித இனத்தின் அழிவை யாராலும் நிறுத்திவிட முடியாது போகும் என்பதில் சந்தேகமில்லை.

இவற்றிற்கெல்லாம் காரணமான பதில் மதம். உண்மை முற்றிலும் உண்மை மறுக்கப்படமுடியாத உண்மை. உலகம் தோன்றிய ஆதிகாலச் சமுதாயத்தைச் சற்று சிந்தித்து பார்ப்போம். தாய், தந்தை, சகோதரன் உறவுகள் அற்றுப் போய் விலங்குகளாய் அன்பு, உறவு என்பவற்றிற்கு அர்த்தமற்று சீர்கெட்டு பாழ்பட்டு வாழ்ந்து கொண்டிருந்த மனித சமுதாயம் வழிகாட்டப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையை கொண்ட சமுதாயமாக மாறுவதற்காக மனிதனால் அவனுக்காக அவனே உருவாக்கிச் சிரத்தையுடன் கடைப்பிடிக்கப்பட்டு ஒழுகப்பட்டு வந்தது தான் இந்த மதம் என்ற புனிதமான பாதை. ஆனால் இன்று நடப்பது என்ன? அன்று மனிதனை நெறிப்படுத்துவதற்கு உருவாக்கப்பட்ட மதங்களெல்லாம் இன்று மத வெறியை ஏற்படுத்தி, எதற்காக மதம் உருவாக்கப்பட்டது என வினவும் படி உள்ளன. மதம் என்ற பெயரால் எண்ணற்ற பல போர்களையும் அதனால் தோற்றுவிக்கப்படும் கறைபடிந்த சமுதாய அழிவையும் மரண ஓலங்களையும் கொடூரங்களையும் கண்ணுறும் போது மதத்தின் மீது ஆத்திரம் தோன்றுகின்றது.

மதம் பிடித்து விட்ட மனிதன் மதம் என்ற போர்வையில் மனித நேயத்தையே மறந்து விட்டான். மனிதம் இறந்து கொண்டிருக்கின்றது. மற்றைய விலங்குகளிலும் உயர்ந்த நிலையில் இருக்கும் மனிதன் பகுத்தறிவை பயன்படுத்த தவறிவிடுகின்றான் மனிதனுக்கே உரித்தான சிறப்பான மனிதத்தை குழிதோண்டிப் புதைத்து விட்டு அதன் கல்லறையின் மேல் சாதனைகளை அடுக்கி வருகின்றான் என்று எண்ணிடத் தோன்றினாலும் உண்மையில் நடப்பது என்ன? மனிதன் தனக்கு தானே புதைகுழியைத் தோண்டிக் கொண்டிருக்கின்றான் எம்முன்னோர் பார்த்து மகிழ்ந்த சந்திரனில் குடியேறிக்கூடாரம்கட்டும் சத்தம் கேட்கின்றது மனிதனின் அறிவுச்சுவடுகள் பதியாத மண்டலங்கள் இல்லை அண்டங்கள் இல்லை நினைத்து நினைத்து மகிழத்தக்க சாதனைதான், ஆனாலும்அதன் மகிழ்ச்சியை முழுவதுமாக துய்க்கமுடியவில்லை காரணம் உட்பகை ஓய்ந்த பாடில்லை. நிலவு உலகங்கள் கூட இணைக்கப்படுகின்றன, ஆனால் அடித்தளமான மனித உள்ளங்கள் பிரிந்துதான் கிடக்கின்றன வசதிகளும் செல்வங்களும செழித்து வளர்ந்து கொண்டிருந்தாலும் அல்லல் தரும் வறுமையின் பிடி மட்டும் சற்றும் தளர்ந்து விடவில்லை அறிவு வளர்ச்சிக் கருத்துக்கள் பெருகிக்கொண்டிருக்கின்றன. ஆனால் நமக்குள்ளே மோதிக்கொள்ளும் விலங்குணர்ச்சி போனபாடில்லை. உலாவும் மாளிகைகள் உயர்ந்து கிடக்கின்றன ஆனால் ஒழுக்கமும் மனித நேயமும் உயர்ந்ததாகவில்லை. சமயத்தின் திருத்தலங்கள் தோன்றின. ஆனால் சிறைச்சாலைகள் மூடப்படவில்லை கடவுளின் எல்லையற்ற கருணை பேசப்படுகின்றது, ஆனால் மனிதனில் இரக்கம் எள்ளளவிலும் சிந்தனையில் உருவாகவில்லை.

கல்வியின் ஆரம்ப வளர்ச்சியும் மதத்தின் அடிப்படையிலேயே தொடங்கப்பட்டு மனிதனை நல்வழிப்படுத்தி மனிதனை ஒழுக்க சீருடன் வாழ வழி வகுத்து வந்துள்ளது. மனிதன் தான் வாழ்ந்த இடத்திற்கேற்பவும் வழிகாட்டியவர்கள் கொண்டிருந்த நம்பிக்கைக்கும் வாழ்க்கை முறைக்கும் ஏற்றதாகவும் மதங்கள் வேறுபட்டுத்
தோன்றினவே தவிர அனைத்தும் சொல்லும் முடிவு ஒன்றுதான். சமாதானம், சாந்தி ,சகோதரத்துவம் என்பவற்றை இனம் மொழி நாடு வேறுபாடுகளிற்கு அப்பாற்பட்டு "அன்பே சிவம்" என்றும் மற்றவரின் துன்பத்தில் பங்கெடுங்கள்

எனவும் "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தை காட்டு" எனவும் சொல்லி மனித மாண்பை அறநெறிப்படச் செய்பவை தான் மதங்களே தவிர, மனிதர்களிடையே மதக் குரோதங்களை தூண்டிவிட்டு மனித நேயத்தை தேயவிட்டு மனித இனத்தையே மரணத்தின் விளிம்பிற்கு இட்டுச் செல்வதற்காக தோன்றவில்லை. எமது எதிர்கால வாழ்க்கை அமைதியற்றதாக, நிம்மதியற்றதாக அமைவதை தடுப்பதற்கு இளைய தலைமுறையினரான நாமாவது ஆழமாகச் சிந்தித்து, அன்புடன், மனித நேயத்துடனும் கூடிய இனிய புங்காவாக உலகத்தை மாற்றுவதற்கு உறுதி பூண்டு செயற்பட வேண்டிய அவசியத்தை அறிவோம்..

மதம் எமக்கு தடையல்ல அவை போதிப்பதும் கூட மனிதநேயம் கொண்டு அனைவரையும் அன்புடன் நோக்க வேண்டும் என்பதுதான். ஆனால் ஒருசிலர் சுயநல போர்வைக்குள் இருந்து கொண்டு இளைய சமுதாயத்தை அழிவுப் பாதைக்கு செல்லும் துரித வழிமுறையைப் போதிக்கின்றனர். மதம் இங்கு மனித நேயத்தை விற்பதற்கான ஆயுதமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது பொறுப்பானவர்கள் பொறுப்பற்றமுறையில் எம்மைவழிநடத்தி எம்மிடம் குரோத நஞ்சை ஊட்டிவருவதற்கு மதத்தை மிகவும் இலாவகமாக பயன்படுத்துகின்றனர். இதிலிருந்து இளைய தலைமுறையினர் ஆகிய நாம் விடுபட்டு அனைவரும் ஏகோபித்த குரலில் மதம் ஒன்றே, மனித இனம் ஒன்றே எம் முடிவும் ஒன்றே என்பதை உறுதிப் படுத்திக் கொண்டு எதிர்கால வாழ்வை வசந்தமாக்கி எமது எதிர்கால சந்ததியினருக்கும் நந்தவனமாக இப்பூமியை புனிதமாக்க வேண்டிய கடமைப்பாடு உண்டு. மதத்திற்கும், மனிதத்திற்கும் இடையிலான வேறுபாட்டை நாம் நீக்கி மீண்டும் இயற்கையுடன் கூடிய இனிய பாதையை சமைப்போம். எழுத்துக்களில் பொறித்து அச்சிடுவதிலும் மன்றங்கள் அமைத்து வாதிடுவதிலும் மட்டும் கருத்துக்களை கணக்கிடாமல் செயலாற்றும் திறன் கொண்ட சமுதாயக் கட்டமைப்பை நாம் ஏற்படுத்திக் கொள்வோம்..

எம்மிடம் மதம் என்பதில் மதம் பிடிக்காது தூரத்தே நின்று புதியதோர் உலகம் செய்வோம். உலகம் விரிந்து பரந்து பட்ட பரப்புடையது. மனிதர்கள் பலவிதமான வாழ்க்கை முறையினை மேற்கொள்கின்றனர். கருத்து வேறுபாடுகள் நிறையவே உண்டு. மொழி வேறுபாடும், சமய வேறுபாடும்உடையதாகத்தான் உலகம் அமையப் பெற்றுள்ளது. ஆனால் வேறுபாடுகள் உண்டாயினும் உயிர் ஈடேற்றம் என்ற இலட்சிய ஒருமைப்பாடு உலகத்தில் ஒன்றுதான். நதிகள் பல கிளைகளாகத் தோன்றினாலும் கடலன்னையின் மடியில்தான் இறுதியாக துயில் கொள்கின்றன. மதங்களிடையேயும் மனிதர்களிடையேயும் வேறுபாடுகள் இருக்கலாம். இவை வேறுபாடுகளே தவிர மாறுபாடுகள் அல்ல, வளர்ச்சியின் படிமுறைகள் இவற்றிடையே சமரசம் வேண்டும்.

குருதிச்சுவடுகளால் வரலாறு எழுதப்படுவதை தடுத்து நிறுத்துவோம்.. குற்றுயிராகும் மனித இனத்திற்கு புத்துயிர் கொடுத்து மனிதத்தைப் புகட்டுவோம். அழிவைவிட்டு ஆதரவை ஏற்படுத்துவோம் . அகந்தையைவிட்டு அன்பைப் போதிப்போம். மதவெறி வெறுத்து ஒதுக்கப்படட்டும். மனிதநேயம் துளிர்விடட்டும் இறைவனின் கண்களின் நீர்துளி உலர்ந்து போகட்டும். உலகமே புதிய பரிமாணத்துடன் பொலிவு பெறட்டும்..

மதவெறியே நீ மரணித்துப் போ.
மனித இனமே நீ ஜனனித்து வா
'நான்' 'நீ' எதுவும் நிஜமில்லை
நாம் என்பதுதான் உலக உண்மை.
அன்று மனிதனை மதங்கள் ஆக்கின
இன்று மனிதனை மதங்கள் தாக்கின
மனிதத்தை மனதில் விதைப்போம்.
அன்பும் பண்பும் கொண்டு நீர் வார்ப்போம்
அறிவும் பரிவும் கொண்டு உரமூட்டுவோம்
சமாதானமும் சகோதரத்துவமும் கொண்டு ஒளியூட்டுவோம்.
அமைதியும் நிம்மதியும் அதில் மலரும்
அண்டமெல்லாம் அதில் அடங்கும்
மனித இனம் மகிழ்ந்து வாழும்
தென்றல் என்றும் எமைத் தாலாட்டும்
முடிவுரையில் முடிவெடுப்போம்
இளைஞர் நாம் இனிதாய்
இவ்வுலகை மாற்றி அமைப்போம்
இன்றே அதற்கு வழி சமைப்போம்.

**A.Ithayavani**

# அறமும் கலையும் வளர்த்த எமது சமயம்

சமயம் என்பது மார்க்கம் ஆகும் .இது இறைவனை அடைவதற்குரிய வளியை எமக்கு காட்டுகிறது.அரிது அரிது மானிடர் ஆதல் அரிது என்பர் பெரியோர். மானிடப் பிறவி எடுத்ததன் பயன் பிறவிப் பெருங்கடலை நீத்த இறையடி சேர்தல் ஆகும் ஆறறிவு உடையவன் மனிதன் சிந்தித்து செயல் ஆற்றும் திறன் கொண்டவன் மனிதன் தான் காலடி எடுத்து வைக்கும் பாதை சரியானது என அவன் புத்திக்கு தகவல் தருவது அவன் அறிவே மனிதனை நல்வழியில் நடாத்துவதற்கு உருவாக்கப்பட்டவையே சங்ககால இலக்கியங்களும் புராணங்களும் .தொன்று தொட்டு இவ் இலக்கியப்படைப்புகள் நாடகங்களாகவும் பிரசங்கங்களாகவும் மேடையேற்றப்பட்டு வருவதனை அவதானிக்க முடிகின்றது .

மனிதன் இன்று ஏனைய விலங்குகளில் இருந்து உயர்ந்தவனாக வாழ்கின்றான் என்றால் அதற்கு அவன் தனக்கு தானே அமைத்துக் கொண்ட சட்டதிட்டங்களும் சமூக கட்டுப்பாடுகளுமே காரணமாகும் எந்தச்சட்டங்களும் தானாக பிறப்பெடுக்கவில்லை மனிதன் இவ்வாறுதான் வாழ வேண்டும் என்று அவன் வாழ்ந்த சமூகத்தினர் உருவாக்கியவையே இச்சம்பிரதாயங்களும் கோட்பாடுகளும் ஆகும் .இன்றும் இக் கலிகத்தில் எம்மை மனிதனாக வாழவைத்துக் கொண்டிருப்பது நம் மூதாதையர் நமக்காக உருவாக்கி பேணிக் காத்து வந்த சமூக கட்டுப்பாடுகளே அதற்கும் மேலாக எமது மனதில் அசைக்க முடியாதவாறு பதிகப்பட்ட இறை நம்பிக்கையும் ஆகும் . எமது அன்றாட வாழ்க்கையோடு இனைக்கப்பட்டது தான் சமயம் .சமயம் வேறு வாழ்க்கை வேறு என்பது தவறு அன்று மன்னர்களால் அமைக்கபட்ட ஆலயங்களையும் வழிபாடுகள் நடாத்தப்பட்ட முறைகளையும் சற்று உற்று நோக்கின் கலையும் அறமும் எவ்வாறு சமயத்துடன் பின்னிப் பிணைந்து வளர்ந்தது என்பதை அறியலாம் .

ஆலயத் தூண்களையும் கோபுரங்களையும் அலங்கரிக்கும் சிலைகள் சிற்பங்களின் கைவண்ணத்தை பறைசாற்றுகிறதல்லவா பண்ணோடு இசைபாடி இறைவனை வழிபட்டனர் அடியார்கள். அவர்கள் இறைவழிபாட்டுடன் இணைத்து இசைக்கலையை வளர்த்தனர் என்பதற்கு இது சிறந்த சான்றாகும் .விழாக்காலங்களில் ஆலயங்களை அழகுபடுத்தும் தோரணங்களும் கோலங்களும் மலர்மாலைகளும் அழகியற் கலைக்கு அன்றே அத்திவாரம் இடப்பட்டதை எடுத்துக்காட்டுகிறது ஆலயங்களில் இசைக்கப்படுகின்ற இசைக்கருவிகள் இசைக்கு மெருகூட்டி மேலும் இசைக் கலையை சிறப்படையச் செய்கினறது .இதற்கும் மேலாக உயிரை நல்வழில் இயங்கச் செய்வதற்குரிய கல்வியறிவை குருகுலமரபாக வழங்கி வந்தனர் நம் முன்னோர் .இன்று இங்கு இம் முறைகள் மறைந்தும் ஒழிதும் போனது காலத்தின் மாற்றமே ஆனாலும் ஏனய கலைகள் நம் சமூகத்தினரால் போற்றப்பட்டு அழிந்து போகாது காக்கப்படுகின்றது. இக் கலைகளின் ஆரம்ப தோற்றுவாய் ஆலயங்களே.

மனிதரிடையே இறைநம்பிக்கையை ஏற்படுத்தி அவனை தீயவழியில் செல்லாது நல்வழிப்படுத்தியது சமயமே .இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற நம்பிக்கை இல்லாதிருப்பின் எவ் உயிரும் பாவங்களைச் செய்ய தயக்கம் கொள்ளாது அரசன் அன்று கொல்வான் தெய்வம் நின்று கொல்லும் என்று கூறுவார்கள். இதனை அறியாதவர்கள் எவரும் இருக்கமாட்டார்கள் என்றே கூறலாம் நல்வினை செய்த ஆன்மாவே இறைவனை அடைகின்றது. தீவினை செய்த ஆன்மாவே மீண்டும் பிறவிகளை எடுத்து வருந்துகின்றது. என்றும் எங்கும் நன்மையே விளைக என்று எண்ண வேண்டும் என எமக்கு அறிவு புகட்டியது எமது சமயம் .

இது ஒருபுறம் இருக்க இன்று சிலர் இறைவன் இல்லை சமயம் என்பது மூடநம்பிக்கை என்று கூற தலைப் படுகின்றனர் . ஆலயங்களும் அபிசேகங்களும் எதற்கு?கோலங்கள் கொடிகள் கொட்டும் முழக்கங்கள் எதற்கு? என்று நாகூசாமல் நாத்திகம் பேச முற்படுகின்றனர். எமக்கும் மேலே ஒரு சக்தி உண்டு அதனை மனதை ஒருமுகப்படுத்தி வழிபடுவதற்காக அமைக்கப்பட்டவையே ஆலயங்கள். இன்று விஞ்ஞானம் வளர்ந்தும் பல கிரகங்கள் சென்றும் பல்வேறு கண்டுபிடிப்புகள் உருவாக்கப்பட்டும் நாட்கள் பல ஆகிவிட்டது. ஆனால் எல்லாவற்றையும் இயக்கிக் கொண்டு ஒரு சக்தி இருப்பதை விஞ்ஞானிகளால் கூட மறுக்க முடியாது. அவர்கள் மறுக்கவும் முற்படவில்லை. ஏன் எனில் எல்லா இடங்களிலும் சக்தி வியாபித்திருப்பது உண்மை என்பதை அனுபவ வாயிலாக அறிந்துள்ளார்கள்.

நம்பினார் கெடுவதில்லை என்று கூறுவார்கள். அது வெறும் கூற்று அல்ல என்பதை தாம் கடந்து வந்த காலங்களை சற்றுத் திருப்பி நோக்கின் நன்கு புலப்படும். இறையடியவர்களின் வாழ்க்கை வரலாறுகளும் புராணக்கதைகளும் நமக்கு எடுத்துக் கூறுவது இறை நம்பிக்கையே. இறைவன் தம்பக்தர்களுக்கு வேதனை நிறைந்த சோதனைகளைக் கொடுத்து அவர்களை ஆண்டு அருள்கின்றான். நமக்கு சோதனைகளை கொடுப்பதன் மூலமே நம்மை சாதனைகள் படைக்க வைக்கின்றான் எம்மை சிந்திக்கத் தூண்டுகின்றான். பிற உயிர்களுக்கு தீங்கின்றி வாழ வழிகாட்டுகின்றான். அறநெறியில் செல்லத் தூண்டுகின்றான்.

சங்ககாலத்தில் வாழ்ந்தவர்கள் அறநெறியை பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். இல்லற வாழ்விலும் துறவறத்திலும் அறம் செய்க என்று பல்வேறு வழிகளினால் மக்களுக்கு புலப்படுத்தினர். இளமையும் யாக்கையும் செல்வமும் என்றும் நிலைக்காது. இளமையே கால சக்கர சூழற்சியில் முதுமையாகிவிடும். செல்வமோ இன்று வரும் நாளை ஓடும். யாக்கையின் மதிப்போ அதனுள் உயிர் இருந்து இயங்கும் வரை. உலகத்தில் வந்துதிக்கும் போது எவரும் எதனையும் கொண்டு வருவதில்லை. உலகைவிட்டு பிரியும் போதும் எதனையும் எடுத்துச் செல்லப்போவதில்லை. ஆனால் எம்முடன் தொடர்ந்து வரப்போவது நாம் புரியும் பாவ புண்ணியங்களே.

காலன் எம்மை கவர்ந்து செல்லக்காத்திருக்கின்றான் என்பதை அறிந்து இன்று முதலே அறம் செய்ய விளைக என்பதை நாலடியார் பின்வருமாறு எடுத்துக் கூறுகிறார்.

" இன்று கொல் அன்று கொல் என்றுகொல் என்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் தீயவை ஒல்லும் வகையால்
மருவுமன் மாண்டார் அறம் "

ஔவையாரும் அறநெறியை "*அறம் செய்ய விரும்பு, ஈவது விலக்கேல், ஐயம் இட்டுண்*" என்று பலதடைவைகளில் பலவாறு வலியுறுத்துகிறார்.

ஆலயங்களில் வழங்கப்படுகின்ற அன்னதானங்கள், குருகுல மரபாக புகட்டப்படும் வித்தியா தானம் அறநெறியை வளர்ப்பதில் அவர்கள் காட்டிய ஆர்வத்தையே எடுத்துக் கூறுகிறது.

எமது சமயம் அன்று தொட்டு இன்று வரை அறநெறி வழுவாது வாழ்வுடன் கூடவே கலையையும் வளர்த்துள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மையாகும்.

அறநெறிகள் தளைத்தோங்கி மிகுசைவத் துறை விளங்கி கலைவளர்க.

**து. மகிழ்நங்கை**

# திரை இசைப் பாடல்களில் தமிழ் இனிமை

புதிய திரை இசைப் பாடல்களில் தமிழ் இனிமை குன்றிவிட்டது எனற பரவலான கருத்துகள் உலா வருகிறது அதில் உண்மை இல்லாமல் இல்லை ஆனால் அன்னம் போன்று வாழப் பளகிக் கொண்டால் அதில் உள்ள இனிமை புரியும்.

வெண்ணிலாவை கவியாக்காத கவிஞன் இல்லை எனலாம் எந்த கவிஞனும் முத்திரை பதிப்பது வெண்ணிலவில்தான் வெள்ளி நிலவை பெண்ணாக வர்ணித்த முன்னய கவிஞர்களை தற்கால கவிஞர்னளை தற்கால கவிஞனின் கற்பனை வென்றுவிட்டது.இந்த கவிஞனோ 'வெண்ணிலவே வெண்ணிலவே விண்ணைத்
தாண்டீ வருவாயா? வீளையாட ஜோடி தேவை 'என்கின்றான்.மேலும் தனது புத்தி சாதுரீயத்தை இவ்வாறு வெளிப்படுத்துகின்றான். 'இந்த பூலோகத்தில் யாரும் பார்க்கும் முன்பே உன்னை அதிகாலை அனுப்பிவைப்பேன் மற்றையவன் அதன் காலக்கிரமத்தை விபரிக்கின்றான். 'நீ மாலையில் மலர்வதும் காலையில் மறைவதும் என்னடி விளையாட்டு'.

கவீஞர்கள் பெண்ணிண் அழகை வருடாத கவீக்கோலங்கள் எத்தனை எத்தனை.ஆண் கவிஞர்கள் அதிகரித்ததால் இந்த நீலையோ?அவன் வருணணைகள் இனிமையானவை! இளமையானவை! வானவில்லின் துண்டோன்று மண்ணில் வந்து யாருக்கும் சொல்லாமல் பெண்மையானது மற்றையவன் பிரமனையே கையேந்த வைக்கின்றான்.பெண்ணிண் அழகால் உன்னைச் செய்த பிரமனே உன்னைப்பார்த்து ஏங்குவான்.காதல் பிச்சை வாங்குவான்.நளவெண்பாவில் கவிஞன் வர்ணித்த இடையழகு இங்கு இருந்த இடம் தெரியாமல் கலைந்து போகின்றது. பெண்ணே உனது மெல்லிடை பார்த்தேன் அடடா பிரமன் கஞ்சனடி இயற்கை அழகை பருகும் கவிஞர்கள் கூற்று இத்தகையது. ஒரு பூ எழுதும் கவிதை சிறு தேன் துளியாய் உருளும் நதி நீர் எழுதும் கவிதை அலை ஓவியமாய் விரியும் .என்ன விந்தையான கற்பனை.கவிஞன் இயற்கையை வியக்கும் அழகே அழகு. எட்டாத உயரத்தில் நிலவை வைத்தவன் யாரு கையோடு சிக்காமல் காற்றை வைத்தவன் யாரு இயற்கையால் இயல்பாய் நிகழும் அதிசயங்களை கவிஞன் இவ்வாறு காண்கின்றான். பூவுக்குள் ஒளிந்திருக்கும் கனிக்கூட்டம் அதிசயம் வண்ணத்துப்பூச்சி உடம்பில் ஓவியங்கள் அதிசயம் இயற்கையோடு ஒட்டியதாய் தன் காதலை வெளிப்படுத்தும் இந்த காதலனின் பாங்கு போற்றுதற்குரியது. உன்னோடு நான் கொண்ட சொந்தம் மண்ணோடு மழை கொண்ட பந்தம் காய்ந்தாலும் அடி ஈரம் எஞ்சும் கல் ஒன்று தடை செய்த போதும் புல் ஒன்று புது வேர்கள் போடும் எவ்வளவு உண்மையான வார்த்தைகள்! மேலும் தத்துவக்கருத்துக்கும் பஞ்சமில்லை. இரண்டாம் எட்டில் கற்காதது கல்வியும் அல்ல என்பதன் மூலம் கல்வியினது கால நிலைப்பாட்டை வெளிக்கொணருகின்றான்.
மனிதனுக்காக இறுதி அறிவுரை இத்தகையது. கையில் என்ன கொண்டு வந்தோம் கொண்டு செல்ல மனிதனின் புதுப் பரிமாணம் இதன் மூலம் வெளியாகிறது. யாருக்கும் தீங்கின்றி வாழ்பவன் மனிதன் ஊருக்கே வாழ்ந்து உயர்ந்தவன் புனிதன் காதலை உணர்த்தும் பெண்மை இவ்வாறு அமைகின்றது. □ஒரு நாள் எனை சோதித்துப் பார் ஒரு வார்த்தைக்கு உயிர் தருவேன் அக நானூற்றுக் காதலுக்கு ஒப்பான வார்த்தை பிரயோகம் இங்கே! செம்புனல் சேர்ந்த நீர்த்துளிபோல் அம்புனை நெஞ்சம் கலந்தது என்ன உலகைப் பற்றிய கவிஞனின் ஏக்கங்கள் ஆசைகள் எத்துணை ரம்மியமானவை யுத்தம் இல்லாத பூமி ஒரு சத்தமில்லாமல் வேண்டும்
தமிழில் குயில் பாட வேண்டும் பனித்துளிக்குள் நானும் படுத்துக் கொள்ள ஆசை அலையும் கடலும் வருடுகையில் என்ன பாஷை பேசிடுமோ? விஞ்ஞான கருத்துக்களை கொண்டு அமைந்த வரிகள் இவை நிலவில் பொருள்கள் எடை இழக்கும் நீரிலும் பொருள் எடை இழக்கும் என்று பல விஞ்ஞானிகளை நினைவு கூர்ந்துவிட்டு தானும் ஒரு □காதல்விதி உரைக்கின்றன காதலில் கூட எடை இழக்கும் கண்டு கொண்டேனடி தாழம்பூக்கள் இரவில் பூக்கின்றன நாம் அறிந்ததே. ஆனால் கவிஞன் காண்பது மின்னொளியில் மலர்வன தாழம்பூக்கள் மற்றும் புது வகையான காதல் பூக்கள் இவ்வாறு மலருகின்றனவாம். கண்ணொளியில் மலர்வன காதல் பூக்கள். எனவே திரை இசையில் உள்ள உயர்வை மட்டும் காண்போம்

*With Best Complements from*

# K. K. R. BUILDERS

NO. 44, 33 RD LANE
COLOMBO - 06
TEL , FAX : 594061

# மதநம்பிக்கை

இன்றும் பெரும்பாலானோர் மதம் தெய்வம் என்பவற்றில் நம்பிக்கையில்லாமல் அவைகளை பற்றிக் கேலி செய்வதையும் காணமுடிகிறது. இவர்கள் தாங்கள் பகுத்தறிவாளர்கள் நாத்திகவாதிகள் என்று அழைத்து கொள்கிறார்கள். இவர்கள் பகுத்தறிவு எனும் அம்சத்தை தவறாக விளங்கி கொண்டுள்ளார்கள் பகுத்தறிவு என்பது எல்லா மனிதர்களுக்கும் பொதுவானதுதான். மனிதனை மிருகங்களில் இருந்து பிரித்துக் காட்டும் ஆறாவது அறிவுதான் பகுத்தறிவு எனப்படுகிறது. இவள் என்னுடைய மனைவி, தாய் இவர் என் கணவர், தகப்பன், சகோதரன் என கண்ணுக்கும் மனதுக்கும் சொல்வதும் இந்த பகுத்தறிவுதான் ஒருவன் என்னதான் குடித்திருந்தாலும் கூட தன் தாயை தாரமாக நினைப்பதில்லை. இது தான் மயங்க வைக்கும் குடியிலும் கூட மிதமிஞ்சி நிற்கும் பகுத்தறிவு.இது தாம் பகுத்தறிவாளர்கள் என்று தங்களை அழைத்து கொள்பவர்களிடம்
மட்டும் தான் காணப்படுகிறதா?.....

தெய்வம் இல்லை என்பவர்கள்; எல்லாம் இயற்கையாய் இடம்பெறுகிறது நியதிப்படி இடம் பெறுகிறது என வாதிடுகிறார்கள். அப்படியாயின் ஏன் ஒரு மனிதன் இறந்தபிறகு சடலம் தானாக காட்டுக்கு போவதில்லை? அதற்கு மட்டும் ஏன் நான்கு பேர் தூக்கிகொண்டு போக தேவைப்படுகிறார்கள். ஒரு தம்பதிக்கு அழகான குழந்தை பிறக்க மற்றொரு தம்பதிக்கு ஏன் குழந்தையே பிறப்பதில்லை? சிலர் நன்றாக பிறக்க சிலர் ஊனமாக பிறக்கிறார்களே இது ஏன்? உள்ளே இழுக்கப்படும் காற்றைப் பாதுகாக்க
உடம்பில் எந்த அடைப்பான்களும் இல்லை. ஆனால் துவாரங்கள் ஒன்பது இருக்கின்றன.:.
இதற்கு என்ன விளக்கம் கொடுக்கிறார்கள்?

மத நம்பிக்கை, இறை அச்சம் என்பது இன்றைய காலத்தில் மிகவும் அவசியமாகிறது. மேல் நாட்டவர்கள் இன்று இறை நம்பிக்கையை நாடி வருகிறார்கள். இதற்கு மேல் நாட்டில் கட்டப்படும் பெரிய கோவில்களும், ஆச்சிரமங்களும் சான்றாகிறது. மத நம்பிக்கை அடிப்படையில் தான் அன்றைக்கே நமது மன்னர்கள் பெரும் பெரும் கோவில்களை கட்டிவைத்தார்கள். விஞ்ஞானிகள் கூட நமக்கு மேலான ஒரு சக்தி இருப்பதாக ஒபபுக்கொண்டுள்ளார்கள். அவர்களும் மதம், தெய்வம என்று அவற்றை நாடுகிறார்கள் தனக்கு மேல் ஒன்றும் இல்லை என்று அகங்காரம் பிடித்தவன் இறுதியில் அழிகிறான்.

இன்றைய உலகில் மனிதன் மனிதனாக வாழ மதநம்பிக்கை அவசியம் மனிதனையும் மிருகங்களையும் பற்றிக் காஞ்சிப் பெரியவர் பின்வருமாறு கூறுகிறார் "மிருகங்கள் குறுக்கு வாட்டில் வளருகின்றன மனிதன் உயர்ந்து மேல் நோக்கி வளர்கிறான்" இதனால் மனிதன் மற்ற பிராணிகளை காட்டிலும் மேலான நோக்கத்தை பெற வேண்டும். இதனால் இவன் தான், மற்ற எல்லா இனங்களையும் விட அதிகமான சுகத்தை அனுபவிக்க வேண்டும் ஆனால் நடைமுறையில் அவைகளை விட துன்பத்தைதான் அனுபவிக்கறோம்.
மிருகங்களுக்கு நம்மைப் போல் காமம், கவலை, துக்கம், அவமானம் இல்லை. எல்லாவற்றுக்கும் மேலாக அவற்றுக்கு பாவமே இல்லை. பாவங்களை செய்து துக்கங்களை நாம் தான் அனுபவிக்கிறோம்.

குளிரிலிருந்து காப்பாற்றி கொள்ள கம்பளி நெய்யும் அறிவையும், குதிரை மீதேறி அதன் வேகத்தை உபயோகபடுத்தவும், வெளியிலிருந்து தேவையான ஆயதங்களை செய்யும் அறிவையும் பெற்றிருக்கிறான். எந்த இடத்திலும் வாழ்வதற்கு சூழலை தன்வயப்படுத்திக்கொள்ளும் நுட்பத்தையும் கொண்டிருக்கிறான். முதலில் மனிதன் மிருகமாக இல்லாமல் மனிதனாக மாற வேண்டும்.அதற்கு மத

நம்பிக்கை மிகவும் அவசியம். இந்த குறகோளுடன் தான் சகல மதங்களும் உண்டாகி இருக்கின்றன. மனிதனை நல்லவனாக்கி அனபு, அடக்கம், சாந்தம், தியாகம் முதலிய குணங்கள் உள்ளவனாக மாற்ற வேண்டும் என்பதலேயெ எல்லா மதங்களும் பாடுபடுகின்றன.

கடவுளை நம்புவதில் ஒரு சுகம் இருக்கிறது கஷ்டங்களை தீர்த்து வைக்கிறதொ இல்லையொ தீர்ந்து விட்டது போன்ற ஒரு நிம்மதி ஏற்படுகிறது. அமைதியை வரவழைப்பதற்காவது ஆண்டவன் பேரில் நம்பிக்கை வேண்டும். ஆகவே இறை அச்சம் கொள்ளுங்கள். இறையச்சம் உள்ளவர்கள் தவறு செய்ய பயப்படுவார்கள். பெற்றோர்களெ உங்கள் குழந்தைகளை மத நம்பிக்கையுடன் இறைவன் பற்றிய செய்திகூறி வளருங்கள் உங்கள் குழந்தை நிச்சயம் எதிர் காலத்தில் சிறந்த நற்பண்புள்ள பிரஜையாக வளருவான் என்பதை உறுதியாக கூறி விடை பெறுகிறேன்.

சோ.ஃசுபாஷ்
இறுதியாண்டு
முகாமைத்துவ நிதி பீடம்

---

கூர்மை

உலகிலே உர்மை எது என்றேன்
விழி வீச்சு என்றது பெண்மனது
வாள் வீச்சு என்றது போர்முனை
சொல் வீச்சு என்றது கவி மனது
அதைக் கேட்டு முறுவலித்தது நான் அல்ல
எனது பேனாமுனை

---

ஓர் தகவல்

சக்கரவாகம்

தமிழ் இலக்கியத்தின் பீனிக்ஸ் பறவை
அதற்கு இரண்டு பண்புகள் இயல்பானவை
ஒன்று அது மழைத்துளியை மட்டுமே அருந்தி வாழும் ஓர் அரிய புள்ளினம்
மற்றையது தன் ஜோடியை இழந்த மறுகணமே தன் உயிரையும்
மாய்த்துக் கொள்ளும் அதன் குணாம்சம்.

# காலத்தின் அருமை

காலம் பொன்னானது. அதன் விலை மதிப்பிட முடியாதது. காலத்தை நாம் எவ்வகையில் பயன்படுத்துகின்றோமோ அதற்குத் தக்கதாக அதன் பயன் அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

காலம் கணம் கணமாக கழியுந் தன்மையுடையது. இழந்த காலத்தை கோடி பொன் கொடுத்தாலும் திரும்பிப் பெறுதல் துர்லபம். மக்களாக பிறந்தார்க்கு ஆயுள் நூறு வருடங்கள் என்று அறிஞர்கள் வகுத்துள்ள போதிலும் இன்று மனிதன் எழுபது எண்பது வயதுக்கு மேல் வாழ்வது அருமையாகிவிட்டது. ஒருவனுக்கு வகுக்கப்பட்ட ஆயுள் காலத்தில் அரைப்பகுதி நித்திரையில் கழிகிறது. இளமை, முதுமைக்காக பத்துப் பத்தாக இருபது வருடங்கள் ஒழிய பயன் பெறுவதற்காக எஞ்சியிருப்பது இருபது வருடங்களே. ஏனெனில் சில காலம் நோய்நொடி, இன்பதுன்பங்களாக கழிந்துவிடும். எஞ்சியுள்ள இருபது வருட காலப்பகுதியே வாழ்வின் மிக முக்கிய பகுதியாகும். இக்காலகட்டத்திலே தாங்கள் பிறகாலத்தை கல்வி என்னும் கற்களைக்கொண்டு உறுதியாக கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்.

வாழ்க்கை வாழ்வதற்கே என்றாலும் தீய வழிகளில் காலத்தை வீணாக்கி உல்லாசமாக வாழ்வதற்காக அல்ல வாழ்க்கை. இவ்வாறு வாழ்பவர்கள் பிற்காலத்தில் காலத்தின் அருமையை எண்ணி மனம் வருந்துவர். சிறந்த முறையில் சேவை மனப்பான்மையுடன் காலத்தை செலவழித்து மற்றவர் போற்ற வாழும் வாழ்க்கையையே ஒருவர் குறிக்கோளாகக் கொள்ள வேண்டும். இல்லாவிடில் காலத்தை தேவையற்ற முறையில் வீணாக்கியதை இட்டு கவலைப்பட வேண்டி நேரிடும். வாழ்ந்த வாழ்க்கை வாழும் வாழ்க்கைக்கு ஆதாரமானது. வாழும் வாழ்க்கை வாழப்போகும் வாழ்க்கைக்கு ஆதாரமானது. எனவே செலவழிக்கும் ஒவ்வெரு கணமும் சிறந்த முறையில் பிரயோசனமாக செலவழிக்க வேண்டும்.

இன்று உலகம் போற்றும் பெரியார்கள் ஆகிய மகாத்மா, நேரு, வள்ளுவர் போன்றோர் மிகவும் உன்னத நிலையை அடைய உறுதுணையாக அமைந்தது அவர்கள் காலத்தை மதித்து அதற்குத் தக்கவாறு தம் ஆற்றலைப் பயன்படுத்திச் செய்த காரியங்களேயாகும். மற்றும் இன்று நம்மை பிரமிக்க வைக்கும் விஞ்ஞான கண்டுபிடிப்புக்களும் சாதனங்களும் காலத்தைத் தக்க வழியில் பயனுள்ளதாய் செலவழித்ததால் பெற்ற அளப்பரிய பயன்களே ஆகும்.

இன்று நம்மிடையே சிலர் படித்துப் பட்டம் பெற்று உயர் வாழ்வு வாழ, சிலர் முற்றிலும் முரண்பட்ட நிலையில் வறுமைப் பிடியில் சிக்கித் தவித்துக்கொண்டிருக்கும் நிலைக்குக் காரணம் தான் என்ன? காலத்தின் அருமையை உணராது வீணான வழிகளில் செலவிட்டமையே ஆகும். துன்பங்களை விலை கொடுத்து வாங்கி துன்ப வாழ்க்கை வாழும் மக்கள் காலத்தின் அருமையை மதிப்பை உணராது வாழ்ந்த வாழ்க்கையின் பெறுபேறு இதுவாகும், என்று கட்டாயம் ஒரு கட்டத்தில் உணரத்தான் செய்வார்கள்.

இளமையில் கல்வி சிலையில் எழுத்து எனும் சான்றோர் முதுமொழிக்கு அமைய கல்விக்கு என்று ஒதுக்கப்பட்ட இளமை என்னும் பொன்னான காலத்தை ஒரு சிறு கணமேனும் வீணாக்காது பொன் போல் கருதிப் பயனுள்ளதாக ஆக்கிக்கொள்ள வேண்டும். அதுமட்டுமல்ல கற்றபடி நடந்து தனது வீட்டுக்கும், நாட்டுக்கும் பயனுள்ள பிரஜையாக நாம் வாழ வேண்டும்.

காலத்தின் அருமையை உணராது வாழும் மக்களுக்கு நல்வழி காட்டி அவர்களை ஆக்கப்பாதையில் இட்டுச் செல்லும் சிறந்த பணியில் நாம் முயற்சிப்போம். பொன்னான காலத்தின் ஒவ்வொரு நொடிப் பொழுதையும், ஒவ்வொரு சிறு கணத்தையும் மிகவும் பயனுள்ளதாக்கும் முறையை நமது எதிர்கால சமுதாயத்திற்கு எடுத்து கூறி அவர்களை நல்வழியில் வாழ்வதற்கு உதவி செய்ய வேண்டியது நம் ஒவ்வொருவரினதும் கடமை.

" வாழ்க்கை வாழ்வதற்கே என்றாலும் தீய வழிகளில் காலத்தை வீணாக்கி உல்லாசமாக வாழ்வதற்காக அல்ல வாழ்க்கை "

சசிப்பிரபா ஸ்ரீபத்மாதரன்
விஞ்ஞானபீடம்

*With Best Complements from*

MACK LOGISTICS(PVT)LTD.
MACK LOGISTICS
INTERNATIONAL FREIGHT FORWARDERS

170, GINTHUPITIYA STREET,
COLOMBO - 13.
TEL : 471437
FAX : 421429
EMAIL : gigroup@eureka.lk

SEA- LLOYDS SHIPPING (PTE) LTD.,

4th Floor Building, Sir Baron Jeyatilaka Mawatha, Colombo - 01, Srilanka.

Tel. : 077-316002, 077-314587, 074-717421
E.mail : sea-lloyd@sri.lanka.net


Director
G.J.Group
G.J. Enterprises
170, Ginthupitiya Street,
Colombo 13,
Tel : 471437, 471438
Fax : 421429
Director
G.J.Firms PVT Ltd
SPEEDY CARGO SERVICES (PVT) LTD
3rd Floor No. 47 Hospital Street
Col-01
Tel: 336027/28

# தமிழ் மனமே!

கல்விக் கரையன் கரைதேடும் கப்பல்கள்
பல்கலை மாணவர் நாம் - தப்பில்லை
மேற்படிப்புக்காக மேல் தேசம் சென்றிடலாம் - நாளையேனும்
நேற்று வாழ்ந்த தாய்மண்ணில் தரை தட்டி நிற்போமேல் - நிரந்தரமாய்

காற்று வசதி அறைகளிலே கம்ப்யூட்டரிலே
வேற்று நாட்டுத் தொடர்பு எடுத்துத் தமிழ்வாழும் ஆசியாவில்
ஊற்றெடுக்கும் முதன் மொழியாய் எம்மக்கள் வடகிழக்கில்
காற்றுக்கும் காப்பின்றி கடுயுத்த மத்தியிலே ஆய்பிழுத்து ஆழுகின்றார்

எண்ணத்தை ஒவியமாய் எழுத்துருவாய் நாம் வடிக்க
எண்ணெழுத்துப் படிக்கவே எழுது தாள் தேடி எங்கள்
கண்ணொத்த தம்பி தங்கையர் கால்வயிற்று உணவுடன்
கண்விழித்திருக்கின்றார் கருங்குப்பி விளக்கருகில்



இளையவரே
ஈரிதயம் ஒருடலில் நீர தாய்வயிற்றில் அன்று
வேறிதயம் உம்முயிரில் காதலிலே இன்று
இதயத்திற் கிடம் தந்த பேரிதயம் விரும்பாதேல்
ஆர் இதயம் கிடைத்தென்ன அவ்விதயம் போல்வருமா

பெரியவரே
இலக்கியத்தில் இராமசீதை இணைவது இனிமை என்றால்
கலக்கமுற வேண்டா ? காதல் மணம் நல்லதன்றோ
உலகியலில்  உருதிருக்கள் உயர்வுகள் தரா அமைதி
உள்ளமிரண்  டிணைகையிலே உருவாகும் இது உறுதி

தீ புயல் எறிகணைகள் திக்கெட்டும் விழட்டும்
தினம் கடன் வேலையில்லாத் திண்டாட்டம் ஏறட்டும்
இனம் மொழி மத பேதம் இல்லாமல் கிரிக்கட்டால்
இலங்கைமணி நாடுலக் கோப்பையுள் மூழ்கிடுமே
-தொலைவுக்காட்சியிலே

உழவன்
கழன்றும் அவன் பின்ன துலகம் ஏருழவால்
களைகள் களையப்படும் களி மணல் மண் கலக்கப்படும்
காற்று நீர போய்வரவே  மண்துளைகள் அமைக்கப்படும்
ஊற்றெடுக்கும் பயிரினங்கள் உருவாகி உவகை தரும்

இன்றிலிருந்து இறைவனுக்கு அன்பென்று பெயரிடுவோம்
இருப்பவன் ஒருவனென்றால் உன்னவனும் என்னவனே
இருபத்தோராம் நூற்றாண்டில் இனியெதற்கு மத பேதம்
இந்நாட்டுச் சமயமெல்லாம் இணையட்டும் இச்சமயம்

காரிருள் கானகம் கவலைகள் சூழ
காத்திருக் கின்றனர் தரிப்பிடம் மீள
ஆவியே மீதமாய் யாவுமே போனதால்
அகதி யாகவும் அதிட்டம் அற்றவர்

அந்தியில்
பரிதி தேடிப் பகல் தேடுதல்
பாவிகளின் பழக்கம்
இரவானால் என்ன - இன்று
இன்பமாக இரு - நாளையும்
இரவி வரும்

இலையே இது உன் மரம்
வேர்விழுதைவிடக் கிளைகளால் நீ
உயர்ந்து விட்டாய் உச்சிக்கொப்பில்
பச்சைப்பட்டம் பெற்ற உடன்
பறந்து போக நினைத்தால்
சருகாகி மண்ணில் விழவேண்டும்





கருத்து தி .திவாகரன்.
ஓவியம் யோ .ருத்திரா
மருத்துவ பீடம்

# தேடல்

பிறந்த குழந்தை கதகதப்பு தேடும்
பின்னர் தாயவள் முலைக்காம்பு நாடும்
வளர்ந்த பிள்ளை வார்த்தைகள் தேடும்
வார்த்தைகள் மூலம் வாழ்க்கையை நாடும்
இளமை வந்தபின் காதலைத் தேடும்–அது
இடையறுபட்டால் சாதலை நாடும்
இணைந்து விட்டால் முயக்கம் தேடும்–அதில்
பிறந்த குழந்தை முலைக்காம்பு நாடும்

இறந்த பின்னர் இனி என்ன தேடும்?
இருந்த சுவடுகள் மறைந்தே போகும்
பிறந்து, வளர்ந்து, மணந்து, இறக்கும்
பிழைப்பே தேடல் ஆனதன் பிறகும்
தேடும் நினைப்பே தோன்றாமல் தேடும்
தேடித் தேடியே வாழ்க்கை ஓடும்–இந்த
தேடலைத் தேடும் தேடல் தீருமா?–அந்த
தேடனைத் தேடும் தேடல் கைகூடுமா?

–அநாமிகன்–
மருத்துவபீடம்
(கொழும்பு பல்கலைக்கழகம்)

---

<u>ஞாபகம்</u>

வானத்தில் வெண்ணிலாவைப் பார்க்கையிலே
என் வாழ்விலே வெண்ணிலவாய் வந்த அவளது முகம் ஞாபகம்
துள்ளி ஓடும் இளம் அருவியை ரசிக்கையிலே
என்னவள் நடந்துவரும் நடையழகு ஞாபகம்
வானத்தில் நட்சத்திரங்கள் மின்னுவதைப் பார்க்கையிலே
எனதுயிரான அவளின் சிரிப்பழகு ஞாபகம்
மயிலின் தோகையைக் காண்கையிலே
என் இனியவளின் கூந்தலழகை கண்டுகளித்த ஞாபகம்
மொட்டு விரிந்த ரோஜாவை பார்க்கையிலே
என் பிரியமானவளின் மலர்ந்த முகத்தை பார்த்த ஞாபகம்

வி. கிருபாலர்
மருத்துவபீடம்

*With Best Complements from*

# CAVADI CAMPHOR

SOLE DISTRIBUTER
PRABA TRADING CO,
31, GABO'S LANE
COLOMBO 11.
TEL 329426

# ஒழுக்கம் விழுப்பம்......

ஓ........சோதரனே!
பண்பாடு தமிழரின் பரம்பரை சொத்து!
பாரம்பரியம் மிக்க நம் பண்பாடு
பரம்பரை பரம்பரையாக—கட்டிக்காத்த எம்
பண்பாடு எங்கே மறைந்து விட்டது?
ஒழுங்காக கடைப்பிடித்து வந்த—நம்
ஒழுக்கம் எங்கே புதைந்து விட்டது?
புதைகுழியிலா...? ஆழ்கடலிலா...?
புதைந்து விட்டோம் நாம்—இப்போ
புண்பட்ட மேனியாய், தொலைத்துவிட்டோம்
புன்னகையை...!எங்கே அது...?
எய்ட்ஸ் என்னும் அரக்கனின்... நண்பனாய்...!
என்றுமே நிரந்தரமற்ற நட்பு அது...!
வயோதிபத்தில் நான் இழந்ததை தேடுவதோ?
வருமுன் காப்பது முறையன்றோ....! சோதரா...
நாம் எதையும் இழக்காத வரை எதையும்
நாடாதவரை— அவசியம் இல்லை
தேடலுக்கு....! நண்பா....!
பொன்னான வாழ்வை மண்ணாக்காதே
பண்பட்ட வாழ்வை சீர்குலைக்காதே
கண்கெட்ட பின்பா சூரியநமஸ்காரம்
கண்டதே காதல்... கொண்டதே கோலம்
என்றவர் கண்டதென்ன லாபம்...?
கற்றது பாதி... கல்லாதது மீதி...
இரும்கையில்.... ஒரு கையில் மதுப்புட்டியுடனும்
மறுகையில்... புகைப் பெட்டியுடனும்...
தங்கையராய் நினைக்க வேண்டிய
மங்கையரை தேடி அலைகிறாயே
ஏங்கே போனது ஒழுக்கம் – உன்
அறிவு ஏன் இன்னமும் மழுக்கம் – வா
சோதரா போடுவோம் அதற்கெதிராய் முழக்கம்
சாதிக்க வேண்டியத இன்னும் எத்தனை
உன்னை நீயாயே சோதிக்கிறாயே –
போதிக்கிறேன் சோதரா...!
பொன்னான உன் நேரத்தை வீணாக்காதே
வீணர்களுடன் சேர்ந்த விசமியாகாதே...
கயவர்களுடன் சேர்ந்து கள்வனாகாதே
நயவஞ்சகர்களுடன் சேர்ந்து நாசமாகாதே
நல்ல நண்பர்களுடன் சேர்ந்து நல்லவனாயிரு
உயர் குலத்தானாயினும் ஒழுக்கம் தவறின்
அவன் இழிகலத்தானே – அவன்
ஒழுக்கமுடையனோ – அவன்
தெய்வத்திகு ஒப்பாவான் – சோதரா
இப்பொழுதே உணர்ந்து கொள்வாய்
ஒழுக்கம் இழந்து வாழ்ந்தென்ன லாபம்...?
உதிரத்தால் ஓர் சரிதம் எழுதப்படும்
நேரமிது... மதி கெட்டு மானமிழந்து
வாழ்வது தான்முறையோ...? இன்பம்
வந்த காலத்தில் அது நிரந்தரம் என்று
குதியாதே... துன்பம் வந்த போதும்·
துவண்டு விடாதே... ஒழுக்கத்தை
கண்ணெனப் போற்றுவோம்... சோதரா...
இன்னும் ஏன் தயக்கம்... புறப்படுவோம்
வா...உயிரினும் மேலான ஒழுக்கம் காக்க...!

நன்றி!

சி.பரமேஸ்
முகாமைத்துவ பீடம்

*With Best Complements from*

## SEAGULL PROPERTY DEVELOPERS

NO 49, NELSON PLACE,
COLOMBO - 06.
TEL : 555743, 071- 752981, 077-317075

NOW, SEAGULL PROPERTY DEVELOPERS
PRESENT A HOME INVESTMENT OF UNQUESTIONABLE VALUE

# "SEAGULL COURT"

DR. E.A. COORAY MAWATHA AND MOOR ROAD, WELLAWATHA,

THREE ROOM, TWO ROOM APARTMENTS, GUARANTEE OF CLEAR TITLE HIGH CLASS MATERIALS & FITTINGS.

***BOOKINS ARE NOW ACCEPTED***

## மானிடம்

மானிடம்
மரணிக்கவில்லை
மௌனமாய்த்தான் இருக்கிறது
கை கட்டி வாய் புதைத்து
மௌனமாய்த்தான் இருக்கிறது
மானிடம்
மரணிக்கவில்லை

சுரண்டல் வர்க்கத்தின்
கெடுபிடிகளுள்
சிக்கித் தவித்த மானிடம்-அது
சுரண்டப்படாமலேயே
மரணித்து விட்டது
இல்லை! இல்லை!
மௌனமாய் புதையுண்டு போனது
மரணிக்கவில்லை-அந்த
மானிடம்

சாதிக்கொடுமைகளின்
சங்க நாதத்தினுள்
செத்துத் தொலைந்து விட்டதாய்
நிலைத்து விட்டமானிடம்-அது
சாகவில்லை, சாகவில்லை
சங்க நாதத்தில்
அது கேட்கவில்லை மட்டுமே
மானிடம்-அது
மரணிக்கவில்லை

ஏமாற்றுக் காரர்களின்
செப்படி வித்தைகளுள்
வித்தையாய் போய்விட்ட
மானிடத்தை-அது
வித்தை தான் காட்டுகிறது
ஆம்!
மரணிக்கவில்லை-அந்த
மானிடம்

ஆளவந்தோனின்
அட்டகாசத்தினுள்
அடங்கிப்போய்
அமர்ந்துவிட்ட-மானிடம்
அது
ஆடித்தான் போனதே தவிர
மானிடம்
மரணிக்கவில்லை

சுரண்டல் வர்க்கத்தின்
கெடுபிடிகள்
சாதிக் கொடுமைகளின்
சங்க நாதம்
ஏமாற்றுக் காரர்களின்
செப்படி வித்தைகள்
ஆளவந்தோனின் அட்டகாசம்
அடங்கிடவே
ஒரு நாள் வாழப்போகின்ற
மானிடத்திதின் முன்னே
சமுதாயச் சாக்கடைகளெல்லாம்
கைகட்டி, வாய்புதைத்து
மௌனமாய் மடடும் நிற்கப்
போவதில்லை
மானிடத்தின் முன்னே
அவை
நிரந்தரமாய் மரணித்துவிடும்.

ஆக்கம்:- மாதுமை சிவசுப்பிரமணியம்
1ம் வருடம, கலைப்பிரிவு

*With Best Complements from*

PRECISION TECH SERVICES PVT LTD

2, R A DE MEL MAWATHA
COLOMBO 4

கடந்த மே மாதம் எட்டாம் நாள் கொழும்பு பல்கலகழக இந்து மன்றத்தினால் நடாத்தப்பட்ட கலை விழா போட்டி முடிவுகள்.

## கீழ் பிரிவு

***தேவாரம் மனனம்***

1. சு. சர்மளா – சைவ மங்கையர் கழகம்
2. ஜெ. கிருத்திகா – திருக்குடும்ப கன்னியர் மடம்
3. T. துவாரகன் – றோயல் கல்லூரி

***சித்திரம் வரைதல்***

1. சி. சுதர்ஷனா – மெதடிஸ்ட் கல்லூரி
2. க. கௌசல்யா – மெதடிஸ்ட் கல்லூரி
3. க. நிசாந்தி – சைவ மங்கையர் கழகம்

## மத்திய பிரிவு

***பேச்சு***

1. T. அதிஷ்டபிரதா – இராமநாதன் இந்து மகளீர் கல்லூரி
2. N. நிஷாந்தன் – றோயல் கல்லூரி
3. அ. மாதுனம் – திருக்குடும்ப கன்னியர் மடம்

***கட்டுரை***

அ. காயத்ரி – இராமநாதன் இந்து மகளீர் கல்லூரி
Y. திருச்செந்தூரன் – றோயல் கல்லூரி
N. ஜெயதாரனி – விவேகானந்தா கல்லூரி

***திருக்குறள் மனனம்***

A. பிரபா – இந்து மகளீர் கல்லூரி
வி. அருண்யா – மெதடிஸ்ட் கல்லூரி
பா. நித்தியவோஜினி – புனித ஜோன்ஸ் மகாவித்தியாலயம்
ச. சுகந்தினி – விஜயரட்னம் இந்து மத்திய கல்லூரி

## மேற்பிரிவு

***பேச்சு***

1. இ. காயத்ரி – இராமநாதன் இந்து மகளீர் கல்லூரி
2. T. கஜன் – புனித பேதுறு கல்லூரி
3. T. யோகேந்திரன் – றோயல் கல்லூரி

***கட்டுரை***

1. ச. புரந்ததி – திருக்குடும்ப கன்னியர் மடம்
2. இ. வாசுகி – இராமநாதன் இந்து மகளீர் கல்லூரி
3. B. ரமேஷ்கண்ணா – றோயல் கல்லூரி

***கவிதை***

கு. கர்ஷினி – இந்து மகளீர் கல்லூரி
P. S. செந்தூரன் – றோயல் கல்லூரி
S. தஷிந்தி – திருக்குடும்ப கன்னியர் மடம்

*With Best Complements from*

# THIVAGAN COMPANY

GENERAL MERCHANTS & COMMISSION AGENTS FOR
LOCAL PRODUCES

TEL : 328556
208, 4TH CROSS STREET,
COLOMBO : 11.

*With Best Complements from*

# A WELL WISHER

# வண்ணத்தில் என் எண்ணங்கள்

மறவனே

அன்று போர்க்களங்களில்மட்டும்
கூற்றுவனை வென்று
சமர் கொண்ட
மறவா
இன்று சுற்றிவளைப்பில்
உன்னைச் சுற்றியிருக்கும்
சுற்றுமைகளால்
வாடுகிறாய்
கைவிட்டது
பல்லரங்கள்பழக்கப்பட்டதும்
பயணிக்கிறதும் படைக்கலை

மனிதனே

முடிக்கவேண்டுமென
மன உறுதியுடன்
மனிதனே
உன்னில் நீ
இட்டுக்கொண்ட திட்டங்களை
சந்தர்ப்பங்கள் சாத்தியவிடலாம்
மனமுடைந்துவிடாதே
மீண்டு நின்று
முன்னோக்கு
பாய்மரங்கள் கிழிந்தாலும்
ஓய்ந்துவிடாத ஓட்டத்தைப்போல்



தென்றலே

இறுமா சங்கள்
இசைத்துக்கொண்டு
இவ்வுலகும்
நெஞ்சில்
உன்குரல்
இதயத்திற்கு இதமான
இன்னிசையே
தெற்கிலிப
பாய்மரம்வைத்த
பயணங்களா?

கடமை

உன்னை அறிதலும்
உன்னைத் தெரிதலும்
உயிருக்கு உறுதிய
உன்கடமை உணர்வாய்
உன்போல்
மண்ணில்
மனிதர்களும்
மறவேண்டும்

எண்ணங்கள் தொடரட்டும்
நி. சத்தியசுதன்.
விஞ்ஞானபீடம்

*With Best Complements from*

# TRANSMETAL

**IMPORTERS GENERAL HARDWARE MERCHANTS**
**& SUPPLIERS**

***409 - A, OLD MOOR STREET,***
***COLOMBO - 12.***

**TELEPHONE** : 348695 , 435927

---

*With Best Complements from*

# Shangai steels

IMPORTERS & GENERAL HARDWARE
MERCHANTS

384, OLD MOOR STREE,
COLOMBO - 12.
TELEPHONE : 324867, 433875, 439311

*With Best Complements from*

# OPATHA & Co.

13, 15 St.John's Road
Colombo – 11.

---

*With Best Complements from*

கோழும்பு பல்கலைக்கழகத்தின் இந்து மன்ற
கலைவிழா சிறப்புற நிகழ வாழ்த்துகிறோம்

[redacted]

55 [1B] Manning Place
Colombo – 06,
Tel. : 502312

~~~~~~

முதல் தர காகிதாதிகள், அப்பியாசக் கொப்பிகள் என்பவற்றை மிககுறைந்த விலையில் சில்லறையாகவும், மொத்தமாகவும் பெற்றுக்கொள்ள சிறந்த ஸ்தாபனம்.
~~~~~~

*With Best Complements from*

# GARAN TRADERS

**General Merchants & Commission Agents**

~~~~~~~~~~~~~~~

No. 191, 5 th Cross Street,
Colombo – 11
Tel. : 458361.

---

*With Best compliments from*

# EURO LITES

Importers Dealers in Electrical Fittings

~~~~~~~~

**59-1/4, 1st (First) Floor,**
Wickrama Plaza Super Market,
First Cross Street
Colombo – 11.


~~~~~~~

**Tel. : 441769, 424573**
~~~~~~~

*With Best Complements from*

# MEMCO
# ELECTRICALS

## Importers and Dealers in Electricals Goods



116/22 First Cross Street,
Colombo - 11.

Phone : 447485

*With Best Complements from*

**DCS**

DATA CONNECTION SYSTEMS (PRIVATE) LTD.

**DSC COLLEGE OF COMPUTER TECHNOLOGY (Pvt) Ltd.**

Individual
&
Group Classes

The Classes start every month

- **Internet & Email**
- **C++**
- **Visual Foxpro (Ver 5.00)**
- **Diploma in Computer Programming**
- **Diploma in Computer Systems Design**
- **Diploma in Computer Applications.**
- **Autocad**
- **Visual Basic**
- **Pagemaker**
- **Diploma in Data Processing**

Batches

**DCS**
M.P.C.S Building, Station Road,
Vavuniya.

**DCS**
No 399 1/1, Galle Road,
Colombo – 04

**EDMS**
No. 156, Green Road,
Trincomalee.

**DCS**
No 171, Trinco Road,
Batticaloa.

**DCS**
No. 89, Main Street,
Kinniya.

**DCS**
124/2, Palaly Road,
Jaffna.

*With Best Complements from*

JS

# JANATHA STEEL

Importers & General Hardware Merchants
No. 20, Quarry Road, Colombo -12

Tel : 421412, 325807, 338607, 321431
Fax : 345667

- Tor Steels
- B.I.Sheets
- M.S. Sheets
- Flat Iron
- Square Tubes
- M.S. Channel
- M.S. Coils
- Welding Rods
- PVC Sheets
- Rooting felt
- Aluminium Colis & Sheets
- G.I. Wire
- G.I.Pipe
- M.S. Round Tubes
- Gate Channel
- Rooting Sheets
- Square Iron
- Jumber Steels
- Slotted Angles
- Shovel
- Hard Board

*With Best Complements from*

# NITHYAKALYANI JEWELLERY

MANUFACTURERS & EXPORTERS OF GEMS & JEWELLERY

230, GALLE ROAD,
COLOMBO 06,
SRILANKA
TEL: 583392,585427
FAX : 94-1-585944,
EMAIL : nithkal@slt.lk

*With Best Complements from*

# SILICON
## Steel Merchant

320 2/2 Old moor street,
colombo - 12


Telephone : 446482, 435065.
Fax : 446482
Mobile : 071 62934



*With Best Complements from*

# CHAMPION TRADERS

General Hardware Merchants
&
Impoters




307, Old moor street,
colombo - 12.

***Telephone : 421893.***

*With Best Complements from*

# Gobika Tex,



No. 5/4, New Market,
Jaffna.

*With Best Complements from*


# ANUSHA

HERBAL BEAUTY CARE

DISTRIBUTOR
***ORIFLAME***
4/1 - A, HAMERS AVENUE,
COLOMBO - 06,
T.P : 556436

*With Best Complements from*

# MAGSONS SYNTHETIC (TEXTILE) INDUSTRIES



MANUFACTURERS OF RAYON AND SYNTHETIC TEXTILES

121 , KEYSER STREET ,
COLOMBO - 11.

Phone :431614

*With Best Complements from*

## JEYA BOOK CENTRE

IMPORTERS & DISTRIBUTORS OF PRINTED TEXT BOOKS
A WITE RANGE OF SELECTION ON
MEDICAL, ENGINEERING, COMPUTER, MANAGEMENT, SCHOOL TEXT BOOKS,
CHILDREN BOOKS & MANY MORE

91-99 UPPER GROUND FLOOR,
PEOPLES PARK COMPLE X
COLOMBO - 11
TEL : 438227
FAX 332939
EMAIL : jeya@eureka.lk

Branch : 688, Galle Road,
Colombo - 03,
Tel : 580594

---


*With Best Complements from*

# Nithiya Gold House

40/1, 1st Floor, Supper Market, Borella,
Colombo - 8,
Tel : 699303

*With Best Complements from*

# PRECISION TECH SERVICES (PVT)LTD



2,R.A.DESILVA MAWATHA,
COLOMBO -04

*With Best Complements from*

# MASCONS LIMITED

175,SRI SUMANATISA MW,
COLOMBO-12

PHONE:325561-3

FAX:449537

*With Best Complements from*

# J & S Services (Pvt) Ltd

115, Messanger Street,
Colombo - 12,
T.P. : 334557

*With Best Complements from*

# OCEANICK IMPEX

***Authorised Sole Agents for KIBS Products in Srilanka.***
***Importers, Exporters of Textiles and Fancy Items***

192 MAIN STREET,
Colombo - 11,

Tel. : 336720,
327168,
326961

*With Best Complements from*

# UDHEYA & Co. (PTE) LTD

Printers, Stationers & Suppliers

17/18 Negambo Road, Wattala,
Colombo - Srilanka
Tel : 930759, 935873, 932784
Fax : 94-1-935435.

*With Best Complements from*

# ERA2000 COMPUTER SYSTEMS

COMPUTER ASSEMBLING, CD RECORDING, COMPUTER REPAIRS, CONSULTATION HARDWARE & SOFTWARE SOLUCTIONS.INSTALLATION, MOBILE SERVICE GET RID OF ANY KIND OF PROBLEMS.

Suthagar.P
Hardware & Software Specialist
13/14 A, Don Cornelis Ln,
Off Sri Dharmarama Road,
Ratmalana.( T.P. 611863)

Moseh Gunathas(NIBM.Dip)
VB Programmer, Hardware Specilist
System Analyst & Designer
Computer Communication
Mobile No. 0776033:Res : 729028

*With Best Complements from*

# COLONIAL HARDWARE STORES

**IMPORTERS, DISTRIBUTERS & GENERAL HARDWARE MERCHANTS**

---

**427, Old Moor Street, Colombo - 12.**

- **Tel : 431950, 435414, 347981-83-89, 424562, 321144, 075-330778, 075-330768**
- **Fax : 334090**
- **E mail: colonial@slt.lk**

---

138 Sri Sumanatissa Mawatha, Colombo - 12.

- Tel. : 334197,074-710201, 074-610545, 074 610302,
- Fax: 074-610260, E mail : **colonial@slt.lk**

---

369, Old Moor Street, Colombo - 12.

- Tel : 423636, 434794, 435561

---

461, Old Moor Street, Colombo - 12.

- Tel: 338010, 338011

*With Best Compliments from*

# GLOBAL CARE CLINIC

**GENERAL**

- GYNAECOLOGY
- PAEDIATRIC
- SKIN
- SURGERY
- ACUPUNCTURE

**MEDI QUICK (PVT) LIMITED**

- PATHOLOGY LABORATORY SERVICE
- E.C.G
- PHARMACY
- DISPENSARY

**O.P.D 8.30 A.M TO 8.30 P.M**

**EXERCISES(LADIES ONLY)**

**YOGASANAM (BOTH SEX)**

கட்டான உடலை மெட்டாக வடிவமைக்க ஊளைச் சதைகளை குறைக்க சிறந்த இடம். பயிற்ச்சி நேரம் மட்டுப்படுத்தப்பட மாட்டாது.

## PHOTOCOPY BINDING SERVICE

CLINIC TELEPHONE
- * 074510631
- * 074514724
- * 074514819

**MEDI QUICH**
MINI HOSPITAL – 071 – 739393
MINI MOBILE – 071 – 748916

NO – 14 57TH LANE
OFF RUDRA MAWATHA
WELLAWATHA
COLOMBO – 06.

# BRIGTON SYSTEMS INTERNATIONAL

***(Centre for Computer Studies)***

**For Beginners**

***Certificate Courses:***

Microsoft Word
Microsoft Excel
PageMaker
CorelDraw

***Diploma Cources:***

Diploma in Microsoft Office 97/2000
Diploma in Computer Studies
Diploma in Destop Publishing
Diploma in Hardware Technology

**To Become Professionals**

***Certificate Courses:***

Internet & Email
Visual Basic
Turbo Pascal /C++
MS Acess

***Special Courses for Professional :***

Diploma in Visual Programming
Diploma in Internet Programming
Diploma in Computer Programming
And
**Windows NT**

**BRIGTON SYSTEMS INTERNATIONAL(PVT) LTD**
**No. 385 – 2/4, (2nd Floor), Galle Road, Wellawatha, Colombo – 06.**
**Phone : 077 – 303813**

Get done your typesetting and printing work at reasonable rates

*With Best Complements from*

# AHBHI IMPEX

## Dealers in
## Textiles, Fancy and Electronics Goods

No. 165/A 10, City Paradise
Super Market Street,
Colmbo – 11.

Tel : 074 - 717290
Hot : 072 - 280594
Res : 594693

---

*With Best Complements from*

# CHARIOT
# FAST FOOD
# CHARIOT RESTAURANTS, (PVT) LTD.

Chariot Mobile Unit Available For
SPORTS EVENTS, MUSCIAL SHOWS,
CARNIVALS, ETC
ORDERS AND DELIVERIES FOR
PARTIES AND
FUNCTIONS UNDERTAKEN.

**HEAD OFFICE**
308, Galle Road,
Colombo 4.
Tel : 580569/595761
Fax : 582272

**Branches**

Majestic City Complex
Liberty Plaza Complex

*With Best Complements from*

# MAURA DHARM

## PHARMACY & GROCERY

HAVELOCK ROAD, (MAURA PLACE)
COLOMBO – 06
: 594841, 592859 (RES.)

---

*With Best Complements from*

# VMAS PRINTER

***QUALITY OFFSET PRINTER & CARTON MAKERS***

282, WOLFENDHAL STREET,
COLOMBO - 13,
TEL.: 431588
347880

*With Best Complements from*

# REAGAL ENTERPRICE

DEALERS IN :

FANCY GOODS STATIONERIES, ELECTRICALS GOODS,
EVERSILVERWARES, NEWS AGENTS & PAWN BROKERS

79, MAIN STREET,
HATTON

# K.P.N NALLUSAMY & CO

7, MAIN STREET,
NORTON BRIDGE
ESTD: 1940
T.P. 05132204
FAX 32277

*With Best Complements from*

# MURALI COMMUNICATION

**I.D.D., LOCAL CALLS,**
**FAX MASSAGE, SPIRAL BINDING,**
**PHOTO COPYING LAMINATING**

18/5, DUNBAR ROAD
HATTON
TEL : 051 22042
FAX : 051 22041

# Invest your thankfulness

We wish to express our deep grirititude and our since thanks to.....

* Our vice chanceller Prof Mrs. Savithiri Gunasekara for all her encouragements,support and for honouring us by accepting and invitation and gracing the occasion

* Our senior treasurer Prof Mrs Y. Rasanayagam forn all her ready guidanec , encouragement , support and her unstinted help extended to us

* Our honorouble special guest Mr balakumaran from India for being so thoughtful and so kind as to spend his precious time with us and honour us with your presence for all three days .

* All the professers .lecturers , acadamic staff and contributors in various ways

* All distinguised guests and invities for honouring us with their kind presence and who we hope enjoyedthe programms.

* All producers of varies programs in the show

* All religions ,heads and who have given inspiring messages including Prof .Mr .Gnanasambanthan, Prof. Mr. Chandrasekaran, Mr Aruthirumugan, Kambavarithi Mr Jeyaraj.

* All participants who took part in various programmes and complifiers

* Our priters for doing such and excellent job by printing ,the souvenior cover ,invitation cards and certificates

* Last but not least we thank all others who made numerous invaluable contributions to whom are greatful

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு

என்னும் வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பது தமிழனின் விழுமியங்களில் ஒன்றாகும்

இந்து தீபத்தை ஒளியேற்ற ஆதரவு தந்த அனைத்து தரப்பு மக்களுக்கும் எங்கள் உளம் சார்ந்த நன்றிகள் என்றும் உரித்தாகும்.

இந்து மன்றம் கொழும்பு பல்கலைக்கழகம் வணக்கம்.MEMBERS OF THE HINDU SOCIETY

BEST WISHES

# HINDU SOCIETY

# UNIVERSITY OF COLOMBO

Best Wishes From :

# Kavitha Stores

NO.5, BUS STAND,
VAVUNIYA.

Best Wishes From:

# HINDU SOCIETY

Best Wishes
From



**East West Information Systems Ltd**

Methodist Central Building,
252, Galle Road,
Colombo 03.

PRINTED BY - JEYA OFFSET PRINTERS,
TEL - 478444